கல்கி



ALKI 26-4-1959

30 நயா பைசா




கல்கி
பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

'ஹிந்த்' உலகைச் சுற்றி பவனி வருகிறது

மிஷ்ரிலால் ஹிந்த் ஸைக்கிளில் 93,000 மைல்கள் சவாரி செய்தார்



இந்தியாவிலிருந்து புறப்பட்டு, ஒரு ஹிந்த் ஸைக்கிளின்மேல் சவாரி செய்து, புகழை அடைந்தார் மிஷ்ரிலால் ஜைஸ்வால். உலகைச் சுற்றும் மிஷ்ரிலால், மிக்க கிளர்ச்சியூட்டும் உலக நகரங்களில் மொம்பாஸா, பீரூட், மாஸ்கோ, லண்டன், நியூ யார்க், ரயோடி ஜனீரோ, டோக்கியோ போன்ற சில வற்றின் வழியாக சவாரி செய்திருக்கிறார்.

நான்கு கண்டங்களில், தாம் செய்த துணிகரமான பிரயாணத்திற்கு ஒரு ஹிந்த் ஸைக்கிளைத்தான் மிஷ்ரிலால் நம்பினார். வலிமை, சக்தி, பளுவின்மை, நம்பக்கூடியதன்மை, மறுமறுப்பு ஆகிய யாவும் விசேஷமாய் ஒருங்கேயமைந்த காரணத்துக்காகவே அதைத் தேர்ந்தெடுத்தார்.

இந்தியா திரும்பியதும், ஸைக்கிள் நிபுணர் மிஷ்ரிலால் (ஹிந்த் ஸைக்கிள்ஸ் லிமிடெட் தயாரிப்பான) அட்மிரல், நார்டன் ஆகிய புதுமாடல்களை மிக நுட்பமாக ஆராய்ந்தார். பின் உற்சாகத்தோடு தம் அங்கீகாரத்தை அளித்தார்: "நான் எங்கேயும் பார்த்த மிகச் சிறந்த ஸைக்கிள்களுக்கு ஈடானவை."

நார்டன் அல்லது அட்மிரல் மீது சவாரி செய்து, மிஷ்ரிலால் ஜைஸ்வாலுடன் அவற்றின் உன்னத தரத்தை அனுபவியுங்கள்.

ஹிந்த் ஸைக்கிள்ஸ் லிமிடெட் 250 வொர்லி பம்பாய் 18



மலர் 18 இதழ் 39	தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்	விகாரி௵ சித்திரை௴ 13

இதற்கு என்ன அவசியம்?

தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த நேருஜி ராஜபாளையத்தில் பேசிய போது பின்வருமாறு கூறினார் :

"செல்வத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கும் சோஷலிஸத்தைப் பற்றித் தற்சமயம் பேசாமலிருப்போமாக. ஏனெனில் நம் நாட்டில் செல்வம் இல்லை. வறுமை தான் இருக்கிறது. பங்கிட ஆரம்பித்தோமானால் வறுமையைத்தான் பங்குபோட்டுக் கொடுக்க நேரும். முதலில் நாம் செய்ய வேண்டியது என்ன வென்றால் செல்வத்தைப் பெருக்க வேண்டும்; சுபிட்சத்தைப் பெருக்க வேண்டும். பிறகு பகிர்ந்து அளிப்பதைப் பற்றி நினைக்கலாம்."

அற்புதமான கருத்து. இதைத்தான் ராஜாஜியும் ஓயாமல் சொல்லி வருகிறார். முதலில் நாட்டில் செல்வத்தைப் பெருக்குவோம். பின்பு பங்கு போடுவதைப் பற்றிச் சிந்திக்கலாம் என்கிறார்.

இப்படிப் பேசிய நேருஜி, நிலங்களுக்கு உச்சவரம்பு கட்ட வேண்டும் என்று சொல்வானேன்? அதற்கு என்ன வந்தது இப்பொழுது அவசியம்?

இப்பொழுது நிலம் வைத்திருப்பவர்கள், தங்கள் நிலத்தை உழுது பயிரிடாமல் வைத்திருக்கிறார்களா? உணவு தான்யத்தை உற்பத்தி செய்யாமல் இருக்கிறார்களா?

அல்லது விலைவாசி குறையாமல் இருப்பதற்காகத் தங்கள் நிலத்தில் விளைந்ததை எரித்து வருகிறார்களா? அன்றிக் கடலில் கொண்டு போய்க் கொட்டி வருகிறார்களா? இல்லையே!

அல்லது நிலத்துக்கு வேண்டிய எரு, காளை மாடு, யந்திரங்கள் முதலியவை வாங்கக் கூடிய சக்தியுள்ளவர்கள் கையிலிருந்து நிலத்தைப் பிடுங்கி, நிலமில்லாத உழவர்களுக்குக் கொடுப்பதால் உற்பத்தி பெருகிவிடப் போகிறதா?

எத்தனை பேருக்குச் சொற்ப உபரியைப் பங்கிட்டுக் கொடுக்க முடியும்? நிலத்தை விடப் பொறுமையைத்தான் வழங்குவோம். தனி நபர்களுக்குக் கொடுக்காமல் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி அவர்களிடம் ஒப்புவித்து விடும் யோசனையாக இருந்தால், நிலச் சொந்தக்காரன் பயிர் எடுப்பதில் காட்டும் அக்கறையைவிட, கூட்டுறவு விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த கும்பல் அதிக அக்கறை காட்டிவிடப் போகிறதா?

கூட்டுறவு விவசாயத்தினால், பழைய சாகுபடி முறைக்குப் பதில் மேல் நாடுகளைப் போல் புது யந்திரச் சாகுபடி முறைகளை நம்முடைய நாட்டில் கையாள வசதிகள் இருக்கின்றனவா?

எரு, நல்ல விதை, விவசாயக் கருவிகள் முதலியவைகளைப் பெறக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தினால் நல்ல பயன் உண்டு என்பதில் சந்தேகமில்லை. விவசாய இலாக்காவே இந்தப் பணியைச் செய்து கொண்டும் போகலாம். ஆனால் விவசாயத்துக்கே, அதாவது நிலத்தில் இறங்கி உழுது வேலை செய்வதற்கே கூட்டுறவு முறையைப் புகுத்தினால் யாருக்கும் அக்கறையில்லாமற் போய் விளைவு நிச்சயமாகக் குறைந்துபோகும்!

ஆகவே இவையெல்லாம், நாட்டின் செல்வம் பெருகுவதற்குப் பதில் செல்வம் பெருக்கைக் குறைக்கும் முறைகள் அல்லவா? முதலில் தீர்க்க வேண்டிய பிரச்னை - உணவுப் பிரச்னை. அதற்கு நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

உற்பத்தியைப் பெருக்கப் பரம்பரையாக விவசாயத்துறையில் ஈடுபட்டவர்களின் பரிபூரண ஒத்துழைப்பும் உற்சாகமும் வேண்டும். அவர்கள் வாழ்க்கையை ஊசலாட

விடும் முறைகளைப் பற்றி இப்பொழுது சிந்திக்கவே கூடாது. அவர்கள் வாழ்க்கை பாதிக்கப்படாது என்ற நம்பிக்கை யூட்டினால் தான் அவர்கள் விவசாயத்தில் கவனம் செலுத்த முடியும்!

ஏற்கனவே, காங்கிரஸின் நிலக்கொள்கை, நாகபுரி தீர்மானங்கள் முதலியவை ரயத்துவாரி நிலம் படைத்தவர்களை யெல்லாம் பெரும் பீதிக்கு ஆளாக்கி விட்டன. அவர்கள் வாழ்க்கையில் நம்பிக்கை யிழந்தவர்களாக, 'இன்றையப் பொழுது போயிற்று, நாளை என்ன வருமோ?' என்ற பயத்தில் தற்போது வாழ்ந்து வருகிறார்கள். விவசாயத்தில் உற்சாகம் குன்றி யிருக்கிறார்கள். கையிலுள்ள நிலத்தை யாருக்காகிலும் விற்று விட்டுக் கிராமத்தை விட்டு ஓடிவிடப் பார்க்கிறார்கள்.

முதலில் இவர்கள் வாழ்வில் அமைதியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கும் வழிகளைக் காண முற்பட வேண்டும்.

ஆகவே, உச்சவரம்பு யோசனையை விட்டுவிட வேண்டும். விட்டு விட்டதாக உடனே மக்களுக்கு அறிவித்தால் விவசாயத்தில் ஊக்கம் பன்மடங்கு பெருகும்.

டல்லஸ் விலகினார்!

உலகில் எந்தப் பகுதியில் என்ன நடந்தால் என்ன என்று சும்மா இருக்கக் கூடிய காலம் அல்ல இது. உலகில் எந்தப் பகுதியில் என்ன மாறுதல் நிகழ்ந்தாலும் அதை யொட்டி நமக்குச் சந்தோஷமோ, வருத்தமோ ஏற்படத்தான் செய்கிறது. நம் வாழ்க்கையைப் பாதிக்கத்தான் செய்கிறது. அதிலும் அமெரிக்காவில் ஒரு முக்கியமான மாறுதல் என்றால் அதைப் பற்றி நாம் நம் உணர்ச்சியைச் சொல்லாமல் இருக்க முடியுமா?

அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கி வந்த ஜனாதிபதி ஐஸன்ஹோவரின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய நண்பர் ஜான் பாஸ்டர் டல்லஸ் தேக அசௌக்கியம் காரணமாகப் பதவியிலிருந்து விலகி ஓய்வெடுத்துக் கொள்கிறார் என்ற செய்தியைக் கேட்டு, பனிப் போரில் ஈடுபடாத நாடுகளெல்லாம் உள்ளத்தில் அநேகமாக சந்தோஷமே அடைந்திருக்கின்றன! அவர் தேக அசௌக்கியத்தைப் பற்றி வருத்தமுற்றாலும், 'அமெரிக்க வெளிவிவகார மந்திரி போனார்' என்ற முறையில் சந்தோஷப் படுகின்றன.

உலகில் பனிப்போர் சென்ற சில ஆண்டுகளாகக் கடுமையாகி வந்ததற்குக் காரணம் டல்லஸின் செய்கைகளும், கூற்றுக்களும்தான் என்பது உலகப் பிரசித்தம்.

"உலகத்தை யுத்த அபாயம் வரைக்கும் கொண்டு போய் விட்டு, பிறகு மெள்ள அந்த அபாயத்திலிருந்து பின்னுக்கு இழுத்து வருவதுதான் அமெரிக்க வெளிநாட்டு ராஜதந்திரம்!" என்று சொன்னார் டல்லஸ் ஒரு சமயம். அந்தப் பயங்கர ராஜதந்திரம் டல்லஸோடு முடிய வேண்டும் என்றுதான் உலகம் ஆசைப்படுகிறது.

மற்றொரு சமயம் டல்லஸ், இந்தியாவிலுள்ள கோவா போர்ச்சுக்கீசிய ராஜ்யத்தின் மாகாணம் என்று குறிப்பிட்டார்! போர்ச்சுகல் எங்கே யிருக்கிறது! கோவா எங்கேயிருக்கிறது! இருந்தாலும் இந்திய மக்களிடம் தமக்குள்ள கசப்பைக் காண்பித்துக் கொள்வதற்காக வேண்டி, அமெரிக்க மக்களின் பண்புக்குச் சற்றும் ஒவ்வாத முறையில், தமது ராஜதந்திர சாமர்த்தியத்தைக் காண்பித்துக்கொள்ள மேற்கண்டவாறு கூறினார். இது இந்தியாவில் மட்டுமல்ல; இந்தியாவிடம் அன்பும் நேசமும் கொண்டுள்ள அத்தனை நாடுகளுக்கும் அமெரிக்காவிடம் மனக்கசப்பை உண்டாக்கி விட்டது!


உலகின் காற்றையும் நீரையும் விஷமயமாக்கி எதிர்கால மக்களின் வாழ்வைப் பாதிக்கும் அணு ஜலஜ குண்டு சோதனைகளை அறவே நிறுத்தவும், உற்பத்தியைத் தடுக்கவும் இரண்டு வல்லரசுகளும்கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வர ருஷ்யா பல வாய்ப்புக்கள் அளித்தும், அமெரிக்கா டல்லஸின் ஆலோசனையின் பேரில் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறது. இவ் விஷயத்தில் தன் அந்தரங்க சுத்தியைக் காண்பித்துக் கொள்ள ராஜாஜியின் யோசனையின் பேரில் ருஷ்யா அமெரிக்காவை எதிர்பார்க்காமல் ஒருதலைப்பட்சமாக ஆறுமாத காலம் ஜலஜ குண்டு சோதனைகளை நிறுத்தி வைத்திருந்தது. அப்போதும் டல்லஸ் ருஷ்யாவை நம்ப மறுத்தார்.

அணுகுண்டு பலத்தில் அமெரிக்கா ருஷ்யாவை மிஞ்சியிருந்தபோது செய்து கொண்ட பாட்ஸ்டாம் உடன்படிக்கை, மால்டா உடன்படிக்கை இவற்றை யெல்லாம் ருஷ்யா நிறைவேற்றவில்லை யென்று குற்றம் சாட்டி ருஷ்யாவின் வார்த்தையை இன்றும் நம்பவே மறுக்கிறது.


ருஷ்ய ஆட்சி முறையில், மனப்போக்கில் பெரும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை டல்லஸ் அங்கீகரிக்கவே மறுத்து வந்தார்.

இப்படி உலகில் நிரந்தரமான அமைதி ஏற்படக் குந்தகமாக இருந்த டல்லஸ் கடும் நோய்வாய்ப்பட்டு விலகியிருக்கிறார். இது அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் புதிய கண்ணோட்டம் வேண்டும் என்பதற்காக ஆண்டவனே செய்த ஏற்பாடு என்று நினைத்து நடந்து கொள்ள வேண்டும். அஃதன்றி, பழைய போக்கிலேயே போய்க் கொண்டிருந்தால் அமெரிக்காவுக்கும் நஷ்டம்; உலகத்துக்கும் நஷ்டம்.

கோடை வாசம்!



சென்னை சட்டசபை உதகமண்டலத்தில் கூடுவதை எதிர்க் கட்சிகள், மேற்கண்ட முறையில் நினைத்துத் தங்களுக்குள் மகிழ்ச்சியடையலாம்!



பாகிஸ்தான் படு(த்து)ம் பாடு

பாகிஸ்தானின் உள்நாட்டு விஷயங்கள் முக்கியமாகப் பாகிஸ்தானைச் சேர்ந்தவை. அவை பாகிஸ்தானின் சொந்த விஷயம். அண்டை நாடாக இருந்தாலும் இந்தியா அவைகளைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டாம் என்பது சீரிய கொள்கை. அதைத்தான் நாம் கடைப்பிடித்து வருகிறோம்.

ஆனால் அங்கு நடைபெற்று வரும் காரியங்களைக் கண்டு நாம் வருத்தப்படாமல் இருக்க முடியாது. ஜனநாயகம் அங்கு ஒழிந்து விட்டதற்காகவோ, ராணுவ ஆட்சி நடப்பதற்காகவோ நாம் கவலைப்படவில்லை. அது அவர்கள் விஷயம். நமக்குக் கவலை தரும் விஷயங்கள் வேறு பல.

பாகிஸ்தானின் ராணுவச் செலவு வருஷா வருஷம் உயர்ந்து கொண்டே போகிறது. உள்நாட்டு பந்தோபஸ்துக்காகத் தேவைப்படும் அளவுக்கும் மீறி, வெளிநாட்டுப் படையெடுப்புக்கும் தயாராக இருக்கும் அளவுக்குப் பாகிஸ்தான் ராணுவம் வளர்ந்திருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

இதற்குப் பலமளிப்பதுபோல் அமெரிக்காவிடமிருந்து பெருமளவில் நவீன ராணுவ தளவாடங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, ராணுவ நிலையங்களும், போக்குவரத்துப் பாதைகளும் விமான தளங்களும் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு அமெரிக்காவும் பாகிஸ்தானும் எந்தவிதமான சமாதானம் கூறினாலும் ராணுவம் விரிவாகப் பலமடைந்து வருவது சந்தேகமற்ற விஷயம்.

இவ்வாறு அசாதாரண பலம் பெற்ற நாடு ராணுவ ஆட்சியின் கீழ் ஆளப்பட்டு, அண்டை நாடான இந்தியாவுடன் துவேஷ மனப்பான்மையுடனும் வளர்ந்து வந்திருப்பதால், இந்நிலையைக் கண்டு கலக்கமடைய நேருகிறது. கோதா சாலையில் குஸ்தி பழகும் படைவீரன் பொழுது போக்குக்காக மட்டும் அப்பியாசம் செய்கிறான் என்றால் இந்தக் கூற்றை ஒருவரும் நம்ப மாட்டார்கள்.

சமீபத்தில் நடந்த இரண்டு சம்பவங்கள் பாகிஸ்தானைப்பற்றி நாம் கவலை கொள்ளும் நிலைமையை உண்டாக்கியுள்ளன. பத்திரிகை சுதந்திரம் அங்கே பறி போய் விட்டது. பாகிஸ்தானின் மூல புருஷர் ஜின்னாவால் ஆரம்பித்து நடந்து வந்த 'பாகிஸ்தான் டைம்ஸ்' என்னும் பத்திரிகை இனி ராணுவ அதிகாரி ஒருவருடைய மேற்பார்வையில், அவருக்கு எது விருப்பமோ அதை மட்டும் எழுதி, விரும்பாதவற்றை விட்டு விட்டு, நடந்து வரும். இதுபோலவே பாகிஸ்தானில் வெளிவரும் பத்திரிகைகளெல்லாம் ராணுவ ஆட்சிக்கு இசைவாகச் செயல் புரியவில்லையானால் எந்த நிமிஷத்திலும் ஆட்சியாளரே பத்திரிகை நடத்தும் பொறுப்பை மேற்கொள்ளுவர் என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ஜனநாயகம் ஏற்கனவே அங்கே வேகமாக மறைந்து கொண்டிருக்கிறது. பத்திரிகை சுதந்திரமும் இப்போது மறைந்து விட்டபடியால் பாகிஸ்தானைப் பற்றிய உண்மைச் செய்திகள் கூட இனி வெளி நாடுகளுக்குக் கிடைக்க வகையில்லை. எந்தச் செய்தி வந்தாலும் ராணுவ ஆட்சியினரின் தணிக்கைக்குட்பட்டுத்தான் வெளி வரும். ஜனநாயகத்தில் பற்றுள்ள இதர நாடுகளில் முக்கியமாக, நம் நாட்டில், இம்மாதிரிப் போக்கைப் பற்றி வருந்தாமல் இருக்க முடியாது. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் யுத்த காலங்களில்தான் நிகழும்.

இந்திய ராணுவத்தைச் சேர்ந்த "கான்பெர்ரா ஜெட்" விமானம் 50,000 அடி உயரத்தில் பாகிஸ்தானால் சுட்டு வீழ்த்தப்பட்டது நமக்குக் கவலை தரும் மற்றொரு சம்பவம். நிராயுதபாணியாக இருந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்துவது அக்கிரமமான செய்கை என்பது ஒருபுறமிருக்க, அமெரிக்காவிடமிருந்து உதவியாகப் பெற்றுள்ள தளவாடம் இக்காரியத்துக்கு உபயோகப் படுத்தப்பட்டது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விஷயம். இதை ராஜதந்திர முறையில் மழுப்பிவிட அமெரிக்காவும் பாகிஸ்தானும் முயன்றாலும், இந்தியா கடைப்பிடித்து வரும் நடுநிலைமைக் கொள்கைக்கு ஆபத்து விளைவிக்கும் சம்பவம். அமெரிக்காவின் தலையீட்டினால் என்ன விபரீத விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை நாம் பல தடவைகள் எடுத்துச் சொல்லியும் அமெரிக்காவின் பிடிவாதக் கொள்கை தளருவதாகக் காணவில்லை.

தானியக் கொள்முதல்

இரண்டு லட்சம் டன் அரிசி இவ்வருஷம் கொள்முதல் செய்து கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்; அதற்காகச் சர்க்காரே நேரடியாக இவ்வியாபாரத்தில் தலையிட வேண்டும் என்று திட்டமிடப்பட்டு அமுல் நடக்கிறது. விலைவாசிகள் ஏறிக்கொண்டே போவதைத் தடுக்க இந்த நடவடிக்கை அவசியம் என்று காரணம் சொல்லப்பட்டது. இதற்காக விலைகளின் வரம்புகளும் நிர்ணயிக்கப்பட்டன. நடவடிக்கை ஆரம்பித்து இரண்டு மாதங்களுக்கு மேலாகியும், நாலில் ஒரு பங்குகூட இன்னும் கொள்முதல் செய்யப்படவில்லை. விலைவாசிகளும் முன் இருந்ததைக் காட்டிலும் சர்க்கார் தலையீட்டினால் உயர்ந்து விட்டன. நெல் விளையும் கிராமப் பகுதிகளில் இந்த நிலைமையென்றால் கிராமங்களை நம்பி வாழும் நகரங்களில்

நல்ல அரிசி கிடைப்பது அரிதாகி விட்டது. விலை உயர்வோ கேட்க வேண்டாம்!

எதிர்பார்த்த பலன் கிடைக்கா விட்டாலும் விபரீத பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. வழக்கமாகச் சந்தைக்கு விற்பனைக்காக வரும் நெல் நின்று விட்டது. இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு இதையே ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள பல வர்த்தகர்கள் வேலையின்றித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். தென் கோடியிலுள்ள மதுரையில் காணும் இந்த நிலை தான் வடக்குக் கோடியிலுள்ள ஆரணி, வேலூர் முதலிய இடங்களிலும் காணப்படுகின்றன. நெல் அரைக்கும் மில்காரர்களின் நிலை இன்னும் பரிதாபம். அவர்களிடமும் விற்பனைக்கு உபரி தானியங்கள் கிடைப்பதில்லை.

இதைப் பற்றிப் பல பகுதிகளிலிருந்தும் அவலக் குரல்கள் கேட்கத் தொடங்கியுள்ளன. மகஜர்களும் சமர்ப்பிக்கப்படுகின்றன. பரவலாக மக்களிடையே புதிதாக ஏற்பட்டுள்ள இந்தச் சீர்கேடான நிலைமையைக் கவனித்துப் பரிகாரம் தேடுவது இன்றியமையாதது. சர்க்கார் தாங்களே நேரடியாகக் கொள்முதல் செய்வது என்ற கொள்கையை முதலில் கைவிட வேண்டும்; சென்னை சர்க்கார் இவ் வருஷம் உணவு உற்பத்தி அபரிமிதமாகப் பெருகி விட்டது என்று சொல்லி வந்தது. உண்மையிலேயே நமது ராஜ்யத்தில் உணவு தானிய உற்பத்தி அதிகமாயிருந்தால் சர்க்கார் தலையீடும் லைசென்சு முறைகளுமின்றியே நிலைமை கட்டுக்கடங்கி இருக்கும். எப்போதும் போலவே வர்த்தகமும் நடைபெறும். புதிதாக வியாபாரிகளிடையே ஏற்பட்டுள்ள வேலையில்லா நிர்ப்பந்தமும் குறையும். விலைவாசிகள்கூடக் குறைய வாய்ப்புண்டு.

இரண்டு பிரதமர்கள்

பாரதப் பிரதமர் நேருஜியிடம் தமிழகத்தின் திரையுலகப் பிரதமர் சிவாஜி கணேசன் ஒருலட்சம் ரூபாயுள்ள பேழையை வழங்கிய காட்சியையே இவ்வார அட்டை அலங்கரிக்கிறது. அவரது கொடை உள்ளத்தை நாம் மனமாரப் பாராட்டுகிறோம். அந்த நன்கொடையைப் பாரதப் பிரதமர் நேருஜியிடம் கொடுக்கும் அரும் பேற்றை அவர் அடைந்ததைக் கண்டு மகிழ்கிறோம்.

திரு சிவாஜி கணேசன், சாதாரண மேடை நடிகராக வாழ்க்கையைத் தொடங்கி, இன்று திரையுலகிலே முதல் தரமான நடிகர் என்ற பெயர் எடுத்திருக்கிறார். உணர்ச்சிப் போக்கில் பேச வேண்டிய பாத்திரமாயினும், மெல்லிய வார்த்தைகள் பேசி அமைதியாக நடிக்க வேண்டிய பாத்திரமாயினும், பேச்சே யில்லாமல் கைகொடிப்பினால், அங்க அசைவுகளினால், முக பாவத்தினால் பேச வேண்டிய பாத்திரமாயினும் சிவாஜி கணேசன் அத்தகைய பாத்திரங்களை ஏற்றுத் திறம்பட நடித்திருக்கிறார். அதனாலேயே நாடகக் கலையில் மிக நுட்பங்களையெல்லாம் அறிந்து ரஸிக்கும் 'ஹிரிடிக்கு'களாக இருப்பவர்களும் பாமர மக்களும் சிவாஜி கணேசன் நடிப்பில் பெரும் மோகம் கொண்டிருக்கிறார்கள்.

மனோகராவில், சிவாஜி கணேசன் மூச்சு விடாமல் உச்ச ஸ்தாயியில் பேசிய பேச்சைக் கேட்டுப் பிரமித்த மக்கள், சம்பூரண ராமாயணத்தில் பரதனைத் தோன்றிக் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு மற்றொரு கையால் "போ! போ!" என்று ஜாடை காட்டிய அந்த நடிப்பைக் கண்டு சொக்கிப் போனார்கள்.

இந்த அபார நடிப்பு, வெற்றுப் பாராட்டுரைகளை மட்டும் சிவாஜி கணேசனுக்கு நல்காமல் ஏராளமான பணத்தையும் அவருக்கு வழங்கி யிருக்கிறது.

பணம் படைத்தால்மட்டும் போதுமா? அதைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் மகிழும்படி செலவழிக்கும் மதியையும் பெற்றிருப்பது தமிழ் மக்களின் பாக்யம்.

சென்னை கார்ப்பொரேஷன் குழந்தைகளுக்குப் பள்ளிகளில் மத்தியான வேளை இலவச உணவு அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறது. அந்த மதிய உணவு நிதிக்காகச் சிவாஜி கணேசன் இந்த ஒரு லட்ச ரூபாய் வழங்கி, ஏழைகளுக்குப் பெரும் உதவி புரிந்திருக்கிறார். அவர் வாழ்க! அவர் கொடையுள்ளம் வாழ்க!!

என்ன சேதி?

தோல்வியும் நல்லதே!

படித்தவர்களும், திறமைசாலிகளும் காங்கிரஸ் அபேட்சகர்களாக நிற்க முன் வராததே காங்கிரஸ் தோற்றதற்குக் காரணம் என்று திரு காமராஜ் அவர்கள் சொன்னார். இந்தக் கூற்றைக் கேட்டுப் பலருக்குப் பலவிதமான அபிப்பிராயங்கள் எழலாம். நம்மைப் பொருத்த வரையில் பெருமகிழ்ச்சி யடைகிறோம்.

ஏன் படித்தவர்களும் திறமைசாலிகளும் நிற்க முன்வரவில்லை என்பதை ஆராய வேண்டும். காங்கிரஸிலுள்ள குறைகளைக் கண்டு விலகி நிற்கிறார்களா அல்லது, அவர்களுக்குக் காங்கிரஸில் இடமில்லை என்று பயந்தே நிற்கிறார்களா? இவற்றையெல்லாம் ஆராய்ந்து குறைகளைத் தலைவர்கள் நீக்கினால் இந்தத் தோல்வியினால் நன்மையே உண்டானதாகக் கொள்ளலாம். இனியாகிலும் காங்கிரஸில் படித்த

வர்களையும், திறமைசாலிகளையும் நேர்மை யாளர்களையும் வருந்தி அழைத்துச் சேர்த்துக் கொண்டால் நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் அடைந்த தோல்வி, தோல்வியே அல்ல—வெற்றிதான்!

ராமர் விழா

ஸ்ரீ ராமநவமி உற்சவம் ராமன் பிறந்த அயோத்தியிலிருந்து, ராவணன் ஆண்ட இலங்கைவரை எல்லா மக்களும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். இதைப் பார்க்கும்போது மக்களுக்கு ராம பிரானிடம் ஒரு புது பக்தி அளவுகடந்து ஏற்பட்டுப் பெரும் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

எங்கே ராமநவமி உற்சவம் நடந்தாலும், அதை ஆரம்பித்து வைக்க ராஜாஜியைத்தான் அழைக்கிறார்கள். அப்படி அழைப்பது நியாயமே. ராஜாஜியின் வயதையும் தேகநிலையையும் எண்ணினால் அவரால் அத்தனை இடங்களுக்கும் போக முடியுமா? எனினும் இவ்வருஷம் ராஜாஜி சென்னையில் நடந்த ராமநவமி உற்சவங்களில் இரண்டில் மட்டும் கலந்து கொண்டார். சென்னை தியாகராயநகர் துரைசாமி தெருவில் சிம்ஸன் கம்பெனி டைரக்டர் ஸ்ரீ வெங்கடராமய்யர் அவர்களின் மேற்பார்வையில் உற்சாகமாக நடைபெற்று வரும் ராமநவமி உற்சவத்தை ராஜாஜி துவக்கி வைத்தார்.

"ராமனைப்போல் ஒவ்வொருவருமே வாழ முடியும். அந்தத் தியாக வாழ்க்கையை, அந்த அன்பு வாழ்க்கையை, தர்மத்தில் உறுதியாக நிற்கும் பான்மையை யாருமே சிறிது முயற்சி செய்தால் கடைப்பிடிக்கலாம்!" என்று அறவாழ்க்கை நடத்த ஊக்கும் வகையில் பேசினார் ராஜாஜி.

சென்னையில் தொழிலாளர் நிரம்பிய சூளைப் பட்டாளப் பகுதியில் ராமபக்தி அற்புதமான முறையில் உருவெடுத்திருக்கிறது. ஆஞ்சநேயர் கோயிலின் கோபுர வாயில் கதவைப் புதிதாக அமைத்து அதை ராஜாஜியைக் கொண்டு திறக்கச் செய்திருக்கிறார்கள்! இந்த யுகத்திலும் கோயில் பணிபுரியும் வழக்கம் இருந்து வருகிறது என்பது தெய்வபக்தி கொண்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய விஷயமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நமக்கு ரஸமான கடிதம் ஒன்று வந்திருக்கிறது. சென்ற வாரக் கல்கி அட்டை ராமர் திருவுருவம் தாங்கி வரும் என்று எதிர்பார்த்த ஒரு அம்மையார், தலாய் லாமாவின் உருவத்தைப் பார்த்து எப்படிச் சமாதானம் செய்து கொண்டார் என்பதைக் கூறியிருக்கிறார்:—

19-4-59 கல்கி இதழில் திபெத் நாட்டின் மனிதத் தெய்வமாகக் கருதப்படும் தலாய் லாமாவின் உருவப்படம் அட்டையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. ராமநவமி உத்ஸவத்தைக் கொண்டாடும் சமயத்தில் பௌத்த மதத்தைச் சேர்ந்தவரை அட்டைப் படத்தில் தேர்ந்தெடுத்தது இவ்வாரம் "ராமநவமியா" அல்லது "லாமநவமியா" என்ற சந்தேகம் வந்து விட்டது. இந்தச் சந்தேகத்தை ஒரு சிறந்த அறிஞரைக் கேட்டும் விட்டேன். அவர் கூறியதாவது: "ஸயாம் கம்போடியா பிரதேசங்களில் மிகவும் உயர்ந்த பதவி வகிப்பவர்களையும் அரச பதவியிலிருப்பவர்களையும் "ராமா" என்று அழைப்பார்கள். திபெத்பாஷையிலும், சைனபாஷையிலும் ரகாரம் கிடையாது. 'ர' வரும் இடங்களில் அது 'ல' வாக மாறி விடும். திபெத் நாட்டின் புத்தாண்டவ இளைஞர் ஸ்ரீ ராமனைப் போல் ஒரு அரசுக்குரிய உயர்ந்த ஸ்தானத்தை வகிப்பவராதலால் 'தாசம் ராமா" என்பதை அவர்கள் "தலாய் லாமா"வாக அழைக்கக் கூடும். ராமநவமி லாமநவமியாக இருக்கலாம். அதற்காக நீ வருத்தப்பட வேண்டாம்" என்று சிறந்த முறையில் சமாதானம் சொன்னார். கல்கியைச் சேர்ந்தவர்கள் எந்த அபிப்பிராயத்தில் இதை அட்டைப்படமாக வெளியிட்டிருந்தாலும் எழுத்ததிகார ஆராய்ச்சி முறையில் இது மிகவும் பொருத்தம்.

சென்னை
18-4-59

"ராம பக்தை"

ஆகாச வெடி!

"மத்திய அரசாங்கத்துக்கு வருவாய் அதிகம். அதன் கடைநிலை ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கலாம். ஆனால் சென்னை சர்க்கார் மாவுக்குத் தக்க பணியாரம்தானே செய்ய முடியும்?"

—சென்னை தொழில் மந்திரி ஆர். வி.

தங்களுடைய சம்பளத்தின் அளவு பட்சணத்தை தப் போல் கொஞ்சமாக இருப்பதை அரசாங்கம் இவ்வாறு உணர்ந்ததே மேல் என்கிறார் ஓர் கடைநிலை ஊழியர்.

☸

"ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர் ஒருவர் ஹிந்தியில் கேட்ட கேள்விக்குப் பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ வி. கே. கே. மேனன் தமக்கு ஹிந்தி தெரியவில்லை என்று ஆங்கிலத்தில் பதில் கூறவே சபையில் சிரிப்பு ஏற்பட்டது."

—டெல்லி லோக் சபையில்

"சபையில் எதற்காகச் சிரிப்பொலி ஏற்படுகிறது?" என்று அந்த அங்கத்தினர் மீண்டும் கேள்வி கேட்டாரா?

☸

"பிரம்மபுத்ரா நதியைக் கடந்து வர முயன்றபோது, பளு மிகுந்த பல பொருள்களையும் தங்கக் கட்டிகளையும் தலாய் லாமா கோஷ்டியினர் ஆற்றில் போட வேண்டியதாயிற்று."

—ஒரு செய்தி

இந்தச் செய்தி வெளியானதிலிருந்து பிரம்மபுத்ராவில் ஸ்நானம் செய்வோர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் வியப்பில்லை என்கிறார் ஒருவர்.


வெற்றிக்கான "கோலை" நான் அடித்தேன்
போர்ன்-விடாவுக்கு எனது நன்றி
நான் மிக்க பலஹீனத்துடன் இருந்ததினால் பள்ளியில்
மாணவர்கள் என்னைப் பரிகாசம் செய்து வந்தனர். அதுசமயம்
தினமும் போர்ன்-விடா அருந்தும்படி எங்கள் டாக்டர் சொன்னார்.
அப்படியே செய்ய இழந்த சக்தி பூராவையும் நான்
திரும்பப் பெற்றேன். என் பள்ளியில் கால்பந்து
விளையாட்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டு இப்போது அதற்கு
தலைவனாக இருக்கிறேன். எல்லா விளையாட்டுப் போட்டிகளிலும்
நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். எங்கள் குடும்பத்தில்
எல்லோரும் போர்ன்-விடாவை தினந்தோறும்
அருந்துகிறோம். அதிக சக்திக்கும், வலிமைக்கும்
தினமும் போர்ன்-விடா அருந்துங்கள்.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURY'S SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
For Strength and Vigour
BOURN-VITA
MADE BY
Cadbury's



வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

79

கல்வி பெறாதவனிடம் செல்வமோ அதிகாரமோ சேர்ந்து விட்டால் மிகக் கேடு விளையும் என்கிறார் முனிவர். நல்லவர்கள் வறுமையில் சிக்கினால் மிகத் துன்பம் என்பது தெரிந்த விஷயம். அதைவிடத் துன்பம் அதிகம் விளையும், கல்லாதவனிடம் பாக்கிய தேவதை அகப்பட்டு அலைய நேரிட்டால்.

நல்லார்கட் பட்ட
 வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

'பட்டு என்பது 'உண்டாகிய' என்கிற பொருள் மட்டுமல்ல, அந்த இடத்தில் சிக்கிக்கொண்டு அவதிப்படும் திருவின் துக்கத்தையும் காட்டுகிறது.

* * *

ஜாதி வழியிலோ, செல்வத்தின் வழியோ உயர்ந்தவராகக் கருதும் மக்கள் கல்வி பெறாதிருந்தால் அவர்களுக்கு மதிப்பில்லை. கல்வி யடைந்தவன் அவ்வழிகளில் தாழ்ந்தவனாயிருந்தாலும் அவனே மேலானவன். மக்களுக்கு மதிப்புத் தருவது கல்வி.

மேற்பிறந்தார் ஆயினும்
 கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

பாடு - பெருமை. மேற்பிறந்தாராயினும் அவர் கல்லாதாராயின் கீழ்ப்பிறந்தபோதிலும் கல்வி கற்றவருடைய பெருமை அவர்களுக்கு இல்லை.

* * *

எல்லா நாடுகளிலும் கல்விக்குப் பெருமை அதிகம். ஆனால் பழைய தமிழ் நூல்களில் கல்விக்குக் கொடுக்கப் பட்ட தனிப் பெருமை மிக்க அதிகம். கல்வியில்லாதவர்களை விலங்காகவே வைத்தார்கள்.

விலங்கொடு மக்கள்
 அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

நாற்கால் சீவனாகிய மிருகத்துக்கும் மனிதனுக்கும் எத்தனை தூரம், அத்தனை தூரம் உண்டு கல்லாதார்க்கும் கல்வியுள்ளவர்களுக்கும்.

விலங்கொடு மக்கள்—விலங்கையும் மனித ஜன்மத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வளவு பெரிய பேதம் காண்கிறோம்? அதைப் போன்ற பேதம் கற்றவருக்கும் மற்றையவர்களுக்கும் இடையில் என்பது குறளின் சொல்லமைப்பு. விலங்கு மக்கள் என்று சொன்னது போல் கல்லாதவர்களை முதலில் சொல்லாமல் மாற்றிச் சொல்லியிருப்பது செய்யுளில் அவ்வப் போது காணப்படும் மயக்கக் கிரமம். இதை 'மயக்க நிரல் நிறை' அல்லது 'எதிர் நிரல் நிறை' என்பார்கள்.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு வானொலி

கொழும்பு, ஏப்ரல் 16வ.

மதுரையைச் சேர்ந்த பிரபல தொழிலதிபரும் டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரக்டரும் 320 – வது ரோட்டரி ஜில்லாவின் கவர்னருமான திரு டி. எஸ். ராஜம் இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்து இங்குள்ள பல ரோட்டரிச் சங்கங்களைப் பார்வையிட்டார். கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள ரோட்டரிச் சங்கங்களின் விருந்துக் கூட்டங்களில் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். யாழ்ப்பாணத்தில் பத்திரிகை நிருபருக்கு ஒரு பேட்டியளித்துப் பேசியபோது ஜன சேவையே ரோட்டரி இயக்கத்தின் அடிப்படை இலட்சியமென்றும், ஜன சேவைக்குச் சந்தர்ப்பமில்லாவிட்டால் ரோட்டரி இயக்கத்துக்கு ஒரு அர்த்தமோ அல்லது பயனோ இல்லை யென்றும் கூறினார். இந்தியாவிலுள்ள ரோட்டரிச் சங்கங்கள் கிராமிய மக்களைக் கைதூக்கிவிடச் சிறப்பாகச் சேவை செய்வதாயும் அதேபோல் இலங்கை ரோட்டரிச் சங்கங்களும் சேவை புரிய வேண்டு மென்றார்.


திரு எஸ். தொண்டமானைத் தலைவராகக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொகுதி நிர்ணயக் கமிஷனுக்கு ஒரு விரிவான மகஜரை அனுப்பி வைத்திருக்கிறது. தொகுதி நிர்ணயத்துக்கு ஜனத் தொகையைக் கணக்கிடுகையில் நாடற்ற நிலைமையில் இருக்கும் பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர்களையும் சேர்த்துக் கணக்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று பிரதம மந்திரி உத்தரவிட்டிருப்பதைக் காங்கிரஸ் சுட்டிக் காட்டி யிருக்கிறது.

நாடற்றவர்களுக்கு இந்நாட்டுப் பிரஜாவுரிமையும் வோட்டுரிமையும் அளிக்காவிட்டால்கூட அவர்களும் இந்நாட்டைச் சேர்ந்தவர்கள்தானென்பதைப் பிரதமர் ஒப்புக் கொண்டிருப்பது அவரது உத்தரவு காட்டுவதாகத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது. இந்தியர்களில் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளப்பட்டிருக்கும் ஒரு லட்சம் பேர்களில் ஓட்டுரிமை வயதை அடைந்தவர்கள் சுமார் 12,000 பேர்கள் மட்டும்தான். இவர்களும் நாட்டின் பல பகுதிகளிலும் சிதறி வசிப்பதால் ஓட்டு பலத்தைக் கொண்டு இவர்கள் பார்லிமெண்டில் ஸ்தானம் பெற முடியாது. ஆகையால் இவர்களுக்குப் பார்லிமெண்டில் நியாயமான பிரதிநிதித்துவம் கிடைக்க மாற்று வழிகள் ஏதாவது செய்வது தொகுதி நிர்ணயக் கமிஷனின் தவிர்க்க முடியாத கடமை. இந் நாட்டில் தர்மமும் நியாயமும் நிலைத்திருக்க வேண்டுமாயின் பத்து லட்சம் இந்திய மக்களுக்குப் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி கண்டிப்பாகச் செய்யப்படவேண்டும். இவ்வாறு காங்கிரஸ் தனது மகஜரில் இடித்துக் காட்டி யிருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு வானொலி நிலையத்தை நிறுவ வேண்டு மென்பது தமிழ் பேசும் மக்களின் நீண்டநாளையக் கோரிக்கை. சென்னை ராஜ்யத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்கள் இருக்கக் காரணம் சென்னை வானொலி ஒலிபரப்பைச் சென்னை ராஜ்யத்திலுள்ளவர்கள் அனைவரும் கேட்க முடியாதென்பதினால் அல்ல. ஒவ்வொரு பகுதி மக்களுக்கும் கலையைப் போற்றி வளர்க்கப் போதிய சந்தர்ப்பம் அளிக்க வேண்டு மென்பதற்காகவே ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்களை அரசாங்கம் நிறுவி யிருக்கிறது. இலங்கையிலோ கொழும்பில் ஒலிபரப்பப்படுவது பல சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்திலே தெளிவாகக் கேட்பதில்லை யென்று புகார் செய்யப்படுகிறது. வட இலங்கை மக்களுக்கு இசையை வளர்க்கப் போதிய சந்தர்ப்பங்களில்லை யென்பது ஒருபுறமிருக்க, இசை வளர்க்கும் கொழும்பு நிலைய நிகழ்ச்சிகளையும் சரியாகக் கேட்க வசதியில்லை. இதை முன்னிட்டே வட இலங்கையில் ஒரு வானொலி நிலையத்தை நிறுவ வேண்டுமெனத் தமிழ் மக்கள் கோரி வருகிறார்கள். சென்ற வாரத்தில் தென்மராட்சி இசைக் கலை மன்றத்தின் இரண்டாவது ஆண்டுவிழாவிலும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. — ரஜனி.



மதுரை ரோட்டரி கவர்னர் திரு டி. எஸ். ராஜமும் அவரது மனைவியாரும் யாழ்ப்பாணத்துக்குச் சமீபத்தில் விஜயம் செய்தனர். யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் அவர்களை முன்னாள் தபால் மந்திரி திரு எஸ். நடேசன் அவர்கள் வரவேற்றார்.




"டெட் எனக்கு மகிழ்ச்சியூட்டுகிறது"

டெட், ஆடைகளை சோப்பைக்காட்டிலும் துரிதமாக சுத்தம் செய்கிறது. அது, பருத்தி ஆடைகளை எவ்வித நாசமுமில்லாமல், நன்றாக சுத்தம் செய்கிறதோ அவ்வாறே, நைலான், சில்க் முதலியவைகளையும் சுத்தம் செய்கிறது. பாத்திரங்கள், ஸிங்குகள் (சாக்கடைகள்) தரைகள், சுவர்கள் முதலிய எல்லாவற்றையும் டெட்டினால் சுத்தம் செய்யலாம். விஞ்ஞான முறையில் தயாரிக்கப் பட்ட இந்த பரிசுத்தகாரியை இப்போது ஆயிரக்கணக்கான இல்லங்களில் உபயோகிக்கிறார்கள்.







ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட் பம்பாய்

Shilpi S.O.M. No. 367 A

பைலட் பேனாவின் அற்புத மதிப்பிற்கு இதோ ஒரு அத்தாட்சி

சாதாரண பேனாவைவிட, பவுண்டன் பேனாவை உபயோகித்தால் உன் வேலை பாதி நேரத்தில் முடியுமே'' என்றார் என் ஆபீஸர். ''மட்டக் காகிதத்தில் நல்ல பேனாவால் எப்படி எழுதுவது என்றேன். முதலில் 'பைலட்' டை வாங்கு. அது எந்த காகிதம் மீதும் எழுதும்'' என்றார். ''அவர் யோசனையை உடனே கேட்டதால் தான் நான் இப்பொழுதெல்லாம் சீக்கிரமாகவே வீடு திரும்பி விடுகிறேன்''

''நான் இப்பொழுதெல்லாம் அநாவசியமாக நீண்டநேரம் வேலை செய்வதே கிடையாது. இதற்கான பெருமை எல்லாம் 'பைலட்'டையே சாரும்'' என்றார்—சக்ரபாணி.





அநேகமாக மட்ட ரக காகிதத்தை உபயோகித்தே எழுத்து வேலை நடக்கிறது. குறைந்த விலையானாலும் பைலட் பேனா எந்தவிதமான காகிதம் மீதும்-உப்புத்தாள் உள்பட-எழுத வல்லது. அதன் உறுதியான நிப்பு, இறகு பேனா போல் மிருதுவாக எழுதுகிறது.

பைலட்

TRADE (P) MARK

மட்டமான காகிதம் மீதும் மிருதுவாக எழுதுகிறது பைலட்

நிர்வாக ஆபீஸ்:
பைலட் பென் கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
கந்தோவிக் சென்டர்
அரமனேக்காரன் தெரு, மதராஸ்-1.

தொழிற்சாலை மற்றும் ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
கதிர்வேடு கிராமம், போலால்,
புழலேரி, செங்கற்பட்டு ஜில்லா.

PP/238 A

ஷோ ரூம்: விற்பனை மற்றும் சர்வீஸ் வசதி உள்ளது
1. ஜெனரல் ஆஸ்பத்திரி சாலை (மூர் மார்க்கெட் எதிரில்) சென்னை-3

பாகவதமாகிய

பக்திவயல்

பௌராணிகர்

34. சந்திர வம்சத்து மற்ற அரசர்கள்

பிறகு சுகர் சந்திர வம்ச பரம்பரையை ஒழுங்காக எடுத்து பரீக்ஷித்துக்கு உரைத்தார்.

பிரதீபன் என்ற அரசனுக்கு மூன்று மைந்தர்கள். அவர்களுள் முதல்வனான தேவாபி என்பவன் பட்டம் வேண்டாமென்று கானகம் சென்று விட்டான். ஆகவே இரண்டாவது மகன் சந்தனு என்பவன் அரசனானான். ஒரு சமயம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மழை பொழியாமல் இந்திரன் பூமியை வறட்டி விடவே, சந்தனு பெரியோரிடம் சென்று பரிகாரம் தேடினான். அவர்கள் மூத்த மகன் உயிருடனிருக்கும் பொழுது இளையோன் அரசாளுவது அதர்மம் என்று காரணம் கூறினார்கள். சந்தனு தேவாபியைத் தேடிச் சென்று நாட்டை ஒப்புக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டான். அச்சமயம் தேவாபி மறைக்கு எதிராகச் சில கொள்கைகளைச் சொன்னான். மதம் மாறிய முதல்வனுக்கு நாடான உரிமை இல்லை என்று தேவர் உடனே மழை பொழிந்தனர்.

சந்தனுவுக்குக் கங்காதேவியிடம் பிறந்தவர் பீஷ்மர். புலன்களை அடக்கி ஆண்டவனை அறிந்த அறிஞர். போரில் நிகரற்ற வீரர். அவரது ஆசிரியரான பரசுராமரே மெச்சிய பெரியோர்.

சந்தனுவுக்கு சத்யவதி என்ற மற்றொரு மனைவியினிடம் விசித்ரவீர்யன், சித்ராங்கதன் என்று இரண்டு புதல்வர்கள் பிறந்தனர். அவர்களுள் சித்ராங்கதன் ஒரு கந்தர்வனால் கொல்லப்பட்டான். சந்தனுவைச் சந்திப்பதற்கு முன் பராசர முனிவரிடம் சத்யவதிக்கு நாராயணனுடைய அம்சம் பொருந்திய வியாசர் பிறந்திருந்தார். வியாசருக்கு ''கிருஷ்ணத்வைபாயனர்'' என்ற பெயரும் உண்டு. அவரே என் தந்தை. (என்று சுகர் சொல்கிறார்) அவர்தான் இந்த பாகவத புராணத்தை எனக்கு எடுத்துரைத்தது. நான் சாந்தியை அடைந்திருக்கிறேன் என்ற நம்பிக்கையுடன் தம்முடைய மற்றச் சீடர்களுக்குச் சொல்லாத இந்த மர்மம் நிரம்பிய புராணத்தை எனக்கு மட்டும் கூறினார்.

சந்தனுவின் மைந்தன் விசித்ரவீர்யன் காசி மன்னன் புதல்விகளான அம்பிகா, அம்பாலிகா என்ற சகோதரிகளை மணந்து கொண்டான். ஆனால் சில வருடங்களுக்கெல்லாம் க்ஷயநோய் கண்டு இறந்து விட்டான். திருதராஷ்டிரனும் பாண்டுவும் ஒருங்கே அம்பிகை, அம்பாலிகையிடத்தில் வியாசருக்குத்தான் பிறந்தார்கள். ஒரு சேடிப் பெண்ணிடம் விதுரரும் வியாசருக்குப் பிறந்தவர். திருதராஷ்டிரனுக்குக் காந்தாரியினிடம் நூறு மைந்தர்கள் பிறந்தார்கள். அவர்களுள் முதல்வன் துரியோதனன். பாண்டுவின் மூத்த மனைவி குந்திதேவி. ஒருநாள் வேட்டை ஆடும்பொழுது மான் வேடம் பூண்டு லீலை செய்து கொண்டிருந்த ஒரு முனிவரையும் அவருடைய மனைவியையும் பாண்டு அம்பெய்து கொன்று விட்டார். ''நீ மனைவியுடன் கூடினால் இறந்து விடுவாய்'' என்று முனிவர் பாண்டுவுக்குச் சாபம் கொடுத்தார். குந்தியின் புதல்வர்கள் தேவரின் யோக சக்தியினால் பிறந்தவர்கள். தர்மதேவதைக்கு யுதிஷ்டிரரும், வருணனுக்கு பீமஸேனனும், இந்திரனுக்கு அர்ஜுனனும் பிறந்தனர். நகுலனும் ஸகதேவனும் அச்வினீகுமாரருக்குப் பாண்டுவின் மற்றொரு மனைவி மாத்ரி என்பவள் மூலம் பிறந்தவர்கள். அரசே! உன்னுடைய சிற்றப்பன்மார்கள் எல்லோரும் திரௌபதிக்குப் பிறந்தவர்கள். கண்ணனுடைய தங்கையான ஸுபத்ரைக்கும் அர்ஜுனனுக்கும் பிறந்தவர் உன் தந்தை அபிமன்யு. அவருக்கும் உத்தரைக்கும் பிறந்தவர் தேவரீர்.


இதோ உம்முடைய நான்கு புதல்வர்கள்—ஜனமேஜயன், சுருதஸேனன், பீமஸேனன், உக்ரஸேனன். ஜனமேஜயன் உம்மைப் பழி வாங்குவதற்காக ஒரு ஸர்ப்பயாகம் செய்யப் போகிறான். அதில் பாம்புகள் எல்லாம் வந்து விழும். உலகெல்லாம் புகழ் ஓங்க ஜனமேஜயன்

அனேகம் அச்வமேத யாகங்களைச் செய்வான். சந்திரவம்சம் கலியுகத்தில் க்ஷேமகன் என்ற அரசன் வரை சென்று முடிந்து போகும்.

இதற்குமுன் யயாதி மன்னனைப்பற்றி நான் கூறினேன். யயாதியின் மூத்த மகன் யது என்பவன். யது குலத்தின் வரலாறு கேட்பவர்களுடைய பாபத்தைப் போக்கும். புண்ணியம் பொங்கும் சரிதம். அக்குலத்தில் அன்றோ அனந்தன் மனித உருவோடு அவதாரம் செய்தார். அக்குலத்தில் நிகரில்லாப் பெருமையுடன் அர்ஜுனன் என்று ஒரு அரசன் இருந்தான். அந்தப் பரம்பரையில் யது, மது, விருஷ்ணி என்று மூன்று குமாரர்கள் தோன்றினர்கள். அவர்களுடைய சந்ததிகள்தான் யாதவர்கள்.

விருஷ்ணியின் பரம்பரையில் ஆஹுகன் என்ற மன்னனுக்கு தேவகன், உக்ரஸேனன் என்று இரு புதல்வர்கள் பிறந்தார்கள். தேவகன் மகள் தேவகி. அவளை வாசுதேவன் மணந்து கொண்டார். உக்ரஸேனனுக்கு ஒன்பது மைந்தர்கள். அவர்களுள் மூத்தவன் கம்ஸன். வசுதேவரும் யாதவ குலத்தில் பிறந்தவரே. வசுதேவருக்கு தேவகியினிடம் கண்ணன் பிறந்தார். அவர் நாராயணனே ஆவர். தேவரிருடைய தந்தையின் தாய் ஸுபத்ரை அவர்களுடைய புதல்வி.


இவ்வுலகில் தர்மம் குன்றி அநீதி பெருகும்போதெல்லாம் ஹரி அவதாரம் செய்கிறார். ஆனல் அவர் செய்யும் அவதாரத்துக்கு அவருடைய லீலையைத் தவிர 'ஏன்' என்ற கேள்விக்குப் பதில் கிடையாது. நாம் பிறப்பதும் இறப்பதும் அவருடைய மாயா விநோதம்; நாம் முக்தி அடைவது அவருடைய அருளாலே. புவி மீது அசுர மன்னர் கொடுங்கோல் மிகுந்து புவி பாரம் பெருகவே, கண்ணனும் அவர் தமையன் பலராமனும், விண்ணவரும் எண்ணுதற்கரிய பல செயல்களைச் செய்து அதர்மத்தை அகற்றினர்கள். பிறப்பவர்களுக்கு நன்மையை அளவிலாது நல்கினர். கண்ணனுடைய அவதாரக் கதை என்ற பெருக்கில் ஒரு துளியைப் பருகினலும் பிறப்பென்ற பிணி பறந்து போகும். புன்சிரிப்பால் இனிப் பேறிய இன்சொற்களாலும், அரும் பெரும் வீரச் செயல்களாலும், சுந்தர வடிவாலும் கண்ணன் கண்டவர் அனைவரையும் களிக்க வைத்தார். கண்ணனுடைய எழிலைப் பருகிய மாந்தர் அவ்வப்போது கண் மறைக்கும் இமைகளை நொந்தனர். சிறையில் பிறந்து, ஆயர் பாடியில் வளர்ந்து, மதுரைக்குத் திரும்பி எதிரிகளைக் கொன்று, பலரை மணந்து மறை மார்க்கத்தை முன்னேற்றவே பல வேள்விகளைத் தம் பொருட்டே செய்தார் கண்ணன். கௌரவர்களிடையே சண்டையை மூட்டிப் போரை வளர்த்து, புவி பாரத்தைக் குறைத்து, அர்ஜுனனுக்கு வெற்றியைத் தந்து, தமது சீடனை உத்தவருக்கு மெய்யறிவை ஊட்டி, சாந்தமாகத் தமது உண்மை இருப்பிடத்துக்கு இறுதியில் ஏகினர்.




திடீரென வரும் விருந்தாளிகளுக்கு...!
...இணையற்ற விருந்து
மிட்சலின்
கிஸான் பானங்கள் ❀
ஆரஞ்சு ஸ்க்வாஷ் - லெமன் ஸ்க்வாஷ் - லெமன் பார்லி - ஆரஞ்சு பார்லி - மாம்பழ ஸ்க்வாஷ் - கிரேப் ஃபுருட் ஸ்க்வாஷ் - லைம்ஜூஸ் கார்டியல்
இவ்வினிய பழரஸ பானங்களை என்ன விருப்பமுடன் விருந்தாளிகள் ரஸிக்கின்றனர் என்பதை நீங்களே பார்க்கலாம். வருஷம் முழுவதும் உபயோகிக்கத் தகுந்த உன்னதமான பானங்கள் இவை. உங்கள் குடும்பத்திற்கும் உகந்த தொருவிருந்து. பிரதி ஞாயிற்றுக் கிழமையும் இவ்வினிய பானங்களை அருந்தத் தவறாதீர்கள்.
என்றும் வீட்டிலொரு பாட்டில் இருக்கட்டும்
❀ பழம், காய்கறி பொருள்கள், தயாரிப்பில், இந்திய சர்க்காரால் நடத்தப்பட்ட இரண்டாவது அகில இந்தியப் போட்டியில் கிஸான் ஸ்க்வாஷ்கள் முதல் மற்றும் இரண்டாவது பரிசுகள் பெற்றன.
KP 5476
கிஸான் ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூர்.
Kissan
MITCHELL'S
KISSAN

நமது கைத்தொழில் பற்றி...





இந்தியக் கைத்தொழில்—இந்தியாவின் வழிவழிச் செல்வம்.


பல நூற்றாண்டுகளுக்கு முன்னே 'பிலட்-இ-இந்து' என்னும் இந்திய எஃகு, அசைக்க முடியாத உறுதியின் நிலைக்களனாக இருந்தது.

ஆனால், அமைதியான முறையில் உலோகங்கள் பயன்படுத்தப்பட்ட பல்வேறு முறைகள் குறிப்பிடத்தக்கன.

உலோக அடித்தளத்துடன்கூடிய நமது கைத்தொழில் கலைப்பொருள்களில்—தஞ்சையின் செம்பு, பித்தளை, வெள்ளி பாத்திரங்களும் தட்டுகளும்—கரிய பின்னணியில் வெள்ளி உள் இழைப்புகளுடன் மொராதாபாத்தில் தயாராகும் பீதரி பூக் குவளை, தட்டுகள், சாம்பல் கிண்ணங்கள் பித்தளைப் பாத்திரங்கள் மற்றும் அலங்காரப் பொருள்களும். ஜெய்ப்பூரின் பித்தளை அல்லது எனாமல் இழைத்த விலங்கு உருவ 'மினகரி' பொருள்களும்—மேற்கு வங்கத்தின் மணியுலோக வேலைப்பாடுகளும், அரிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த காஷ்மீர் வெள்ளிச் சாமான்களும்—சரிகை வேலைப்பாடமைந்த ஒரிசா-காஷ்மீர் வெள்ளிச் சாமான்களும் - பம்பாயின் பொடி செய்த செம்பும். சௌராஷ்டிராவின் உலோகப் பொம்மைகளும் குறிப்பிடத்தக்கவை.

பல உருவங்களிலும் அளவுகளிலும் அமைந்த சாதாரணத் தட்டுமுட்டுச் சாமான்கள் முதல், வகைவகையாக இழைத்தும் எனாமல் முதலியவை பதித்தும் செய்யப்படும் நமது கலைக்கைத்தொழில் எத்தனையோ வகைகளில் புகழோங்கி நிற்கிறது. செய்யும் முறை எதுவாயினும்—பயன்படும் உலோகம் எதுவாயினும் இந்தியக் கைத்தொழில் பொருள் ஒவ்வொன்றிலும் சொல்லால் விவரிக்க முடியாத கலைகளின் குழைவு இழைந்தோடுகிறது.





அகில இந்தியக் கைத்தொழில் போர்டு,
வணிக-தொழிலியல் அமைச்சகம்,
இந்திய அரசாங்கம்.

"கல்கி" புத்தாண்டு மலர்

இவ்வாரக் 'கல்கி' புத்தாண்டு மலரைக் கண்டு மகிழ்வுற்றேன். பல கருத்துக்களையும், கட்டுரைகளையும் தாங்கி வந்திருக்கிற இதழை ஓர் அழியாக் கலை மலர் என்றுதான் குறிப்பிட வேண்டும். மூவர்ண அட்டையை அலங்கரிக்கும் ஆரணங்கும், மன்மதனும் ரதியும் காதல் போர் துவங்கும் காட்சியும் வாசகர்களின் மனத்திலிருந்து அகலவே அகலாது. தலையங்கம் நன்கு அமைந்துள்ளது. ராஜாஜியின் கட்டுரையும், புது வருஷக் கதையும், ஆச்சார்யாளின் ஸ்ரீமுகமும் மலருக்குச் சிறப்பைத் தருகின்றன.

கோயம்புத்தூர்
9-4-59 — நா. கி. கணபதி

"கல்கி புத்தாண்டு இதழ்" 'புத்தாண்டு மலராகவே' பூத்து விட்டது. இரண்டு புதுத் தொடர்கதைகளும் ஆரம்பத்திலேயே 'களை' கட்டிவிட்டதாகச் சொல்லலாம். வெகு காலத்துக்குப்பின்பு 'விந்தன்' அவர்களின் கதையைப் படிக்க மகிழ்ச்சியும் நிறைவும் ஏற்பட்டன. ராமையா, தி. ஜானகிராமன், சுந்தரராமசாமி ஆகியவர்களின் கதைகள் மிகப் பிரமாதமாயிருக்கின்றன. குங்குமப் பொட்டு குமாரசாமி மேலும் சில கதைகளை நமக்குச் சொல்வார் என்று நம்புகிறேன். அக்பர் சாஸ்திரிகள் நம்மைச் சிரிக்க அடித்துக் கொண்டே போய், எதிர்பாராதவிதமாய் நம்மைக் கண்ணீர் விடும்படி செய்து விடுகிறார்.

கதைகள் எல்லாவற்றுக்கும் கொடுக்கப் பட்டிருக்கும் குறிப்புக்கள் கதைகளின் கருவூலத்தை ஓரிரு வாக்கியங்களில் பிழிந்து தருகின்றன.

கல்யாண்
10-4-59 — கு. ரா.

தங்களது புத்தாண்டு மலர் மலர்ந்து வருகிறது. ஸ்ரீ ராஜாஜி அவர்களின் புது வருஷக் கதை சகோதரிகளுக்கு ஓர் பாடம். குடும்பமும் குழந்தைகளும் மனைவியின் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பது கல்லில் செதுக்கும் மொழிகள். "கண்கள் உறங்காவோ" கற்பூர தீபாராதனையுடன் ஆரம்பிக்கும் ஆர்வமுள்ள கதை. "தேன் கூடு" சதங்கை ஒலியுடனும் கலையுணர்ச்சியுடனும் ஆரம்பிக்கும் அழகான கதை.

கூடலூர்
13-4-59 — ராஜாமணி

'கல்கி' 12-4-59 தேதி இதழைக் கண்டேன். தி. ஜானகிராமன், பி. எஸ். ராமையா போன்ற பிரபல எழுத்தாளர்களின் கதைகளும் மூவர்ண முகப்புப் படமும் கூடிய தங்கள் புத்தாண்டு இதழ் சிறப்பாக அமைந்துள்ளது. புதிதாக ஆரம்பித்திருக்கும் இரு சுவை மிக்க தொடர் கதைகளும் வாசகர்களை மகிழ்வித்து வரும் என்பதில் சந்தேகமில்லை.

சென்னை
13-4-59 — ஆர். சூடாமணி

புது வருஷப் பிரார்த்தனையும், கதையும் விகாரியின் நுழைவுக்கு மங்களம் கூறும் வகையில் அமைந்துள்ளன. காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகளின் அறவுரையும் அப்படியே. 'இலட்சியம் சிதைந்தது' கேலிச்சித்திரம் அதி அற்புதமாயிருக்கிறது.

புதுதில்லி
10-4-59 — ஏ. ஆர். ராஜாமணி

'கல்கி' புத்தாண்டு மலர் கீர்த்தியாக உள்ளது. திரு ஆர்வி.யின் 'தேன் கூட்'டில் தளிர்க் கொடி என ஜதி தாளத்துக்கு ஏற்ப வளைந்தாடும் உஷாவை ஆசிரியர் அறிமுகம் செய்யும் விதமும் அதைப் பின்னிப் படரும் கதையும் அருவியெனச் செல்லுகின்றன. திரு விந்தனின் கையாண்டியும், திரு ஜானகிராமனின் நகைச்சுவையும் வெகு ரசமானவை.

சென்னை
15-4-59 — மாசிலாமணி

தங்களுடைய புத்தாண்டு மலர் படித்தேன். ஆன்மீகத்துறையில் மாத்திரமின்றி அரசியல் கோமையிலும் தமக்குக் கண்ணோட்டம் இருப்பதை ஸ்ரீமுகத்தின் கடைசி வரிகளில் தெளிவுபடுத்தியிருக்கிறார் சங்கராச்சாரியார்.

உள்ளத்துக்கு வெகு இதமாக இருக்கிறது திரு ஜானகிராமன் கதை. சுலபத்தில் நெஞ்சை விட்டகலாத கதை அது.

சென்னை
10-4-59 — பிலஹரி

'கல்கி' புத்தாண்டு இதழ் பிரமாதமாக இருக்கிறது. மாயாவி-ஆர்வியின் படைப்புக்களுக்குச் சித்திரக்காரர்கள் வினு, லதா உயிரூட்டுகிறார்கள். எனது உளங் கனிந்த பாராட்டுதல்கள்.

திருப்பத்தூர்
12-4-59 — பில்லூர் சுந்தரராமன்

☆ அருள் வாக்கு ☆

உண்மை வித்தை வேண்டுமென்றால் குருவை நாடிச் சிஷ்யன் போக வேண்டும். குரு பணம் வாங்கிக் கொண்டு சொல்லக் கூடாது. குருவினிடத்தில் சகல வித்தைகளும் கற்றுக் கொண்ட பிறகு வெளியில் யாசகம் வாங்கி யாவது குருவுக்கு நிறைய குரு தக்ஷிணை கொடுக்கலாம். உண்மையான குருகுல முறையைக் கடைப் பிடித்துக் குருவின் அநுக்கிரகத்துடன் வித்தை கற்றுக் கொண்டால் எல்லாக் குறைகளும் நீங்கும். வாழ்க்கையும் எளிய முறையில் சுதந்திரமாக நடக்கும்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

வட்டமேஜை

தோல்வியின் காரணம்

சென்னை நகரசபைத் தேர்தலில் காங்கிரஸுக்கு ஏற்பட்ட சரிவுக்குத் திரு காமராஜர், "படித்தவர்களும், திறமைசாலிகளும் காங்கிரஸ் பிரதிநிதியாக நிற்க முன்வரவில்லை. ஆகவே காங்கிரஸ் தோல்வியுற்றது" என்னும் விளக்கத்தைத் தஞ்சையில் 13-4-59 யன்று மொழிந்தார். உண்மையைக் கூறுமிடத்து இதைவிடச் சுத்த அபத்தப் பொய் வேறு எதுவும் இருக்க முடியாது. பல நல்லவர்கள், படித்தவர்கள், அனுபவசாலிகள், நேர்மையுள்ளம் கொண்டவர்கள், தொண்டு செய்ய விருப்பமுள்ளவர்கள், தன்னலம் கருதாதவர்கள், விண்ணப்பம் செய்தும், பல நாட்கள் காங்கிரஸிலே நேர்மையோடு நெறி தவறாது, ஒழுக்கத்தைப் பின்பற்றியவர்களை யெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, கட்சிமாறும் பச்சோந்திகள், அறவே எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், பேட்டைக்கே அறிமுகமில்லாதவர்கள் சமூகத்தால் கெட்ட செயல்களுக்காக ஒதுக்கப்பட்டவர்கள், கள்ளமார்க்கெட்டுக்காரர்கள் ஆகிய இவர்களுக்குத்தான் காங்கிரஸ் பிரதிநிதி ஸ்தானம் கொடுக்கப்பட்டது. கட்சி தோற்றதில் ஆச்சரியமில்லை. வாக்காளர்கள் நினைப்பில் இருந்த உயரிய லட்சியங்களுக்குக் காங்கிரஸ் பிரதிநிதிகள் லவலேசமும் வரமுடியாதவர்கள். தோல்விக்குப் பொறுப்பானர்கள் வாக்காளர்கள் அல்ல; திரு காமராஜரும் அவரைத் தழுவியிருக்கும் சுயநலக் கூட்டமுமே.

சென்னை
15—4—59 பி. வி. கல்யாணசுந்தரம்

தேர்தல் பிரசாரம்!

மதுரை நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அடைந்துள்ள நிலைமையைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருக்க முடியும். முப்பத்தாறு தொகுதிகளில் காங்கிரஸ் முப்பத்தைந்து ஸ்தானங்களில் போட்டியிட்டு, எவ்வளவோ பிரசாரங்களும், வேலைகளும் செய்து மிகவும் கேவலமாக ஒன்பது ஸ்தானங்களை அடைந்திருக்கிறது. இதற்கு எவ்வளவோ காரணங்கள் இருந்தாலும், காங்கிரஸ் பேச்சாளர்களும், தலைவர்களும், அமைச்சர்களும் ஆற்றிய சொற்பொழிவுகள் தலையாய காரணமாகும். 22-3-59ல் ஞாயிற்றுக்கிழமையன்று ஒரு எல்.எல்.ஏ. அவர்கள் கீழ்க் கண்டவாறு தேர்தல் கூட்டத்திலே பேசினார்கள்:—"நவீன தொழில் வளர்ச்சியின் காரணமாகப் பிரும்மாண்டமாக விரிந்துள்ள மதுரையின் பல பகுதிகளுக்கு, பாதாளச் சாக்கடைத் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும். வைகை அணைக்கட்டிலிருந்து குடி தண்ணீர், மிகுந்த அளவிலே வசதி செய்து தரப்பட வேண்டுமானால் மதுரை மக்கள், மதுரை நகரசபைக்கு 'மாடுகளை' (மன்னிக்கவும், அவர் அப்படித்தான் பேசினார்!) அனுப்ப வேண்டும். மாடுகள் அற்ற மதுரை நகரசபை மேற்கண்ட வசதிகளுக்குச் சென்னையை எதிர்பார்த்தால், சென்னையில் உள்ள நூற்றைம்பது மாடுகள் (எம். எல். ஏ.க்கள்) அசையாது. சென்னையில் உள்ள மாடுகள் அசையாவிட்டால், டெல்லியில் உள்ள மாடுகள் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டா. ஆகவே மதுரை நகரசபைக்கு மாடுகள் பெரும்பான்மையாகச் செல்ல வேண்டிய அவசியம் மதுரை மக்களுக்கு இப்பொழுது புலப்படும் என்று நம்புகிறேன்."

மற்றும் சிம்மக்கல் பகுதியில் மந்திரியொருவர் பேசுகையில், கூட்டத்தில் உள்ள ஒருவர் அரிசி விலையேற்றத்தினால் மதுரை மக்கள் படும் இன்னலைப் பற்றிக் கூறினார். கனம் அமைச்சர் கோபத்துடன், "நீங்கள் ஏன் அவ்வளவு விலை கொடுத்து வாங்குகிறீர்கள்? நீங்கள் கட்டுப்பாடாக வாங்காமலிருந்தால், கடைக்காரன் ஏன் அதிக விலைக்கு விற்கப் போகிறான்?" என்று பதிலுக்குக் கேட்டார்.

இவைகளை யெல்லாம் பார்க்கும்பொழுது கனம் ராஜாஜி அவர்களின் ஆட்சியைப் பற்றி நினைவு வருகிறது. வேலூர் நகரசபையில் எதிர்க்கட்சியினர் பணியாற்றிய போதிலும் மக்கள் நலம் சிறிதும் குந்தகப்படாமல் வேலூர் நகரின் தேவைகளைக் கவனித்த கனம் ராஜாஜியின் ஆட்சியை நினைத்து மனம் ஏங்குகிறது.

மதுரை
1-4-59 சி. கேசவகுமார்

வளர்த்த பேய்

நகரசபைத் தேர்தலில் காங்கிரஸின் தோல்வி சென்னை சர்க்காரின் படுதோல்வியே ஆகும். முதன் மந்திரி ஊரில் காங்கிரசுக்கு ஐந்து ஸ்தானங்கள். தேச பக்திக்கு உறைவிடமான மதுரையில் நாலில் ஒன்றுதான். கோயமுத்தூர், சென்னைத் தேர்தல் விவரங்கள் கண் கலங்கச் செய்கின்றன. ஆனால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவர்கள் வளர்த்த இன வெறி, பிளவுச் சக்திகள், குரோதம் என்ற பேய்கள் இவர்களையே அழிக்க முற்பட்டிருக்கின்றன.

இப்படிக்கு,

காங்கிரஸ் தேய்ந்து வருவதைக் காணச் சகிக்காத அன்பன்.


தூத்துக்குடி
13-4-59 மு. சி. வீரபாகு

பரீட்சை சீசன்!


மேஜை நாற்காலி யிருந்தாலும்
மின்சார விளக்கு இருந்தாலும்
பரீட்சைப் பாடம் ராஜாதுரை
படிக்கும் அழகைப் பாருங்க!

கல்யாணப் பரிசு

காந்தன்



திரைக்கதையின் பக்கமே திரும்பிப் பார்க்காமல், படத்தைத் தயாரிக்க ஆரம்பித்து விடும் படாதிபதிகளுக்கு நம் நாட்டில் பஞ்சமில்லை.

ஒரு பீரோவில், ஒழுங்கில்லாமல், இடம் பிடிக்கிறவரையில் புத்தகங்களை வாரியடைப்பது போல், ஒரு படத்தில் சம்பந்தம் இல்லாத நிகழ்ச்சிகளையெல்லாம் புகுத்திக் குதம்பமாக்குவதுதான் நம் நாட்டில் படத் தயாரிப்புக் கலையாயிருந்து வருகிறது. அதனுல்தான் சுவையற்ற படங்களின் எண்ணிக்கை இப்பொழுது அதிகமாகி வருகிறது.

சினிமாக் கதை எழுதுவோருக்கு மதிப்புக் கொடுத்துக் கதையை வாங்கிப்பார்த்து முன்னதாகவே மாற்றங்களைப் பற்றி நன்கு யோசித்து விட்டுப் படப்பிடிப்பை ஆரம்பித்தால், படத்தின் சுவைகுன்றிப்போக இடம் இராது. அனேகமாக, தமிழ்ப்படங்களில் ஆரம்பத்தில் இருக்கும் கதை போகப் போகப் பலவிதமாகத் தேய்ந்து உருமாறி விடுகிறது. சமீபத்தில் வெளிவந்த படங்கள் எல்லாவற்றிலும் இந்தக் குறையைத் தெளிவாகக் காணலாம். விமரிசகர்கள் இதைப் பற்றிப் பத்தி பத்தியாகப் பத்திரிகைகளில் எழுதினுலும் நிலைமை கொஞ்சங்கூடத் திருந்துவதாகக் காணும்.

வீனஸ் பிக்சர்ஸின் தயாரிப்பான 'கல்யாணப் பரிசு' படம் பார்த்ததும், உண்மையிலேயே எனக்கு ஒரு வியப்பு உணர்ச்சி உண்டாயிற்று.

ஒரு சினிமாப் படத்துக்குத் தேவைப்படும் அத்தனை அம்சங்களும் கொண்ட நல்ல கதையொன்றைப் படமாக்க முன் வந்தது தமிழ்ப் பட ரஸிகர்களின் நல்ல காலந்தான்.

பாஸ்கராக வரும் ஜெமினி கணேசன் இந்தப் படத்தில் வழக்கம்போல் காதலிப்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை; இருதலைக்கொள்ளியின் இடையே அகப்பட்ட எறும்பைப் போலத் துடிக்கிறார்; கண்ணீர் விட்டுக் கலங்குகிறார். கல்லூரியில் சக மாணவியாகிய வசந்திக்கு அசட்டுத்தனமாகக் காதல் கடிதம் எழுதி, அதன் காரணமாகக் கல்லூரியை விட்டே அகற்றப்பட்டது, பிறகு வசந்தியின் அநுதாபத்தையும், அன்பையும் ஒருங்கே பெற்று அவள் உள்ளத்திலும் இல்லத்திலும் குடி புகுந்து, வசந்தியின் கடமை உணர்ச்சிக்காகத் தன் காதலைத் தியாகம்செய்து கீதாவை மணந்தது — ஆகிய சந்தர்ப்பங்களிலெல்லாம் பிரமாதமாக நடித்திருக்கிறார் ஜெமினி கணேசன். நிதானமும், உணர்ச்சியும் நிறைந்த அவர் நடிப்பு, பேச்சு, கண்ணீர் எல்லாம் சிறந்துவிளங்குகின்றன. வசந்தியைக் கீதா அவதூறாகப் பேசிய கட்டத்தில் ஜெமினி கணேசனின் உணர்ச்சி பொங்கும் நடிப்பு நம் உள்ளத்தைப் பொங்க வைக்கிறது. கீதா இறந்த பிறகு குழந்தையுடன் பெங்களூர் போய், வஸந்தியின் திருமணத்தில் குழந்தையை மௌனமாக விட்டு விட்டுத் தளர்நடையோடு வெளியேறுகிறான் பாஸ்கர். அப்போது ஜெமினி கணேசன் படத்தை விட்டுவெளியேறுகிறரே தவிர, படம் பார்க்கிறவர்களின் உள்ளங்களில் அவர் நிரந்தரமாக உறைந்து விடுகிறார். அருமையான நடிப்பு!

பி. சரோஜாதேவி ஏராளமான படங்களில் நடித்திருக்கிறார். ஆனுல் விசேஷமாகப் பாராட்டிப் பேசும்படியாக அவர் நடித்திருக்கும் படம் 'கல்யாணப் பரிசு' தான். இந்தப் படத்தில் மிகவும் நன்ருய் நடித்து எல்லோரையும் அவர் நன்ருய் ஏமாற்றி விட்டார்!

"அம்மா, போய்ட்டு வரேன்" என்று இரண்டு தடவை தனது தேன் குரலில் கூவிக் காதலனையும் ஆஜர்ப்படுத்துவதி விருந்து காரியாலய மானேஜரின் காதலை நிராகரித்தது, தன் அருமை அக்காளுக்காகத் தன் காதலைத் துறந்து காதலனையும் விட்டுக் கொடுத்தது, தவருகத் தன் மீது மாசு கற்பிக்கத் துணிந்த தமக்கையின் இல்லத்திலிருந்து வெளியேறியது ஆகிய சம்பவங்களில் பி. சரோஜா தேவியின் நடிப்பு மிகச் சிறந்து விளங்குகிறது. தன்னை மறந்து கீதாவை மணக்கும்படி வசந்தி பாஸ்கரை வற்புறுத்தியபோது 'கேவல்கள்' சற்று அதிகமாயிருக்கவே, தியேட்டர் முன்னணி ரஸிகர்கள் கூடவே குரல் கொடுத்தனர். இது டைரக்டர் கவனம் செலுத்தித் தவிர்த்திருக்க வேண்டிய குறை.

திரைக் கதையில் சோகத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இடம் ஹாஸ்யத்துக்கும் கொடுக்கப்பட்டிருப்பதால் கடைசிவரையில் சுவை குன்ருமல் இருக்கிறது. ஆனுல் தங்கை வசந்தியின் நல்வாழ்வையே தன் மூச்சாகக்கொண்

டிருந்த கீதா, அவள்மீது வீண் ஐயம் கொண்டு திடீரென்று மாசு கற்பிப்பது அவ்வளவு பொருத்தமாயில்லை; மேலும் கீதாவின் சிறந்த பாத்திரத்துக்கும் மாசு கற்பிப்பதாகிவிடுகிறது. அவள் சந்தேகத்துக்குப் பொருத்தமான வேறு காரணங்கள் இருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

கீதாவின் வளைகாப்புக் கொண்டாட்டத்தில் பாடப்படும் "மங்கையர் முகத்திலே" என்ற பாட்டு நன்றாயிருக்கிறது. ஆனால் அதற்கேற்பப் பெண்கள் குதிப்பது அவ்வளவாக நன்றாயில்லை.

பாஸ்கரனின் நண்பனாக வரும் தங்கவேலு இந்தப் படத்தில் ஜமாய்த்துவிட்டார். அவர் தொடர்ச்சியாக அடிக்கும் 'டுப்பு'கள் சுவாரஸ்யமாயிருக்கின்றன. ஆபீசுக்குப் போவதாகப் புறப்பட்டு, பார்க்கில் வந்து சீட்டாடியது. பிரபல எழுத்தாளர் ஒருவருடைய பெயரைப் புனைந்து கொண்டு அவர் அடிக்கும் கேலிக் கூத்துக்கள் மிகவும் வேடிக்கையாயிருக்கின்றன. ஆனால் அந்தத் தமாஷ் காட்சிகள் மூலக்கதையுடன் தொடர்பில்லாமல் இருப்பதனாலும் சற்று அதிகமாகவே போய்விடுவதனாலும் கொஞ்சம் அலுப்படையச் செய்கின்றன: அவைகளில் சிலவற்றை அகற்றியிருந்தால் படத்தில் இன்னும்விறுவிறுப்பு இருக்கும்.

கீதாவாக விஜயகுமாரி வருகிறார். குடும்பத்தில் பொறுப்புள்ள சாதுப் பெண்ணாக முதலில் தோன்றி, பின்னால் பொறாமை உணர்ச்சியினால் புயலாக மாறிக் கடைசியில், குற்றமுணர்ந்த நெஞ்சோடு குமுறும் வரையில் நன்றாக நடித்திருக்கிறார்.

வசந்தியின் ஆபீஸ் மானேஜராக வரும் ஏ. நாகேசுவரராவ் தம் பாகத்தைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.


வசந்தியை விபத்திலிருந்து காப்பாற்றும் பெரிய மனிதராக நடிக்கும் எம். என். நம்பியார் ஒரு பெண்ணைக் கண்டதும் வழக்கமான பல்லவியைப்பாடாமல் உண்மையாகவே பெரிய மனிதராயிருக்கிறார்!

கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய மூன்று பெரிய பொறுப்புக்களையும்பாராட்டத்தக்க முறையில் வகித்திருக்கிறார் ஸ்ரீதர்; மூன்று துறைகளிலும் முழு வெற்றியைப் பெற்று விட்டார்.

கீதா பாஸ்கரிடம், "வசந்தியை நம் குழந்தைக்குத் தாயாக்கி விடுங்கள்" என்று கூறி இறக்கிறாள். இதைப் பார்த்ததும், முதல் மனைவியே இரண்டாந் தாரத்துக்கு அநுமதி யளித்துவிட்டதாகப் பல நாடகங்கள், நாவல்கள், சினிமாப் படங்கள் ஆகியவற்றில் பல முறைகள் பார்த்து, படித்து அலுத்துப் போன விஷயம்தான் இந்தப் படத்தின் முடிவோ என்று கொஞ்சம் கலங்கினேன். ஆனால் படத்தின் முடிவு (கதாநாயகனை மட்டும் அல்லாமல்) எல்லோரையும் ஏமாற்றிவிட்டது. அத்துடன் கண்ணீரையும் வருவித்து விட்டது. எதிர்பாராத நல்ல முடிவு.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்கள் நன்கு ஒலிக்கின்றன. படப் பிடிப்பு பல இடங்களில் சிறப்பாயிருக்கின்றன. வசந்தியும் பாஸ்கரும் சைக்கிளில் போகும்போது இரண்டு சக்கரங்களும் நெருங்கி, வளைந்து, பிரிந்து, சேர்ந்து போவதன்மூலம் அவர்கள் காதலைக் காட்டியிருப்பது நன்றாயிருக்கிறது.

கல்யாணப் பரிசு: நல்ல படம். தமிழ்ப் படம். ரசிகர்களுக்குப் புத்தாண்டுப் பரிசு!



கண்கள் உறங்காவோ?

அத்தியாயம் 3

அதிர்ச்சியை வென்ற மகிழ்ச்சி

கேசவபுரம் ஊருக்கும், ரயில்வே ஸ்டேஷனுக்கும் இடையே நல்ல ரஸ்தாக் கிடையாது. கரடு-முரடான, வண்டித் தடமே வழியாக அமைந்த ரஸ்தா அது. அதில் ஓடிக் கொண்டிருந்தது சச்சிதானந்தத்தின் சொந்த வில் வண்டி. மேட்டிலும் பள்ளத்திலும் வேகமாக ஏறி இறங்கியபோது வண்டியின் மேற்பாகம் 'ணங்-ணங்' கென்று அவர்கள் மண்டையில் போட்டது. அந்த ஒவ்வோர் இடியும் நெஞ்சில் விழுந்த அடியாக இருந்தது சச்சிதானந்தம் பிள்ளைக்கு.

ஸ்டேஷனிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தவர்கள் வழிநெடுக அழுது கொண்டும், வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டும் கடந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவர் அழுகையையும் தமது உள்ளத்து அழுகையாகவே உணர்ந்தார் அவர். துக்கத்தை வெளியே காட்டாமல் மறைத்துக் கொள்ளவே அவர் முயன்றார். கடவுள்மீது பாரத்தைப் போட்டு விட்டு, மகள் இந்த விபத்தில் சிக்கியிருக்க மாட்டான் என்ற நம்பிக்கையிலே மனத்தை நிலை நிறுத்தி விடப் பார்த்தார். பண்பட்ட அவர் உள்ளத்தின் ஒரு மூலையிலே, வாழ்வில் இதை விடப் பெரிய இடிகளைத் தாங்கிப் பழகியிருந்த அவருடைய நெஞ்சகத்தின் அடித்தளத்திலே, 'வரும் விதி வழித் தங்காது' என்ற வேதாந்தமும் ஒரு பக்கம் ஒலித்தது. ஆயினும், பாசத்தின் பேரொலியும்,



மாயாவி

வம்சத்தின் ஒரே வித்தையும் பறி கொடுத்து விட்டோமோ என்ற பரிதவிப் பின்எதிரொலியுந்தாம் எல்லாவற்றையும் மிஞ்சிக் கொண்டு மேலெழுந்து வந்தன.

சச்சிதானந்தத்தின் உள்ளம் வண்டி யின் வேகத்தையும் மிஞ்சிக் கொண்டு பாய்ந்தது. 'இந்த ஊரிலே மருந்துக்கு ஒரு காரைக் காண முடியாது. என்னவோ என் அதிர்ஷ்டம் இன்று தற்செயலாகச் சுந்தரம் வந்து அவன் காரும் கிடைக்கப் போகிறது. அதேபோல் ஏதாவது ஒரு தற்செயல் நிகழ்ச்சியினால் வினு பிழைத் திருக்கக்கூடாதா? ஏதாவது ஒரு நிகழ்ச்சி- முதல் வகுப்பில் இடம் கிடைக்காமல் அவன் இரண்டாவது வகுப்புப் பெட்டி யிலோ மூன்றாவது வகுப்புப் பெட்டி யிலோ ஏறியிருக்கக் கூடாதா? அல்லது சென்னையில் அவன் எங்கேயாவது ஹோட்டலில்தான் இறங்கி யிருப்பான். அவன்தான் சென்னைக்கு வந்ததே இல்லையே. மகாராஜா தாம் தங்கும் ஹோட்டலுக்கு எழுதி அவன் தங்கு வதற்கு இடவசதி செய்திருப்பார். ஹோட்டலிலிருந்து எழும்பூர் ஸ்டேஷ னுக்கு அவன் டாக்ஸியில்தான் வந்திருக்க வேண்டும். கடவுளே! அந்த டாக்ஸி வழியில் பழுதாகி அவன் இந்த ரயிலைத் தவற விட்டிருக்கக் கூடாதா?'

"ஐயா!" வண்டிக்காரன் மாடசாமி சச்சிதானந்தம் பின்னையைச் சிந்தனை உறக்கத்திலிருந்து உலுக்கி எழுப்பினான்.

"என்ன மாட சாமி? வண் டியை ஓட்டு சீக்கிரம்."

"அதுதான் காத்தாப் பறந்துக்கிட் டிருக்கே நம்ம கழுகுமலைச் செவலை ரெண்டும். வாயில்லாப் பிராணிகள்: அதுககூட நம்ம மனசு தெரிஞ்சு தானு கவே பாஞ்சுக்கிட்டுப் போகுது பாத்தீங் களா? எனக்கு ஒரு நினைப்பு வந்ததுங்க; எங்க 'ஐயா' சொல்லுவாரு......"

"வாயை மூடிக்கிட்டு இரு மாடசாமி. கதை பேசறத்துக்கு இதுதான் நேரமா?" என்று அவன் பேச்சில் குறுக்கிட்டுக் கடிந்துரைத்தாள் மாலா.

"நம்ம குழந்தை விஷயமாத்தான் சின் னம்மா ஒண்ணு தோணிச்சு; அதைச் சொல்ல வந்தேன். அதற்குள்ளே நீ என்னமோ கோவிச்சுக்கிடுறியே!"

"சொல்லு, மாடசாமி!" என்றார் சச்சி தானந்தம். இப்படிப்பட்ட பேச்சில் தமது துயரத்தின் வருத்தத்தைச் சிறிது குறைத்துக் கொள்ள விரும்பினார் போலும் அவர்.

"எங்க 'ஐயா' சொல்லுவாரு: இந்த மாதிரி, மாடுகள் தன்னையறியாம ஓடிச் சின்னு போன காரியம் செயந்தான் என் பாரு. அதுனாலே நம்ம குழந்தை சேமமா இருக்கும். கவலைப்பட்டுக்கிடாதீங்க."

"நாம் இப்போ விபத்து நடந்த இடத் துக்குப் போகலே 'மாடசாமி. தெற்குத் தெரு ஐயா வீட்டுக்குப் போறோம், தெரி யுமா?" என்று அவன் அசட்டுப் பேச்சுப் பிடிக்காதவள்போல் சொன்னாள் மாலா.

"அது தெரிஞ்சுதான் சொல்லுறேன். சின்னம்மா! அங்கே போனதும் அந்தச் சின்னையா கார் தயாராயிருக்கப் போகுது. ஐயா அதிலே ஏறிக்கிட்டுக் கோவிலூருக் குப் போகப் போறாங்க. அங்கே குழந்தை 'அப்பா'ன்னு ஓடி வந்து அவரைக் கட்டிக்கிடப் போகுது; நீ வேணுன்னுப் பாத்துக்கிட்டே இரேன்."

"உன் வாக்குப் பொன் வாக்காக இருக் கட்டும், மாடசாமி!" என்றார் சச்சிதானந் தம். ஆம், இத்தகைய ஆறுதல் மொழி களால்தானே அவர் உள்ளம் இப் போது சமாதானமடையவேண்டும்?



வண்டி தெற்குத் தெருவில் நுழைந்தது. மாடசாமி கைவிரலை நெற்றியின் மீது வைத்து, சூரியனின் கதிரை மறைத்துக் கொண்டு பார்வையை அந்த நீண்ட தெருவின் நடுவிலிருந்த புஷ்பவனம் பிள்ளையின் வீட்டு வாயிலுக்கு ஓட்டினான்.

"ஐயா வீட்டு வாசலிலே காரைக் காணோங்களே?" - அவன் குரலில் ஏமாற்றம் தொனித்தது.

"அத்தான் எப்பொழுதோ வந்திருப்பார், மாடசாமி. எப்போதும் அப்படித்தான்; காலையிலே மூணு மணி நாலு மணிக்குக் கிளம்பி எட்டு—ஒன்பதுக்குள்ளே இங்கே வந்துடுவாங்க. இப்போ என்ன பத்துமணி இராது? இதுவரைக்கும் வீட்டு வாசலிலா நிறுத்தி வைச்சிருப்பாங்க காரை?" என்றாள் மாலா.

ஆமாம்! ஆமாம்! நீ வண்டியை அவர் வீட்டு வாசலுக்கு விடு" என்றார் சச்சிதானந்தம் பிள்ளை.

வாசலில் வண்டிவந்து நின்றதைப் பார்த்துப் புஷ்பவனம் ஆச்சரியத்தோடு வெளியே ஓடி வந்தார். சச்சிதானந்தம் கீழே இறங்கியதைக் கண்டதும் அவருக்கு உண்டான ஆச்சரியம் இன்னும் அதிகமாயிற்று.

"என்னங்க! நீங்க ஸ்டேஷனுக்குப் போகலே?"

"ஸ்டேஷனிலேயிருந்து தான் நாங்க வரோம், தம்பி!"

"ஸ்டேஷனிலிருந்து வர்றீங்களா? இவ்வளவு நேரத்துக்குப் பிறகா? மணி பத்தாயிடிச்சே! வண்டி 'லேட்'டுங்களா?"



"வண்டி தடம் புரண்டுடிச்சாம் மாமா!" என்றாள் மாலா.

"ஆ! என்ன? எங்கே? எப்போ?"

"காலையிலே நாலு மணிக்குக் கோவிலூர்ப் பக்கமா."

"ஐயோ! வீணாவுக்கு ஏதாவது......"

"அதைத்தான் பார்க்கப் போகணும். சுந்தரம் வந்திருப்பான். காரை எடுத்துக்கிட்டுப் போகலாமின்னு ஸ்டேஷனிலிருந்து நேரடியா வரோம்."

"அட கஷ்டகாலமே! எப்போதும் எட்டு எட்டரைக்குள்ளே வந்துடுவான். இன்னைக்குப் பாத்து இன்னும் வரக் காணோமே. ஏனுங்க ஸ்டேஷன்மாஸ்டர் முதலியார்கிட்டே சொல்லிப் போன் பண்ணிப் பாத்தீங்களா?"

"அதெப்படீங்க முடியும்? வீணாவை யாருக்குத் தெரியும்? எப்படிக் கண்டு பிடிப்பாங்க?"

"ஆமாம், ஆமாம். ஆண்டவன் புண்ணியத்திலே நம்ம குழந்தைக்கு ஒண்ணும் ஆகியிருக்காது. இருந்தாலும் நாமே போய்ப் பார்த்தாத்தானே மனசுக்கு நிம்மதியாயிருக்கும்? வெளியே நிற்கிறீங்களே. உள்ளே வந்து உட்காருங்க. பையன் வர சமயந்தான். வந்ததும் அப்படியே காரை எடுத்துக்கிட்டுப் போயிட்டு வந்துடலாம். இந்தாம்மா மாலா, நீயும் இறங்கி உள்ளே அத்தைகிட்டே போய் இரு. அம்மா!"

மாலா வண்டியிலிருந்து இறங்கப் போனாள். ஆனால் அதற்குள் சச்சிதானந்தம் குறுக்கிட்டு, "வேண்டாங்க. வீட்டிலே தைலம்மா இந்தச் சேதிகேட்டு அழுதுக்கிட்டிருப்பா. நாங்க வீட்டுக்கே போய் விடுகிறோம். நீங்கசுந்தரம் வந்ததும் காரோடு அங்கே அனுப்புங்க" என்றார்.

"அனுப்பறது என்ன? நானே கூட்டிக்கிட்டு வந்துடமாட்டேன்? பாவம், ஊர்—வழி தெரியாமல் அங்கே வீணா எப்படித் தவிச்சுக்கிட்டிருக்குதோ?"

"தவிச்சுக்கிட்டிருந்தாத் தேவலாமே தம்பி........" சச்சிதானந்தம் மேலே சொல்லாமல் நிறுத்திக் கொண்டார்.

"என்னங்க பேச்சு இது? ஒங்க குழந்தைக்கு அந்த மாதிரியெல்லாம் ஒண்ணும் ஏற்படாதுங்க."

"ஒங்க வாக்குப் பொன் வாக்காக இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு வண்டியில் ஏறிக்கொண்டார் அவர். பிறகு, "சுந்தரம் வந்ததும் சாமான்களை இறக்கி வச்சுட்டு வந்துடுங்க. எனக்கு இங்கே இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் மூன்று மேலே இருக்கிறாப் போலே இருக்கு" என்றார் அழாக்குறையாக.

"எனக்கும் அப்படித்தான். அதெல்லாம் ஒண்ணும் கவலைப்பட்டுக் கிடாதீங்க. வீணா நல்லாத்தான் இருக்கும்."

வண்டி நடுத் தெருவை நோக்கி வேகமாக நகர்ந்தது.

* * *

இதற்குள் விபத்துச் செய்தி நடுத் தெரு எங்கும் பரவி விட்டிருந்தது. சச்சிதானந்தம் வீட்டுக்குப் போகுமுன்பே அங்கே அண்டை-அயலார் வந்து கூடியிருந்தனர். அவர் எல்லாரிடமும் அன்பாகப் பழகுபவர். ஆகையால் அவர் மகள் விபத்துக்குள்ளாகியிருக்கிறாளென்று அறிந்ததும், அதுபற்றி விசாரித்து அவருக்கு ஆறுதல் கூறுவதற்காக அனைவரும் அங்கே கூடிவிட்டனர்.

எல்லாரும் ஒரே வாக்காக அவளுக்கு ஒன்றும் ஏற்பட்டிராது என்றுதான் கூறினர். அவர்களுடைய ஆத்மார்த்தமான பிரார்த்தனையும் அதுவேதான். ஆனால் அவர்களுடைய ஆறுதல் மொழிகளெல்லாம் சச்சிதானந்தத்துக்கு வெறும் சம்பிரதாயமாகவே பட்டன. அவர் மனம் இப்பொழுது நம்பிக்கை இழந்து விட்டது. ஜோசியம், ஆருடம், சூசகம், சகுனம் இதிலெல்லாம் நம்பிக்கையுடைய அவர், சுந்தரத்தின் கார் தயாராக இருக்கும், உடனே ஏறிப் போய்விடலாம் என்றெண்ணியிருந்த வரையில் ஓரளவு திடத்துடன் இருந்தார். அதை ஒரு சுப சூசகமாகக்கூடக் கருதினார். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக அவன் வராதிருந்ததைக் கண்டபோது அவருடைய திடம் குலைந்துவிட்டது. அந்தச் சுப சூசகம் அபசூசகமாக மாறிப் போயிற்று. அந்த நிமிஷம் முதலே அவர் நடைப் பிணமாகி விட்டார்.

அன்றொரு நாள் சுமார் பதினெட்டு வருஷங்களுக்கு முன்பு அவருக்கு வாழ்வு சுவையற்றுப் போயிற்று. அப்பொழுது இந்த வீணாவுக்காகத்தான் அவர் துறவு பூண்டு தேசாந்தரம் செல்லும் நினைவை ஒதுக்கித் தள்ளினார். இன்று அந்த வீணாவும் போய் விட்டாள். 'இவளைக் காப்பாற்ற வேண்டும்; காப்பாற்றுவதற்காகத் தாம் வாழவேண்டும்!' என்று அன்று தீர்மானித்து, அதற்காக இத்தனை வருஷங்கள் காத்தும் இருந்தார். கடைசியில் அவருடைய நிலை இலவுகாத்த கிளியின் கதை ஆகிவிட்டது. பழம் பழுக்காததோடு, வெடித்துப் பஞ்சையும் உடலெல்லாம் பரப்பிவிடும் இலவங்காயைப்போல் இவளும் செய்துவிட்டுப் போய்விட்டாள். உண்மையில் இனி யார் இருக்கிறார்கள் அவருக்கு? யாருக்காக அவர் இந்தப் பாவ உடலைச் சுமந்து திரிய வேண்டும்? 'உங்கள் பணம் பாவத்தில் உருவானது; அதில் பங்குகொள்ள எனக்கு விருப்பமில்லை' என்று சொல்லாமல் சொல்லி, உணர்த்தாமல் உணர்த்தி விட்டுப் போவதுபோல் அல்லவா அவள் போய் விட்டாள்? இல்லாவிட்டால் இந்த ஊருக்கு ஐம்பது மைல் தூரம் வரையில் வந்து சேர்ந்த பிறகு அவளுக்கு முடிவு ஏற்படுவானேன்?

"நான் அத்தனை பாவியா இறைவா? பெற்ற மகள்கூடப் புறக்கணித்து விடும் அளவு அத்தனை பாவங்களையா இந்த உடலில் சுமந்து கொண்டிருக்கிறேன்? அப்படியானால் எதற்கு இந்த உடலை இத்தனை நாட்களாக இவ்வுலகில் உலவ விட்டு வைத்தாய்? அன்றே அழித்து

விட்டிருக்கக் கூடாதா இதை?" சச்சிதானந்தத்தின் உள்ளம் புலம்பிற்று; வாய் பலம்பிற்று; உடலே புலம்பிற்று.

தமது வாழ்நாளில் அவர் எத்தனையோ துன்பங்களை அநுபவித்திருக்கிறார். எத்தனையோ துயர்களைச் சகித்திருக்கிறார். ஆனால் அவை எல்லாவற்றையும்விடப் பெரிய துன்பமாகவும், துயரமாகவும் இருந்தது இது. வாழ்க்கை தனக்கு ஆசைகாட்டி மோசம் செய்து விட்டது போலவே பட்டது அவருக்கு. இதுவரை எடுத்த எல்லாப் பிறவிகளிலும், செய்த எல்லாப் பாவங்களுக்கும் சேர்த்து விதிக்கப்பட்ட ஒரே தண்டனை இது என்று அவர் கருதினார். அவருடைய உள்ளம் ஒருமிக்க முடியாதபடி உடைந்து சிதறி விட்டது. ஒன்றே ஒன்றுக்காக—இறந்த மகளின் உடலையாவது ஒரே ஒரு தடவை பார்த்துவிட வேண்டும் என்பதற்காகத் தான் அவர் இப்பொழுது காத்துக் கொண்டிருந்தார்.

யார் யாரோ வந்தார்கள்; என்னென்னவோ சொன்னார்கள். அவை அவர் காதில் விழுந்தன. ஆனால் கருத்தில் பதியவில்லை. அவர் கருத்து இப்போது ஒன்றில்தான் லயித்திருந்தது.

கார்! கார்!

"பூம்! பூம்!"

ஆம், கார்தான்! வந்து விட்டான் சுந்தரம்! சுவரோடு சுவராகச் சாய்ந்து சோகப் பித்தாய் உட்கார்ந்திருந்த சச்சிதானந்தம் துள்ளி எழுந்து வாயிலுக்குப் பாய்ந்தார்.

சுந்தரமேதான். பாவம், வந்த காலோடு இங்கே திரும்பியிருக்கிறான். சாமான்களைக் கூட இறக்கி வைக்கவில்லை போலும்! அதோ 'டாப்'பில் அப்படியே இருக்கின்றனவே அவனுடைய பெட்டிகள், படுக்கை எல்லாம்.

"சுந்தரம்! வந்து விட்டாயா, சுந்தரம்!"

"அப்பா!"

ஆ! இது யார் குரல்?



சச்சிதானந்தத்தின் கண்கள் காரின் முன் 'சீட்'டை நோக்கின. அங்கே சுந்தரத்தின் அருகில் அமர்ந்திருக்கும் பெண் யார்?

"வீணா!"—இந்த உலகமே அதிரும்படி வீறிட்டார் அவர்.

* * *

வீணாவுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. அப்பா இத்தனை ஆர்வத்துடன் ஓடி வந்து தன்னைக் கட்டிக் கொண்டதுகூட அவளுக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. ஏனென்றால் அவர்கள்—தந்தையும் மகளும்—சந்தித்துக் கொண்டு கிட்டத்தட்ட மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. ஆனால் தன் வீட்டின் முன் ஏன் இத்தனை கூட்டம்? ஏன் எல்லாருடைய முகத்திலும் இத்தனை பரபரப்பு? ஒருகால் வயதான அத்தைக்கு ஏதாவது..?

அவளுடைய இந்தத் திகில் கலந்த நினைவைச் சச்சிதானந்தத்திடமிருந்து தொடர்ந்து வந்த பேச்சு உடனே போக்கி விட்டது. "வந்தாயா, அம்மா? ஆண்டவன் உன்னை எனக்கு உயிருடன் மீட்டுத் தந்தாரா?" என்று தேம்பினார்.

"என்ன அப்பா! என்ன நடந்து விட்டது? ஏன் இந்தப் பதற்றம்?" என்று வியப்பு அடங்காமல் வினவினாள் வீணா.

சச்சிதானந்தத்தால் சட்டென்று மகளின் கேள்விக்கு விடையளிக்க முடியவில்லை. அதிர்ச்சியை வென்ற மகிழ்ச்சி அவர் வாயைக் கட்டி விட்டது.

இதற்குள் தெருவில் நின்ற சிலரின் உதவியுடன் வீணாவின் பெட்டி படுக்கைகளைக் காரின் 'டாப்'பிலிருந்து இறக்கி வைத்து விட்டு விட்டுத் திண்ணைக்கு வந்தான் சுந்தரம். "வணக்கம், மாமா! சுகந்தானே?"

"சுந்தரம்!" என்று மகளை விட்டுவிட்டு அவனை அள்ளி அணைத்துக் கொண்டார் சச்சிதானந்தம். "என் அப்பனே! என் மகளை உயிரோடு கொண்டு வந்து சேர்த்து என் வயிற்றில் பாலை வார்த்தாயே! நீ ஆயிரம் காலம் நல்லா இருக்க வேணுமடா!"

சுந்தரமும் வீணாவும் ஒருவரையொருவர் வியப்புடன் நோக்கிக் கொண்டனர். "பார்த்தீங்களா, அம்மா? நம்ம ஊருக்குத் தந்தி ஆபீசு இல்லையே என்று வரும் வழியில் குறைப்பட்டுக் கொண்டீங்களே; அதற்குள்ளே இங்கே செய்தி எட்டி விட்டதைப் பார்த்தீங்களா?" என்று வீணாவிடம் சொன்னான் சுந்தரம்.

"ஆனால் மிஸ்டர் சுந்தரம், அந்தச் சின்ன விபத்துக்கா இத்தனை கலக்கம்? இத்தனை கூட்டம்?" என்று வியப்புற்றாள் வீணா.

"சின்ன விபத்தா? நல்லாத்தான் சொன்னாய் போ. முதல் மூன்று பெட்டிகள் அடியோடு நொறுங்கி விட்டன. அதிலே ஒன்று முதல் வகுப்புப் பெட்டி என்று கேள்விப்பட்டதும் என் உயிரே போயிடுத்தே, வீணா. உன்னை உயிருடன் பார்ப்பேனென்று நான் நினைக்கவே இல்லையே!"

"நீங்க என்ன சொல்றீங்க, மாமா? என்னவோ பெட்டி நொறுங்கிப் போச்சு என்கிறீங்களே, என்ன விஷயம்?" என்று திகைப்புடன் கேட்டான் சுந்தரம்.

"என்னப்பா வேடிக்கை பண்ணுகிறே சுந்தரம்? நம்ம ஊருக்கு ஒரு தந்தி ஆபீசு இல்லேன்னாலும் ரயில்வே ஸ்டேஷன் இருக்குதப்பா. சென்னைப் பாசெஞ்சர் தடம் புரண்ட விஷயம் இங்கே காலையிலேயே தெரிஞ்சு போச்சு" என்றார் அருகில் நின்ற பெரியவர் ஒருவர்.

"சென்னைப் பாஸெஞ்ஜர் தடம் புரண்டு விட்டதா? எங்கே? எப்பொழுது?"

"சுந்தரம் நம்மைக் 'கோட்டா'ப் பண்ணுதுங்க. காரிலே வந்துக்கிட்டிருக்கிற போது அந்த விஷயம் தெரிஞ்சு வண்டி தடம் புரண்ட இடத்துக்குப் போய், ஐயா மகளைக்கூட்டிக்கிட்டு வந்திருக்குது. இடக்குப் பேசுதைப் பாருங்களேன், இடக்கு!" என்றார் மற்றொரு முதியவர்.

"அட, பாவமே! நான் அந்த ரயிலில் வந்ததாக நினைத்துக்கொண்டா இவ்வளவு அதிர்ந்து போய் விட்டீர்கள், அப்பா? நான் நேற்றே தந்தி அனுப்பியிருந்தேனே, கிடைக்கவில்லையா?"

"தந்தி கிடைத்தது அம்மா. ஆனால் காரில் வருவதாக நீ குறிப்பிடவில்லையே!"

"குறிப்பிடவில்லையா? தந்தியே அதற்காகத்தானே அப்பா அனுப்பினேன். தெளிவாக, ஸ்டேஷனுக்கு யாரும் வர வேண்டாம்; மிஸ்டர் சுந்தரத்தின் காரில் வருகிறேன் என்று அதில் குறிப்பிட்டிருந்தேனே."

"அப்படி ஒரு தந்தியும் இங்கே வரலை, வீணா' எனக்கு நேற்றுக் கிடைத்த தந்தி, நீ காசிப்பூரிலிருந்து கிளம்பினபோது கொடுத்த தந்தி ஒன்றுதான்."

"இப்போ என்ன சொல்றீங்க, மிஸ்டர் சுந்தரம்? அந்தத் தந்தி சமயத்திலே இங்கே வந்து சேர்ந்திருக்குமா என்று நான் கவலைப்பட்டது சரியாகப் போய் விட்டது. பார்த்தீங்களா? தந்தி ஆபீசு இல்லாத ஊர்களில் இப்படித்தான்......"

அவள் வார்த்தையை முடிக்கவில்லை. 'கிணிங் – கிணிங்' என்று சைக்கிள் மணியை ஒலித்துக் கொண்டு புயல் வேகத்தில் அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றான், பக்கத்து டவுனான சேரவாய்மலைத் தந்தி ஆபீசுச் சேவகன். "ஸார் தந்தி!"

"கையெழுத்துப் போட்டு வாங்கிப் பாருங்க. இது யாராவது போன மாசத்திலே அடிச்ச தந்தியாக இருக்கப் போகுது" என்று இடக்காகக் கூறினான் கூட்டத்தில் நின்ற ஓர் இளைஞன்.

சச்சிதானந்தம் சிரித்துக் கொண்டே தந்தியைக் கையொப்பமிட்டு வாங்கிப் படித்துவிட்டு, "இல்லை தம்பி! இது வீணா நேற்று பட்டணத்திலேயிருந்து அனுப்பின தந்திதான்" என்றார்.


"சரி, என்னமோ போங்க. மகள் ஒன்றுமில்லாமல் வந்து சேர்ந்துட்டாளே. அதுதான் பெரிசு" என்று கூட்டத்தில் இருந்த பெரியவர் ஒருவர் கூறிவிட்டு "வரேங்க" என்று விடை பெற்றுக் கொண்டு நடந்தார். அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் விடை பெற்றுக்கொண்டு கலைந்தனர்.

"உள்ளே வா, அம்மா; உள்ளே வா, சுந்தரம்" என்று வீட்டினுள்ளே திரும்பினார் சச்சிதானந்தம்.

இது வரையில் வீட்டு நடையில் பதுங்கியவாறு சன்னல் வழியாக இந்தக் காட்சிகளைப் பார்த்து நின்ற ஓர் உருவம் அவர்கள் திரும்பியதும் மெல்ல உள்ளே நழுவி ஓட முயன்றது.

"அட! நீ இங்கேயா நின்னுக்கிட்டிருந்தே? நில்லு அம்மா. அக்கா–அக்கா என்று பறந்துக்கிட்டிருந்தியே! அக்காளைக் கண்டதும் வெட்கம் வந்துட்டதா?" என்று புன்சிரிப்புடன் கூறிய சச்சிதானந்தம் மகளிடம் திரும்பி, "நம்ம மாலா அம்மா" என்றார்.

மாலா நின்றாள். திரும்பினாள். ஆனால் அவர்களை நோக்கி வரவில்லை. தலையைத் தாழ்த்திக் கொள்வதும், கண நேரம் முகத்தை நிமிர்த்தி வீணாவைப் பார்ப்பதும் தாவணியின் நுனியை விரலால் சுருட்டுவதுமாக நின்றாள். (தொடரும்)



கல்கி

மாவட்டச் சிறுகதைப் போட்டி

முதற் பரிசு ரூ. 200. இரண்டாவது பரிசு ரூ 100

❊

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ் நாட்டின் மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும் எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

இரண்டாவது போட்டி

நெல்லை மாவட்டம்

விதிகள்

1. கதைகள் நெல்லை மாவட்டத்தின் சூழ்நிலை எல்லா வகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். நெல்லைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊர்கள், பழக்க வழக்கம், தொழில், பாபநாசம், குற்றாலம் அருவிக் கரை, தாம்பிரவர்ணி நதிதீர வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இந்தப் போட்டியில் இடம் பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரே எழுத்தாளர் ஒன்றுக்கு மேற்பட்டும் கதைகள் அனுப்பலாம்.

4. பரிசுக்கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசுபெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதியுடையவை, உரிய சன்மானம் அளித்துக் 'கல்கி'யில் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்க வேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. நெல்லை மாவட்டப் போட்டிக்கான கதைகள் மே மாதம் 31-ந் தேதிக்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும்.

9. போட்டி முடிவு ஜூன் மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், கதைகளின் தலைப்புக்களிலும் "கல்கி நெல்லை மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:—நெல்லை மாவட்டச் சிறுகதைப் போட்டியின் முடிவு வெளியானதும், அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர், கல்கி

துறவியின் பயணம்

ஒருநாள் காலை காவேரியின் ஒரு கிளையான அமுதவாகினி ஆற்றின் கரையின்மேல் வயோதிகரான ஒரு சன்னியாசி நடந்து போய்க் கொண்டேயிருந்தார். வெண்சாமரம் போல நீண்ட நரைத்த தாடியும், பிசிறில்லாமல் வாரிக் கோதிய தலை முடியும், அழுக்கேறாத கதர்க் காவி உடையும் அவருடைய வாட்ட சாட்டமான உடல் அமைப்புக்கு ஏற்றவண்ணம் பொருந்தி யிருந்தன. கம்பீரமும் அமைதியும் நிரம்பிய கவலையில்லாத மனம்போல் ஆற்றின் இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு குழப்பமில்லாமல் தண்ணீர் பிரவகித்துக் கொண்டிருந்தது. வயல்களில் உழவர்கள் மொட்டை மாடுகள்பூட்டிய கலப்பைகளைப் பின்பற்றிச் சேற்றில் நடமாடிக் கொண்டிருப்பதை அவர் பார்த்துக் கொண்டே போனார். நாற்றங் கால்களில் இளம் நாற்றுக்கள் தளதளவென்று காற்றில் அலை வீசிக்கொண்டிருப்பதைக் கண்டு மனமகிழ்ந்தவர் போல் அவர் புன்முறுவல் செய்தபடியே நடந்தார். ஆற்றின் கரையிலிருந்து பார்த்தால் கண்களுக்கு எட்டிய வரையில் வயல்கள், நடுநடுவே கருவேல மரங்கள், தென்னந் தோப்புகள். சிறுசிறு குப்பங்கள் இப்படியே வழி நெடுகத் தென்பட்டன. 'கிழவி வயதாகிவிட்டதை உணர்ந்து முடிவு காலத்துக்கு முன் தான தருமம் செய்வதைப் போல் காவேரி நெடுந் தூரத்திலிருந்து சேகரித்துக் கொண்டு வந்த தண்ணீரைத் 'தஞ்சாவூர் ஜில்லாவில் விநியோகம் செய்து அதை வளமுள்ளதாகச் செய்கிறாள்' என்று எண்ணிச் சிரித்தார் அவர். நாற்றுநடும் பெண்களின் வழி வழி வந்த பாட்டின் இன்னிசையைக் கேட்டு அவர் களிப்பு எய்தினார். ஓரிடத்தில் அமுதவாகினி ஆற்றிலிருந்து அதன் லயன் கரை பிரியத் தொடங்கியது. ஆற்றுக்கும் கரைக்கும் இடையேயுள்ள படுகையில் மூங்கில் கொத்துக்கள் செழுமையாக வளர்ந்திருந்தன. வாழைக் கொல்லைகள் கரையிலிருந்து ஆற்றையே காண முடியாமல் மறைத்து விட்டன. வேலிக்கால்களாக வாழ்க்கை தொடங்கிய தேக்குக் கன்றுகள் இப்போது பருத்து உயர்ந்து வளர்ந்திருந்தன. நெளிநெளியான ஓரமுள்ள கரும் பச்சை இலைகள் அடர்ந்த நெட்டிலிங்க மரங்கள் அந்தத் தேக்க மரங்களுடன் உயரத்தில் போட்டியிட முடியவில்லை. அகலமான ஒரு தேக்கு மரத்தின் சருகைக் கீழே யிருந்து பொறுக்கி யெடுத்துத் தமது இடது கை விரல்களுக்கிடையே அதன் காம்பைப் பற்றிச் சுழற்றிக்கொண்டே அவர் பார்த்தார். அதை எறிந்து விட்டு மேலும் நடந்தார்.



கப்பும் கிளையுமாக உயர்ந்து படர்ந்திருந்த ஓர் ஆல மரத்துக்கு அப்பால் ஒரு பாழடைந்த கோயில் இருந்தது. தஞ்சாவூர்க் கோபுரத்தின் பாணியிலே சிறிதாக எப்பொழுதோ யாரோ கட்டியது அது. "கோயில் கட்டினால் மட்டும் போதுமா, அதன் நிர்வாகத்துக்கும் ஏற்பாடு செய்திருக்க வேண்டாமா? ஹூம், கல்லாலும் சாந்தாலும் கட்டிய கோவிலே அழிவு காணும்போது

ஞ்சை மாவட்டச் சிறுகதைப் போட்டி:

முதற் பரிசு பெற்ற கதை

மனித வாழ்க்கை எம்மாத்திரம்?" என்று சிந்தனை செய்தார். 'கு' என்று தம்முடைய எண்ணத்தைக் காற்றாய்த் துப்பி விட்டு ஆற்றை யடைந்தார் சந்நியாசி.

★

உழுது களைத்திருந்த ஜோடி மாடுகளையும் ஆலமரத்தின் அடிக்கு ஓட்டி வந்தான் மாரிமுத்து. மாடுகளை ஒரு மரத்தில் கட்டிவிட்டுக் குளிப்பதற்கு ஆற்றில் இறங்கினான்.

மாரிமுத்துவுக்குப் பூர்வீகச் சொத்தாக மூன்று ஏக்கர் நன்செய் நிலமும், சாத்துக்குடி திரௌபதை அம்மன் கோயில் தெருவில் ஓர் ஓட்டுவில்லை வீடும் உண்டு. சென்னப்பட்டணத்தில் வக்கீலாக இருந்த சீதாராம பிள்ளையின் பன்னிரண்டு ஏக்கர் நிலத்தையும மேல்வாரக் குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுத்து அவன் சாகுபடி செய்து கொண்டிருந்தான். சென்ற வருட மகசூலில் நல்ல மிச்சம்தான். இடைக்காலப் பயிராக உளுந்தும் பச்சைப் பயிறும் ஏராளமாக விளைந்து நல்ல லாபம் வந்தது. இறைவன் புண்ணியத்தால் ஒன்றும் குறைவில்லை. ஆனால்......

இந்த 'ஆனாலுக்கு'ப் பின்னாலுள்ள குழப்பமான விஷயத்தை அவனால் சுலபமாக நிவர்த்திக்க முடியவில்லை. அவன் சிக்கலை யைக் கிளறி விட்டுக் கொண்டேயிருந்தான்.

"என்னாங்க! எத்தனை நேரமாகக் காத்துக்கிட்டிருக்கிறது? சடுதியா தலை முழுகிட்டு வந்து சாப்பிட்டுப் போங்களேன்" என்ற குரலைக் கேட்டுத்தான் தலை நிமிர்ந்து பார்த்தான்



மாரிமுத்து. அவன் மனைவி அம்சவல்லி பெரிய பித்தளை டிபன் பாத்திரத்தில் சாப்பாடு கொண்டு வந்திருந்தாள்.

மாரிமுத்து எழுந்து காய்ந்த துணியை உடுத்திக் கொண்டு கோயிலில் தங்கியிருந்த சாமியாரிடம் போய்த் திருநீறு வாங்கி நெற்றியில் பூசிக்கொண்டு வந்தான். ஒரு வாரமாகச் சாமியார் வந்ததிலிருந்து இது வழக்கமாகி விட்டது அவனுக்கு. அம்சவல்லி வாழை இலையை எடுத்துப் போட்டுப் பரிமாறிக் கொண்டே, "உங்க தம்பி செஞ்ச காரியத்தைக் கேட்டீங்களா? மாமரத்தை வாள்காரனிடம் விலைக்குப் பேசி வித்துட்டாரு நூத்திப் பதினைஞ்சு ரூபாய்க்கு. நூறு ரூபாய் வாங்கியாச்சு. இந்நேரம் ஆளுங்க வெட்டிக்கிட்டிருப்பாங்க" என்று பேச்சைத் தொடங்கினாள்.

மாரிமுத்து பரபரப்படைந்து அவளை நிமிர்ந்து பார்த்தான். 'சாப்பிடுங்க, சாப்பிடுங்க. இப்ப என்ன வந்திச்சு? தேங்கா, வாளைக்கான்னு இருந்தது. இப்ப மரத்துக்கும் வந்திடுச்சு. பலனோடு நின்னது இப்ப முதலுக்கே முனைச்சிடுத்து."

"நீ ஒண்ணுமே சொல்லலியா?" என்று கேட்டான் மாரிமுத்து.

"நல்லா இருக்குதே கதை? வாள்காரன், வீரய்யன், கொளந்தை, சோமு வாண்டையாரு இத்தனை பேரு நின்னுக்கிட்டிருக்காங்க. இவரு பஞ்சாயத்துத் தலைவரு. நான் ஒரு பொம்புளை, அஞ்சு ரெண்டும் தெரியாதவள். அவங்களுக்கு முன்னாலே போய் மரத்தை வெட்ட வேணாம்னு எப்படிங்க சொல்லுறது?"

"சீ, நாயே! வெளியே போடான்னு சொல்ல வெகு நேரம் பிடிச்சிடாது எனக்கு. ஊருக்காகப் பார்க்கல்லே. சத்தியத்துக்குக் கட்டுப்பட்டுச் சொன்ன வாக்கை மீறப்படாதுன்னு பொறுமையா இருக்கேன்."

"அப்படி எத்தனை நாட்கள்தான் இருப்பீங்களோ? எதுக்கும் ஒரு அளவு வேணுங்களே? ஒங்க அப்பாரு சாவறதுக்குள்ளே சொன்னாரு. தம்பியைக் கைவிட்டுடாதே. சாக்கிரதையா பாத்துக்கோன்னாரு. வாஸ்தவம். தம்பி சரியா இல்லாட்டின்னு ஷரா போட்டீங்களா?"

"அதிகமாப் பேசாதே, அம்சவல்லி! சாகப் போகிற மனுசன் கிட்டே, அப்போ சின்னஞ் சிறு குழந்தையா இருந்த தம்பி, பின்னாலே எப்படியெல்லாம் ஆகப்போறான்னு யோசனை பண்ணி 'கண்டிஷன்' போடறதா? இல்லே கேக்கறேன்!"

"சாப்பிடுங்க. சாப்பிடுங்க. நான் இனிமேல் இது பத்திப் பேசலை."

உண்டு முடிந்து கை கழுவி வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தான் மாரிமுத்து. அவன் ரத்தம் கொதித்தது. "நான் வரேன்" என்று கிளம்பினாள் அம்சவல்லி, பாத்திரத்தைக் கழுவிக்கொண்டு.

"ஹர சங்கர மகாதேவா!" என்று கணீரென்று உச்சரித்துக் கொண்டே சன்னியாசியும் உணவருந்தி விட்டு ஆற்றில் கைகழுவ வந்தார். உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருந்த மாரிமுத்துவைப் பார்த்து, "என்ன அப்பா மாரிமுத்து, என்னவோ விசாரப்பட்டுக் கொண்டிருக்கிறாயே! இல்லறத்தில் எத்தனையோ சங்கடங்கள் இருக்கத்தான் இருக்கும்" என்றார். மாரிமுத்து எழுந்து கைகட்டிக் கொண்டு நின்றான். அவர் கைகழுவிக் கரையேறியதும், "ஒன்றும் பெரிய விசயமில்லீங்க. தம்பி ஒருத்தன் இருக்கிறானுங்க. பஞ்சாயத்து பிரசிடெண்டு ஆயிருக்குறானுங்க. அவனைப் பத்தித்தான் யோசனை பண்ணிக்கிட்டிருக்கிறேன்" என்றான் மாரிமுத்து.

"பஞ்சாயத்துப் பிரசிடெண்டா இந்த ஊரில், உன் தம்பி? மிக்க சந்தோஷம்."

"சந்தோசம்னு நீங்க சொல்றீங்க. ஆனா நான் சந்தோசப்படும்படியா அதிலே ஒண்ணுமில்லீங்களே!"

"ஏன், அவன் பஞ்சாயத்துப் போர்டு பிரசிடெண்டா யிருப்பதிலே உனக்கு என்ன ஆட்சேபம்?" என்று கேட்டார்.

"அதெல்லாம் நமக்குக் கட்டுப்படியாயி வருங்களா? எஸ். எஸ். எல். சி. படிச்சு பாஸ் பண்ணியிருக்கிறானுங்க. அப்புறம் டயிப் அடிக்கிறது என்னவெல்லாமோ தேறியிருக்கிறானுங்க. அவனோடு கூடப் படிச்சது, நம்ம கணக்கப்பிள்ளை மவன் கல்கத்தாவிலே போய் மாசம் மூந்நூறு ரூபாய் சம்பாதிக்குதுங்க. அந்தக் குழந்தை இவனோடு ஈடு கொடுக்காதுங்க. இவன் மார்க்கு பஸ்டுங்க."

"அப்படியா, அவரவர் அதிருஷ்டம். அப்படித்தானே?"

"அதிர்ஷ்டம்தாங்க! முன்னாடியே என் தம்பிக்கு இதே ஊரிலே பஞ்சாயத்துப் போர்டிலே மாதம் அறுபது ரூபாய் சம்பளம் கிடைச்சதுங்க. குமாஸ்தாவும் பில் கலெக்டரும் இவன்தாங்க. இவன் வெச்சதே சட்டமாயிருந்ததுங்க. முன்னாலே இருந்த பிரசிடெண்டு நல்லவர்தாம். இவன் நீட்டின இடத்திலே கையெழுத்துப் போடுவாரு. போவுதாங்காட்டியும் வெளியூரிலே போய் இருநூறு ரூபாய் சம்பாதிக்கிறதைவிட உள்ளூருலே அறுபது ரூபா போதும்னு நெனச்சேன்."

"அப்படியே குமாஸ்தாவாகவே இருப்பதுதானே?"

"சொல்றது இல்லீங்களா, கேட்பார் பேச்சைக் கேட்டு நாட்டான் வாய்க்கால் சாலேபோடு போவறதுன்னு? ஊரிலே இருக்கிறவங்களெல்லாம் கிளப்பிவிட்டாங்க. எலக்ஷன் வந்திச்சு. பஞ்சாயத்து மெம்பர் ஆனான். போட்டியே நிக்கல்லே. ஊரிலே நல்ல பிள்ளைன்னு பேர் வாங்கிட்டான். சம்பளம்தான் இல்லே. ஊருக்குக் கரும்பு, வீட்டுக்கு வேம்புன்னு சொல்லுவாங்களே, அந்த மாதிரிதான் ஆச்சுங்க."

"பஞ்சாயத்துப் பிரசிடெண்டாகப் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்படுவது பெருமைப்படும் விஷயம்தானே?"

"அதென்னங்க, நீங்க விஷயம் தெரிஞ்சவங்களாயிருந்தும் இப்படிச் சொல்றீங்களே! சொத்து நிறைய இருக்கணும் கவலையில்லாமே உக்காந்து சாப்பிட

வசதி இருக்கணும். அப்ப கௌரவத்துக்கு ஆசைப்படலாம். பிரசிடெண்டு வேலேன்னு சர்க்காரிலே சம்பளம் கொடுக்கிறாங்களா? அவனுக்குப் பிள்ளைகுட்டி இருக்கு, பெண்சாதி இருக்கிறா. அவங்க காலட்சேபத்துக்கு முன்னாடி வழியைப் பாக்க வேணும்? இத்தினி கஷ்டப்பட்டு நான் அவனைப் படிக்க வெச்சதுக்கு ஏதாவது உத்தியோகத்துக்குப் போனால்லே நல்லாயிருக்கும்? ஊருக்கு உழைச்சுக் கண்ட பலன் என்ன? ஏண்டாப்பா அவனைப் படிக்க வெச்சம்னு தோணுது. படிக்காதவனாயிருந்தாலும் நிலபுலன் காடு கரையைக் கவனிச்சுக்கிட்டுருப்பான். படிச்சவன் உழுவானுங்களா? வெள்ளை வேட்டியைக் கட்டிக்கிட்டுச் சட்டை போட்டுக்கிட்டு நிழல்லே இருப்பான்!"

"ஏன், படித்தவர்கள் உழக் கூடாது என்று சட்டமா?" என்று கேட்டுச் சிரித்தார் பெரியவர்.

"ஏஞ்சாமி வவுத்தெரிச்சலைக் கிளப்பறீங்க? நடைபெறுகிற காரியமா? முள்ளுக் குத்திடுமேன்னு செருப்பைக் கனட்டாம நடக்கிறவங்க வயலிலே இறங்கினா சேத்துப் புண் வந்திடாது? நான் ஒத்தன் சம்பாதிச்சுப் போடறது. அவன் வெய்யில் படாமெ, மழையிலே நனையாமே நாற்காலியிலே உக்காந்திருக்கிறது. இது நியாயமா சொல்லுங்க!"

சற்று நேரம் சந்நியாசி மௌனமாயிருந்தார். அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் மாரிமுத்து. அவருடைய முகம் மகிழ்ச்சியில் பிரகாசித்தது.

"மாரிமுத்து! நான் உன் தம்பிக்குப் பதிலாக வேலை செய்கிறேன்; உழுகிறேன். நாற்றுப் பறிக்கிறேன். அவனிடம் என்ன வேலையை எதிர்பார்க்கிறாயோ அதைவிட அதிகமாகச் செய்கிறேன். எனக்கு நீ ஒரு படி நெல்கூடக் கூலியாய்த் தர வேண்டாம். உன் தம்பி பஞ்சாயத்துத் தலைவராயிருந்து ஊருக்கு நல்லது செய்வதில் தன் நேரத்தை ஈடுபடுத்தட்டும்."

தேன் கொட்டியவனைப் போலப் பதறியெழுந்தான் மாரிமுத்து. "என்னங்க சாமியாரே! அந்தப் பாவம் வேணும். நீங்க அவன் வேலையைச் செய்யறதா? வேணாங்க, வேணாங்க!" என்றான்.

"இல்லே, மாரிமுத்து! பாவம் இல்லே. என்னைத் தடுப்பதுதான் பாவம். இந்த நிலம் உன்னுடையதும் இல்லே. மிராசுதாருடையதும் இல்லே. நாட்டின் மக்களுடையது; பசியுள்ள மக்களுடையது. அவர்களுக்காக என் உழைப்பைத் தானமாகக் கொடுக்கிறேன். சிரம தானம் அளிக்க எனக்குச் சந்தர்ப்பம் கொடு மாரிமுத்து. உன்னை நான் கேட்டுக் கொள்கிறேன். என்னையும் உன்னோடு வேலைக்கு இட்டுச் செல். என் உடலில் வலு இருக்கிறது. மனத்தில் உற்சாகம் இருக்கிறது."

"நீங்க சொல்றது ஒண்ணும் புரியலீங்க. என்னமோ மீட்டிங்கிலே பேசறது மாதிரி இருக்கு நீங்க சொல்றது. உங்களை நான் வேலே செய்யச் சொல்றதுங்களா?"

"நீ சொல்லவில்லை. நானாகவல்லவா சொல்கிறேன்?"

* * *

அமுதவாகினி ஆற்றுக்கு அரை மைல் வடக்கேயுள்ள சாத்துக்குடி இயற்கையன்னை கொலுவிருக்கும் கிராமம்.



கிராமத்தின் மேற்குப் பகுதியில் பெருநிலக் கிழார்களான பிள்ளைமார்கள் வசிக்கும் முப்பது வீடுகள் இருக்கின்றன. அந்தத் தெருவுக்கு ஈசானிய திக்கில் சிவன் கோயிலும், கோயிலுக்கு எதிரில் பெரிய குளமும் இருக்கின்றன. சிவன் கோயில் வடக்குமட விளாகத்தில் பலர் சிறு வீடுகளில் குடியிருக்கிறார்கள். குளத்துக்குத் தெற்கில் கிராமப் பள்ளிக் கூடம். குளத்தின் வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் நான்கு தெருக்கள். தொழிலாளர் போன்ற பாட்டாளி மக்கள் வசிக்கும் இந்தத் தெருக்களில் ஒன்று திரௌபதி அம்மன் கோயில் தெரு.

தெருக் கோடியிலிருக்கும் திரௌபதி அம்மன் கோவிலின் எதிரிலுள்ள கிணற்றின் தண்ணீர் நல்ல தண்ணீர் என்று தெருவிலுள்ள அத்தனை வீடுகளுக்கும் எடுத்துப் போவார்கள். எப்போதும் அங்கு மண் குடங்களும் பித்தளைக் குடங்களுமாக ஏந்திக் கொண்டு வந்து பெண்கள் குழுமியிருப்பார்கள். அநேகமாகக் கூரை வீடுகளின் புழக்கடைகளில் கிணறுகள் இருப்பதில்லை. பஞ்சாயத்தில் நிறுவியிருக்கும் பாக்குவெட்டிப் பம்புகளும் ஒடிந்து பழுதாகியிருக்கும். அவைகளை அடிக்கடி செப்பனிட்டாலும் அதிக காலம் நல்ல நிலையில் ஊர்க் குடி மக்கள் விட்டு வைப்பதில்லை. மாரிமுத்துவின் தம்பி கோவிந்தராஜன் பிரசிடெண்டு ஆனதும் பஞ்சாயத்துப் போர்டு செலவில் அந்தக் கிணற்றை முதல் வேலையாகச் சீராக்கினான். மேடை கட்டிக் கிணற்றுக்குக் கைப்பிடிச் சுவர் எழுப்பி சிமெண்டுப் பூசி நன்றாகச் செய்தான். கிணற்றருகிலிருந்த அவர்கள் தோட்டத்தின் ஓரமாக ஒரு மரம் உண்டு. அந்த மரம் சிறிது சாய்ந்து அதன் கிளைகள் கிணற்றின் மேல் உயரே பரவியிருந்தன. அடிக்கடி தழைகள் உதிர்ந்தும், பறவைகள் உட்கார்ந்து அசுத்தம் செய்தும் கிணற்று நீர் ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிப்பதாயிருந்தமையால் கோவிந்தராஜன்

அதை வெட்டிவிட எண்ணினான். இது பற்றி அண்ணன் தம்பிகளிடையே வாக்கு வாதம் நடந்ததுண்டு. கோவிந்தராஜன் சிறிது துணிச்சலுடன் தான் அதை வெட்டச் சொன்னான். அண்ணனோடு மனஸ்தாபம் ஏற்படும் என்று அவன் எதிர்பார்த்துத்தான் செய்தான். நாட்டு மாமரம்; நல்ல காய்களும் இல்லை. ஊருக்காக இந்தத் தியாகம் கூடச் செய்யக் கூடாதா என்று எண்ணினான்.

பஞ்சாயத்துக் காரியாலயத்தில் உட்கார்ந்து கோவிந்தராஜன் வாசகசாலைக்கு வரும் பத்திரிகைகளையெல்லாம் படித்துக் கொண்டிருந்தான். அவன் மனைவி ஜயலக்ஷ்மி குழந்தையுடன் அங்கு வந்தாள்.

"வேறு யாராவது பஞ்சாயத்துத் தலைவராக இருந்து மரத்தை வெட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தால் விஷயமே வேறாயிருக்கும். நீங்க பிரசிடெண்டாயிருக்கும்போது வெட்டினதுதான் இவர்களுக்குத் தப்பாய்ப் போச்சு" என்றாள் அவள். மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு, "அண்ணி ரொம்பக் கோபமாயிருக்காங்களா?" என்று கேட்டான் கோவிந்தராஜன்.

"பொரிஞ்சு தள்ளிக்கிட்டிருக்கிறார். என்னைக் கண்டால்தான் ஆகல்லியே! சினிமாவிலே காட்டறாப்லே அந்தமாதிரியில்லே நான் உங்களைக் காதலிச்சுக் கல்யாணம் செய்துக்கிட்டிருக்கேன்னு சொல்கிறார். சாயங்காலம் உங்க அண்ணன் வந்ததும் வேறே குடித்தனம் போயிடப் போறாங்களாம்."

"அப்படியா, நாம்ப என்னதான் தப்பு செஞ்சோம்?"

"அதென்னவோ, இந்தப் பதவியை ராஜிநாமா செய்து விட்டுப் பட்டணத்தைப் பார்க்கப் போய் விடலாம். வேலை கிடைக்காமலா போயிடும்? எங்க மாமா கிட்டே சொல்லி ஏதாவது வேலை தேடித் தரச் சொல்லலாம். நான் இப்போதே அவங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன்."

"நாளைக்கு ஆகட்டும், யோசித்துச் சொல்கிறேன்."

ஜயலக்ஷ்மி குழந்தையை எடுத்துக் கொண்டு போனாள்.

அவன் போவதாக இருந்தால்கூட ஊர்க் குடி மக்கள் அவனை விடமாட்டார்கள் போலிருந்தது. பஞ்சாயத்தை எப்படித் திறம்பட அவன் நிர்வகித்துக் கொண்டிருந்தான்? கண்ணும் கருத்துமாகப் பொது ஜனங்களுக்கு உழைப்பவர்கள் ஊரில் வேறு யார் தான் உண்டு? கோவிந்தராஜனுக்கே தன் நிலைமை விசித்திரமாக இருந்தது. நல்ல காரியத்துக்குத்தான் எத்தனை இடைஞ்சல்?

* * *

பெரிய வீட்டுச் சிங்காரம் படையாச்சியின் செல்வக் குமாரியாகப் பிறந்து, சென்னைப் பட்டணத்தில் மாமா வீட்டில் போய் இருந்து நான்காவது படிவம் வரையில் படித்த ஜயலக்ஷ்மி தான் வயலில் இறங்கி நாற்று நடுவதைப் பற்றிக் கனவு கூடக் கண்டிருக்க மாட்டாள்; ஆனாலும் இப்போது சினிமாவுக்குப் போவதைவிட அதிகக் கும்மாளமாக வயலுக்குப் போனாள். ஓராள் கூலி மிச்சம் என்ற எண்ணத்துடன் நடவுக்குப் போய்க் கொண்டிருந்த அம்சவல்லி இப்போது திரௌபதி அம்மன் கோயிலுக்கு மாவிளக்கு போடப் போவது போன்ற பக்தி சிரத்தையுடன் போனாள். கோவிந்தராஜன் இதுவரையில் தன்னை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த சங்கோசத்தை உதறித் தள்ளி விட்டு வெறி பிடித்தவன் போல் மண் வெட்டியை எடுத்துக் கொண்டு வயலில் இறங்கிக் கொத்தத் தொடங்கினான். டீக்கடையில் கூட்டம் போட்டுக் கொண்டு ஓரணாப் பத்திரிகையால் உலகத்தையே அளவிட்டுக் கொண்டிருந்த இளைஞர்களுக்கு விவசாயத்தில் தீராத அக்கறை உண்டாகி விட்டது. மாரிமுத்துவுக்கு உற்சாகத்தினால் நிலை கொள்ளவில்லை.

எங்கிருந்தோ சாமியார் வந்தாலும் வந்தார், எத்தகைய புரட்சியை ஊரிலே உண்டாக்கி விட்டார்? அவர் உபதேசம் செய்யவில்லை. மாலையணிந்து கொண்டு, 'மைக்' அதிரும் வண்ணம் மேடைமேலே நின்று கர்ஜித்துப் பிரசங்கம் புரியவில்லை. கட்சிக் கொடிகளை ஏந்திக்கொண்டு கூட்டம் பின்தொடர

ஊர்வலம் போகவில்லை. அவர் அமைதியாகப் பணியாற்றத் தொடங்கியதே மௌனப் புரட்சியாகப் பரிணமித்தது.

அவர் நாற்றங்காலில், துணியை வரிந்து கட்டிக் கொண்டு, மண்டியிட்டு உட்கார்ந்து, நாற்றைப் பறித்து நீரில் அலசி, ஊன்றிய கைத்தடியில் தட்டி விட்டு, முடிந்து போடுவதே அற்புதமான காட்சியாயிருந்தது. மாரிமுத்து அவரை எவ்வளவோ வினயமாகக் கேட்டுக் கொண்டும் அவரை வேலை செய்யாமல் இருக்கச் செய்ய முடியவில்லை. "எனக்குப் பாவங்க சாமி, ஊரிலே எல்லாரும் என்னைத் திட்டுவாங்க சாமி, நீங்க வேலை செய்யறது என்னை என்னவோ செய்கிறது சாமி" என்று மாரிமுத்து புலம்பினான்.

"எனக்கு ஆனந்தமாயிருக்கிறது. நீ ஏன் சங்கடப்பட்டுக் கொள்கிறாய்? மாரிமுத்து! மனோரம்யமான இந்தச் சூழ்நிலையில் வேலை செய்வதில் இன்பம் காண்கிறேன். நான் நாற்றுக் கட்டிப் போடுவது சரியாயிருக்கிறதா, அதைப் பார்த்துச் சொல் போதும்."

"எங்களையெல்லாம் விட நல்லாத்தான் வேலை செய்யறீங்க. இவ்வளவு சுத்தமா முடிபோட எனக்குக்கூட வராதுங்க."

"இவ்வளவு நன்றாக வேலை செய்யும் என்னை ஏன் செய்யக்கூடாது என்கிறாய்?"

மாரிமுத்துவினால் பதில் சொல்ல முடியவில்லை. விவசாயிகள் எல்லாரும் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். அன்று பொழுது சாய்ந்தது. இரவில் இதே பேச்சாயிருந்தது.

மறு நாள் காலை கோவிந்தராஜனும் வயல்புறம் வந்தான். சந்நியாசி வயலில் உழுது கொண்டிருந்தார். கோவிந்தராஜனுக்குப் பரபரப்பு ஏற்பட்டது.

"சுவாமி! தாங்கள் கரை ஏறுங்கள். நான் உழுகிறேன். தங்களைப் போன்ற பெரியவர்கள் வேலை செய்யும்போது எனக்கு அறிவு வந்து விட்டது. படிப்பினாலும், பதவியினாலும் என் மனத்தில் ஏற்பட்ட அகம்பாவம் மறைந்துவிட்டது. நாம் எல்லாரும் மண்ணின் மக்கள். 'கிராமத்துக்குப் போ' என்று எவ்வளவோ அறிஞர்கள் பிரசங்கம் செய்வதைக் கேட்டிருக்கிறேன். வாயைத் திறந்து ஒரு வார்த்தை என்னிடம் சொல்லாமல் எனக்குப் புத்தி புகட்டிவிட்டீர்கள்" என்றான் கோவிந்தராஜன். கலப்பையின் மேல் கையை வைத்தான் அவன். சந்நியாசி அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

"நான் உழுவதை நீயும் தடை செய்யாதே. நான் இதிலே இன்பம் காண்கிறேன். உனக்கு விருப்பமிருந்தால் மண்வெட்டியை எடுத்து வரப்போரம் அண்டை வெட்டிப் போடு" என்றார்.

அன்று சாப்பாடு மிகவும் ருசியாயிருந்தது கோவிந்தராஜனுக்கு. அவன் மனைவி ஜயலக்ஷ்மி அவனைக் கேட்காமலே கடவுக்கு வந்து விட்டாள்.

"இங்கிருக்கும் இந்த நிலத்துக்குச் சட்டசபையிலா காகிதத்தில் சீர்திருத்தம் செய்ய முடியும்? நம்முடைய இதயத்தில்

அல்லவா சீர்திருத்தம் ஏற்பட வேண்டும்? மாவுக்குப் பத்து விளையும்போது நிலச்சுவான்தாருக்கு நாலு கொடுக்கலாமா இன்னும் குறைத்தே கொடுக்கலாமா என்று விதண்டாவாதம் செய்து கொண்டிருப்பதைவிட அதே நிலத்தில் இருபது விளைவித்து எட்டுக் கொடுத்தால் எந்த நிலச்சுவான்தார்தான் நம்மிடம் அதிருப்திப்பட முடியும்? நாமாகவே தாராளமாகக் கொடுக்க மாட்டோமா? எப்படி அதிகம் விளைவிக்கலாம் என்பதே நமது பிரச்னை: பங்கு விகிதம் பிரச்னை அல்ல. பூமிதேவி ஒருநாளும் கொடுத்து விட மாட்டாள். நாம் பாடுபடுவதற்குத் தக்க பலனைத் தருவாள். இது ஒரு புனிதமான காரியம் என்று செய்வோம். நம் மனத்தில் எத்தனை நிம்மதி ஏற்படுகிறது என்று பார்'' என்று சாமியார் கோவிந்தராஜனிடம் சொன்னார். தலைவர்களாக உயர்ந்த பீடத்திலிருந்து பொன் மொழிகளாக அள்ளிப் பொழிந்து கொண்டிருந்தவர்கள் சாதிக்க முடியாததை அந்தச் சந்நியாசி மக்களோடு மக்களாக உழைத்துச் சாதித்து விட்டார்.

சாத்துக்குடி கிராமம் முழுவதும் ஒரே குடும்பம் போலிருந்தது. யாராவது ஒரு விவசாயியின் நிலம் சிறிது 'செய்நேர்த்தி' குறைவாயிருந்தால் அங்கு விரைவார் சந்நியாசி. அவருக்கு உதவியாகப் பலர் வந்து கூடுவார்கள். ஜனசக்தியே அவருடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டிருந்தது. தகராறுகளே இல்லை. மின்சார விளக்குகளும், பூங்காவும், ஆகாசவாணியும், வாசகசாலையும் ஊரைக் கிராமலக்ஷ்மி கொலு வீற்றிருக்கும் இடமாகச் செய்தன. ஜில்லாவிலேயே இவ்வளவு திறமையுடன் நிர்வகிக்கப்படும் பஞ்சாயத்து வேறு இல்லை என்று மாவட்ட அதிகாரியே சொன்னார். விவசாயம் முடிந்து கலப்பை கழுவினபிறகும் சந்நியாசி கிராம மக்களைச் சும்மா இருக்க விடவில்லை. பிரம்பு நாற்காலி செய்தல், பாய் செய்தல் போன்ற குடிசைத் தொழில்களில் ஊக்கம் பிறக்கச் செய்துகொண்டேயிருந்தார். ஆற்றங்கரைக் கோயிலைப் புதுப்பிக்கும்படி பெருநிலக் கிழார்களைக் கட்டளை யிட்டார் அவர். ஆமாம்! கட்டளையாகவே மேற்கொண்டு அவர்கள் செய்து முடித்தனர். பணத்தை விட அந்தக் கிழச் சந்நியாசியின் வார்த்தைக்குச் சக்தி அதிகம் என்பதை எல்லோரும் உணர்ந்துகொண்டு விட்டனர். கோயில் அமுதவாகினியின் கரையில் ஜீர்ணோத்தாரணமாகி எழிலுடன் விளங்கியது. ஆடிக்குத் தை ஆறு மாதம் ஓடிவிட்டன. மழைக் காலம் போய்க் குளிர்காலம் தொடங்கியது. கர்மகாலம் மறைந்து போக காலம் பிறந்தது. வயல்கள் அறுவடைக்குத் தயாராகி விட்டன. இதுவரையில் காணாத அபரிமிதமான விளைவு.

"கிராமத்துக்கு இன்றியமையாதவராகி விட்ட அந்தச் சந்நியாசி ஒருநாள் திடீரென்று கோவிந்தராஜனிடம், "அப்பா! பற்றற்ற என்னை உங்கள் அன்பினால் இவ்வூரில் பற்றுதல் உள்ளவனாகச் செய்து விட்டீர்கள். நான் துறவி. எனக்கு இது ஊர் இல்லை. நான் வேறிடம் போகிறேன்'' என்றார். மாரிமுத்து அழுதே விட்டான். ''உங்களை விட்டு எப்படிங்க சாமி நாங்க பிரிஞ்சு இருப்போம்? இங்கேயே இருங்க'' என்று எவ்வளவோ சொன்னான்.

''ஏழைப்பரதேசி, நான் இங்கே இருந்து என்னப்பா செய்யப் போகிறேன்? எனக்குப் பந்தம் உதவாது'' என்று புன்னகையுடன் அவர் கிளம்பினார். வெகுதூரம் அவரைப் பின்பற்றிச் சென்று வழியனுப்பினார்கள் கிராம மக்கள்.

கோவிந்தராஜனுக்கும் தனக்குக் குருநாதராக விளங்கி மறைந்த அந்தச் சந்நியாசியின் பிரிவுக்குப் பிறகு கிராமத்திலிருக்கப் பிடிக்கவில்லை. ஜயலக்ஷ்மியின் மாமாவின் மூலம் சென்னையில் ஒரு பெரிய கம்பெனியில் டைபிஸ்டு வேலை கிடைத்ததால் கிராமப் பஞ்சாயத்துப் பிரஸிடெண்டு பதவியை ராஜிநாமா செய்துவிட்டான்.

மறுபடியும் கிராமப் பஞ்சாயத்துத் தலைமைப் பதவிக்குத் தேர்தல் வந்தது. ஊரில் கட்சிகள் தோன்றின. லட்சிய கிராமமாயிருந்த சாத்துக்குடி மக்களின் ஒற்றுமை குலைந்தது. பழையபடி மற்ற எல்லாக் கிராமங்களையும் போலவே அந்த ஊரும் இருக்கத் தலைப்பட்டது. சந்நியாசி ஒருவர் வந்து சிலகாலம் தங்கி அந்த மாவட்டத்திலேயே அந்த ஊரைச் சிறந்ததாகச் செய்ததை அனைவரும் மறந்தே விட்டனர்.



CTPA/6/7



PT D/6/3

பாத்திரங்கள் :

பெர்ணுந்தோ—காஸ்தில் தேசத்து அரசன்.
உராகா — அரசகுமாரி.
தியேகோ—ரோடரீகோவின் தந்தை (பிரபு)
கோமேச—ஷிமேனுவின் தந்தை. (பிரபு)
ரோடரீகோ—கதாநாயகன் (பிரபு)
சாஞ்சோ — ஷிமேனுமேல் காதல் கொண்டவன். (பிரபு)
அரியாசோ, அலான்சோ — பிரபுக்கள்
ஷிமேனு—கதாநாயகி, கோமேசின் புத்திரி.
லேயனோரா — அரசகுமாரியின் தாதி.
எல்வீரா — ஷிமேனுவின் தாதி.

காட்சி 3

[பெர்ணுந்தோ, தியேகோ, அரியாசோ, ரோடரீகோ, சாஞ்சோ.]

பெர் : காஸ்தில் தேசத்துக்கே கீர்த்தியாய் விளங்கின குலத்தில் உதித்தாய், ஒரு கொடியிலே பராக்கிரமத்தில் அம் மூன்னோர் அனைவருக்கும் சமானமானாய், உனக்குத் தகுதியான வெகுமானம் அளிக்க எனக்குச் சக்தியில்லை. முரட்டு விரோதிகளிடமிருந்து தேசத்தைக் காப்பாற்றினாய். செங்கோலை என் கையில் நிலைத்து நிற்கும்படி உறுதியாக்கினாய். நான் சேனையைத் திரட்ட உத்தரவிடுவதற்கு முன்னமே எதிரிகளை முறியடித்து விட்டாய். உனக்கு நன்றி எவ்வளவு சொன்னாலும் போதாது. ஆனால் நீ கைதியாக்கிய இரண்டு அரசர்கள் மூலம் உனக்கு ஒரு வெகுமானம் தர உத்தேசிக்கிறேன். என் முன்னிலையில் அவர்கள் உன்னைத் தங்கள் தனிப்பெருந் தலைவன் (ஸெய்யது) என்று குறித்தார்கள். அவர்கள் மொழியில் அதற்கு மிக உத்தமமான தலைவன் என்று பொருள். அந்தப் பட்டத்தை உனக்கு அளிக்கிறேன். அனைவரும் அதற்கு இணங்கட்டும். அந்தப் பேரைக் கேட்டே விரோதமாயுள்ள நாடுகள் கலங்கட்டும். என் மக்கள் எல்லோரும் உன் மேல் என் மதிப்புக்கும் நன்றிக்கும் அறிகுறி அந்தச் சிறப்புப் பெயரே என்று தெரிந்து கொள்ளட்டும்.

ரோ : பேரரசே! சிறிய சேவைக்கு என்னை இவ்வளவு பெருமைப் படுத்திக் கூறுவதும் இப்படிக் கௌரவப் படுத்துவதும் நாணமுறச் செய்கின்றன. தங்கள் தேசத்துக்கு ஒரு குடிமகன் செய்ய வேண்டிய சாதாரணக் கடமையைத்தான் நான் செய்தேன். பெரிதாக ஒன்றும் செய்து விடவில்லையே?

பெர் : இவ்வளவு தீரத்துடன் அந்தக் கடமையை எல்லோரும் செலுத்திவிடுகிறார்களா? இவ்வளவு அரிய வெற்றியை எல்லோரும் அடைகிறார்களா? அதனால் உன்னைப் புகழாமல் இருக்க முடியாது... நடந்ததைக் கொஞ்சம் விவரமாகச் சொல்லு!



தனிப்பெருந் தலைவன்

ரோ: நகரத்தின்மேல் இந்தப் பயங்கரமான படையெடுப்பு நெருங்கி வரும் சமயத்தில் என் தந்தையோடு வீட்டில் கூடியிருந்த நண்பர்கள் பலர் என் சகாயத்தையும் தேடினார்கள். தங்கள் உத்தரவின்றி அதற்கு உடன்பட்டதை மன்னிக்க வேண்டும், பிரபோ! ஆபத்து அணுகியது; அந்தச் சிறு படை சித்தமாயிருந்தது: நான் அரசர் முன் தோன்றினாலோ என் தலைக்கு ஆபத்து; உயிரை விடுவதென்றால் தங்களுக்காக யுத்தம் செய்து உயிரை விடுவதே மேல் என்று கருதினேன்.

பெர்: நீ ஆத்திரத்தில் பழி வாங்கின குற்றத்தை மன்னித்தேன்; அதில் நீ காப்பாற்றிய தேசமே உனக்கு அனுதாபப்பட்டுப் பரிவாய்ப் பேசுகிறது. இனி ஷிமேனு எவ்வளவு வாதாடினாலும் நான் கேட்கப்போவதில்லை; அவளுக்கு ஆறுதல் மொழிமட்டுமே சொல்வேன். சரி, உன்னுடைய வரலாற்றைத் தொடர்ந்து சொல்லு.

ரோ: இந்தச் சிறுபடை உறுதியான மனத்தோடு என் தலைமையில் முன்னேறியது. எங்களைப் பார்த்து மற்றும் அநேகர் பயம் நீங்கி எங்களுடன் கூடினர். புறப்பட்டது ஐந்நூறு பேர்கள்; அந்தத் தொகை துறைமுகம் சேருவதற்கு முன் மூவாயிரமாய்ப் பெருகியது. அதில் மூன்றில் இரண்டு பங்கை அங்கிருந்த கப்பல்களில் ஒளிந்து கொள்ள ஏற்பாடு செய்தேன். மிகுந்தவர் என்னுடன் இருந்தனர்; மற்றவர்களும் வந்து சேர்ந்து கொண்டே இருந்தார்கள். எல்லோரையும் நிசப்தமாய் நிலத்தில் படுத்துக் கொள்ளச் செய்தேன். இரவில் பெரும் பாகம் அப்படிக் கழிந்தது. காவற் படையையும் அப்படியே இருக்கச் செய்தேன் உங்கள் உத்தரவின்படியே நான் நடப்பதாகவும் சொல்லத் துணிந்தேன். பின், நட்சத்திரங்



களின் மங்கின ஒளியில் முப்பது கப்பல்கள் வருவதைப் பார்த்தோம். கடல் முகத்துவாரத்தில் உதவியுடன் வந்தன. மோரர்கள் துறைமுகத்தை அடைந்தார்கள். எங்கும் நிசப்தம் நிலவியது. ஒருவரும் தென்படவில்லை என்பதைப் பார்த்து, நமக்கு எதிர்பாராத தாக்குதலைக் கொடுக்கச் சரியான தருணம் என்று எண்ணி மகிழ்ந்து, கப்பல்களை நங்கூரம் பாய்ச்சி விட்டு இறங்கி ஓடிவந்தார்கள். ஓடிவந்து அவர்களுக்காகக் காத்திருக்கும் எங்கள் கையில் சிக்கினார்கள். எழுந்தோம். வானைப் பிளக்குமாறு கூச்சலிட்டோம். அதைக் கேட்டு நம் கப்பல்களிலிருந்தவர்கள் ஆரவாரம் முழங்கினார்கள். இறங்கியும் இறங்காமலுமிருந்த மோரர்கள் கதி கலங்கிப் போனார்கள். கொள்ளைக்குப் பதில் போர் காத்து நின்றது. சண்டை ஆரம்பிக்கும் முன்னரே நாசமானோம் என்ற பீதி அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் சமாளித்துக் கொண்டு எதிர்ப்பதற்குள் அவர்களைத் தரையில் தாக்கினோம், நீரில் தாக்கினோம். இரத்தத்தை ஆறாய்ப் பெருகச் செய்தோம். ஆனாலும் துரிதமாகவே தலைவர்கள் அவர்களை எச்சரிக்கை செய்து பயத்தை நீக்கித் தைரியம் கொடுத்தார்கள். சண்டை செய்யாமல் இறப்பது அவமானம் என்று எண்ணி அவர்கள் உறுதி பெற்றார்கள்.

நான் சக்கரவட்டமாய்ச் சுழன்று போரிட்டேன். சிலரை முன் செலுத்தினேன், பின்வாங்குவோருக்குத் திடம் அளித்தேன். புதிதாய் வருபவர்களை உட்புகுத்தினேன், விடியும்வரையில் வெற்றி எந்தப்பக்கம் என்று தெரியவில்லை. ஆனால் விடிவெளிச்சம் வந்ததும் வெற்றி நமது பக்கம் என்பது தெளிவாயிற்று. இன்னும் நகரத்திலிருந்து ஆட்கள் வந்து சேர்ந்து கொண்டிருந்தார்கள். எதிரிகளின் தைரியம் முற்றிலும் அழிந்தது; வெற்றியாற்றலுக்குப் பதில் மரண பீதி மேலோங்கியது. எதிரிகள் தங்கள் கப்பல்களுக்கு ஓடினார்கள்; நிலைக் கயிற்றை அறுத்தார்கள்; 'குய்யோ முறையோ' என்று ஓலமிட்டுக் கொண்டு, தங்கள் அரசர்கள் கதி என்னவாயிற்று என்று கூடப் பாராமல் கப்பலை ஓட்டினார்கள். கடலின் அலை வேகத்தோடு முன்னேறியவர்கள் கடலின் பின்னேற்றத்தோடு பின்னேறினார்கள். ஆனால் அவர்களின் அரசர்களும் அவர்களைச் சூழ்ந்த ஒரு சிலரும் மட்டும், வெகுவாய்க் காயப்பட்டிருந்தும், களத்தில் தீரத்துடன் யுத்தம் செய்துகொண்டே இருந்தனர். 'உங்கள்போர் பயனற்றது. சரணடைந்து விடுங்கள்' என்று சொல்லிப் பார்த்தேன். அவர்கள் கேட்கவில்லை, கத்தியை வீசியவாறே களத்தில் நின்றார்கள். ஆனால் சுற்றியிருந்த சிறு படையும் முற்றிலும் வெட்டுண்டதைக் கண்டு, இனி நாம் சாகஸம் செய்வது வீண் என்று அவர்களே அறிந்துகொண்டு, 'உங்களில் தலைவன் யார்?' என்று என்னை நோக்கிக் கேட்டனர். 'நான்தான்' என்றேன். உடனே அவர்கள் என்னிடம் சரணடைந்தார்கள். சரணடைந்ததும் அவர்களை உங்களிடம் அனுப்பினேன். பகைவர் எவரும் மீதியில்லாததால் யுத்தம் முடிந்தது. இவ்வாறு தான் நான் உங்களுக்கு இந்தப் போரில் வெற்றி தேடிக் கொடுக்க முடிந்தது.

காட்சி 4

(பெர்னாந்தோ, தியேகோ, ரோடரிகோ, அலான்சோ, சாஞ்சோ.)

அ : பிரபோ! உங்களிடம் நீதி கோரி ஷிமேனா வந்து கொண்டிருக்கிறாள்.

பெர் : அவள் கடமையின் முயற்சி எனக்கு இப்பொழுது கொஞ்சம், அருவருப்பாய்த்தான் இருக்கிறது. சரி, ரோடரிகோ! அவளுக்கு உன்னைப் பார்த்ததும் ஏற்படும் துன்பம் வரவேண்டாம். நீ போய் வா, அவள் என்முன் வரும்போது நீ இங்கே இருப்பது கூடாது. உன்னை அப்படி விரட்டுவதுதான் உனக்கு நான் காட்டும் நன்றி! ஆனால் போவதற்குமுன், இங்கு என் அருகில் வா, உன்னைக் கட்டி அணைத்துக் கொள்ளுகிறேன். (ரோடரிகோ அரசனருகே போகிறான்)

தியே : ஷிமேனாவுக்கு அவனைக் காப்பாற்ற மனம் இருந்தும் அவன்மேல் வழக்குத் தொடர்கிறாள்.

பெர் : ஆம்! அவள் அவனைக் காதலிக்கிறாள் என்பது எனக்குத் தெரியும்; அதைப் பரிசோதிக்கப் போகிறேன். நீங்கள் கொஞ்சம் முகத்தில் சோகக் குறி காட்டிக் கொள்ளுங்கள். ஒரு பொய்யைச் சொல்லி ஷிமேனாவின் உணர்ச்சிகளை ஆழம் பார்க்கப் போகிறேன்.

(ஷிமேனா அரசருக்கு முன் வருகிறாள்.)

காட்சி 5

(பெர்னாந்தோ, தியேகோ, அரியாசோ, அலான்சோ, ஷிமேனா, எல்விரா.)

பெர் : இப்பொழுது நீ திருப்தியடைந்தாய்; உன் முயற்சிக்குப் பலன் ஏற்பட்டது; பகைவரை வென்ற ரோடரிகோ தான் பட்ட காயங்களால் மடிந்து விட்டான்; உனக்காகக் கடவுள் அப்படிப் பழி வாங்கி விட்டார். (தியேகோவை நோக்கி). அவள் முகம் எப்படி மாறுகிறதென்று பார்த்தீர்களா?

தியே : ஆம், அந்த அழகு முகம் வெளிறிப் போய்விட்டது. அது அவள் அந்தரங்கமான காதலை வெளிக் காட்டுகிறது. இனியும் அதில் உங்களுக்குச் சந்தேகம் என்ன?

ஷி : ஆ! என்ன? ரோடரிகோவா இறந்து விட்டான்?

பெர் : இல்லை, இல்லை. உயிருடனே தான் இருக்கிறான்; உன்மேல் பிரேமையையும் குறையாமல் வைத்துக் கொண்டேயிருக்கிறான். அவனுக்காகக் காட்டிய துக்கத்தை நீ விட்டுவிடு.

ஷி : பிரபோ! துயரத்தால் மட்டும் அல்ல, சந்தோஷத்தினாலும் முகம் மாறுமல்லவா? எல்லையற்ற சந்தோஷம் இதயத்தைத் தாக்கும்போதும் அவ்வித உணர்ச்சி ஏற்படும்.


எண்ணிலாத கேசத் தைலங்கள் இருப்பினும் எளிதாக உங்கள் கேசத்திற்குக் கருமையூட்டுவது "லோமா" ஒன்றே
என்கிறார் கண்ணியமான விற்பனையாளர்
Loma
லோமா
இது சாயச் சரக்கல்ல; கேசக் கருமைக்கும் கேச அலங்காரத்திற்கும் உகந்த உன்னதமான அழகு சாதனம். தரத்திலுயர்ந்த கேசத் தைலங்களில் இருக்க வேண்டிய விசேஷப் பொருள்கள் லோமா விலும் அடங்கியுள்ளன.
ஏகபோக ஏஜெண்டுகள்:
எம். எம். கம்பாட்வாலா, அகமதாபாத் 1.
ஏஜெண்டுகள்
ஸி. நரோத்தம் அண்ட் கோ., பம்பாய்-2.
TAM.MPS
சென்னை ஏஜண்டுகள்: ஜே. பாலபாசம் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள்: சிர்குல் கதிர் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

க்ளாக்ஸோ அவன் உணவு அதனால்தான் தாய்ப் பால் குடித்து வளரும் குழந்தை போல் அவனும் புஷ்டியாய் வளர்கிறான். போதிய தாய்ப்பால் இல்லாத ஒவ்வொரு குழந்தைக்கும் க்ளாக்ஸோ மிக்க அவசியம்.



Glaxo

க்ளாக்ஸோ குழந்தைகளுக்குச் சிறந்த பால் உணவு

“க்ளாக்ஸோ குழந்தை புத்தகம்”— இலவசமாக இதைப் பெற விரும்புவோர் “க்ளாக்ஸோ” உட்ஸ் ரோடு, சென்னை—2 என்ற விலாசத்திற்கு 50 நயா பைசா தபால் தலைகள் (தபால் செலவிற்காக) அனுப்பவும்.




க்ளாக்ஸோ லாபரெட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . புது டில்லி

பெர்: ஏன் இப்படி நம்ப முடியாத வார்த்தையைச் சொல்லுகிறாய், ஷிமேன! உன் துக்கம் வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்ததே. நான் பார்த்தேனே?

ஷி: சரி! சுத்திக் காட்டுங்கள், துக்கத்திலேயே வெளிறினேன் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அந்தத் துக்கத்துக்கு வேறு நியாயமான காரணம் உண்டு. அவன் இறப்பது நான் தொடரும் வழக்கிலிருந்து தன்னைத் தப்பித்துக் கொள்வதாகும். தேசத்துக்காக அவன் இறந்தால் நான் அவனைப் பழி வாங்க மாட்டேன். இழப்பேன், என் முயற்சி யெல்லாம் வீணாகும்; அப்படிக் கீர்த்திகரமான மரணம் அவனுக்கு ஏற்பட்டால் அது என் மனத்துக்குத் துன்பத்தையோ, கஷ்டத்தையோ கொடுக்கும். நான் அவன் மரணத்தைக் கோருகிறேன். ஆனால் புகழுடன் அல்ல. இவ்வளவு உயரத் தூக்கி வைக்கும் வைபவத்தில் அல்ல, கௌரவமாய் யுத்த பூமியிலல்ல. தூக்குமேடையில் சாக வேண்டும் அவன். தேசத்துக்காக நிகழ்ந்த மரணம் இவனுக்கு அழியாப் புகழைக் கொடுக்கும்! அதல்ல நான் வேண்டுவது. தூக்குமேடையில் செத்தால்தான் அவன் எந்தப் பழியை அடைய வேண்டுமென்று நான் கருதிக் கொண்டிருக்கிறேனோ அதை அவன் அடைந்தவன் ஆவான். என் தந்தைக்குப் பதிலாக அவன் இறக்க வேண்டும். தேசத்துக்காகவல்ல; பெயரைச் சொல்லி, அவனை நினைத்து மக்கள் தூற்றும்படி அவன் இறக்க வேண்டும். ஆதலால் அவன் வெற்றி பெற்று மீட்பதற்கு மகிழ்ச்சியடைகிறேன். அது தேசத்துக்கு நன்மையாயிருப்பதன்றி நான் வழக்குத் தொடருவதற்கு இன்னும் இடம் கொடுப்பதனால், என் தந்தையின் ஆவிக்குப் பலி இன்னும் இட்டுவதாயிருக்கிறது. ஆனால் நான் அவ்வளவு நம்பிக்கையுடன் பேச என்ன இடமிருக்கிறது? ரோடரிகோ எனக்கு ஏன் பயப்பட வேண்டும்? அவனுக்கு எதிராக என் கண்ணீர் மாத்திரம் என்ன செய்யும்? உங்கள் ராஜ்யமெல்லாம் அவனுக்குச் சொந்தம். உங்கள்குடைக்கீழ் அவன் என்னவேண்டுமானாலும் செய்யலாம். பகைவரை வென்றது போல் என்னையும் வெல்வான்; வெல்ல முடியும். பகைவர் இரத்தத்தில் நீதி முழுகிப் போயிற்று. அவனுக்கு இன்னும் ஒரு வெற்றிச் சின்னம் ஏற்பட்டது: அவன் பவனி செல்லும்போது அவன் இரதத்துக்குப் பின் அவனைத் தனிப்பெருந் தலைவனாக ஒப்புக் கொண்டு பணிந்து செல்லும் இரு அரசர்களுடன் நானும் பணிந்து செல்ல வேண்டும்.


பெர்: குழந்தாய்! உணர்ச்சி வேகத்தில் கொஞ்சம் ஆத்திரமாகவே பேசிவிட்டாய். நீதி செலுத்தும் போது இருகட்சியையும் சீர் தூக்கிப் பார்க்க வேண்டியது அவசியம். உன் தந்தையைக் கொன்றான், உண்மை. ஆனால் முதலில் அவமானம் செய்தது உன் தந்தையாதலால், அது அவன் தண்டனையைக் குறைக்கும். என்



னைக் குற்றம் சொல்வதற்கு முன் உன் இதயத்தையே நீ கேளு. உன் இதயத்துக்கு ரோடரிகோதான் அதிபன்; அது அவனுக்குத் தண்டனை நீக்கி உன் காதலுக்குரியவனாகவே அவனை நிற்க வைக்கும். உன் அரசருக்கு நீ நன்றி காட்டு என்றே உனக்குச் சொல்லும்.

ஷி: இல்லை! ஒரு நாளுமில்லை! அவன் என் விரோதி; என் கோபத்துக்குப் பாத்திரமானவன். என் தந்தையைக் கொன்றவன். அவன் மீது நான் வழக்குத் தொடர்வதை அவ்வளவு அலட்சியம் செய்கிறீர்களா. நான் சொல்வதை நீங்கள் கேட்காமல் இருப்பதே எனக்கு நலம் என்று போதிக்கிறீர்கள். அப்படியே இருக்கட்டும்! என் அபாரத்துக்கு நீதி வழங்க மறுத்து விட்டீர்களே! ஆதலால் யுத்த மூலமாய்ப் பரிகாரம் தேட அனுமதி கொடுங்கள். யுத்தத்தின் மூலமாகவே அவன் பழி இயற்றினான்; அவ்வாறே பழி வாங்க வேண்டும். உங்கள் யுத்த வீரர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன், அவன் தலையை வாங்கவேண்டுமென்று. அவர்களில் யாரொருவன் எனக்காகப் பரிந்து வருகிறானோ அவனுக்கு நானே வெகுமதி. அவன் என்னை மணந்து கொள்ளலாம். அவனும் ரோடரிகோவும் போர் புரியட்டும். ரோடரிகோவைத் தண்டித்துப் போரை முடித்ததுமே நான் அவனை மணம் செய்து கொள்ளுகிறேன். இதை நீங்கள் அதிகார பூர்வமாய்ப் பிரகடனப் படுத்துமாறு வேண்டிக் கொள்கிறேன்.

பெர்: இந்தப் பிராந்தியத்தில் புராதனமாய் ஏற்பட்ட வழக்கம்தான் நீ சொல்வது. ஆனால், அநீதியைத் தண்டிக்கும் காரணமாகவே வீரர்கள் இறந்து தேசத்துக்கே நஷ்டமாகி வருகிறது. தவிரவும் அபராதிகளுக்கு வெற்றியும் நிரபராதிகளுக்கு அழிவும் அவ்வப்பொழுது ஏற்பட்டுவிடுகிறது. அந்த வழக்கமான கட்டுப்பாட்டிலிருந்து ரோடரிகோவை நான்



தஞ்சை ஜில்லா மங்கைநல்லூரில் ராமலிங்க வள்ளலாரின் 26வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. குடந்தை ஸ்ரீ ராமலிங்கம் பஸ் சர்வீஸ் ஜில்லா மானேஜர் ஸ்ரீ எஸ். ஆரோக்கியசாமி பிள்ளை, ஸ்ரீ கிருபானந்தவாரியார் முதலியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்வைபவத்தில் சங்கச் செயலாளர் ஸ்ரீ வே. பாலசடை அனைவரையும் வரவேற்றுப் பேசுவதைக் காணலாம்.

விடுவிக்கிறேன். அந்தச் சூது விளையாட்டுக்கு விதி அவனை உட்படுத்தலாகாது. அவ்வளவு பெருந்தன்மை வாய்ந்தவன் என்ன செய்திருந்தாலும் அவன் முன் தோற்று ஓடின மோரர்கள் அவன் குற்றத்தைத் தூக்கிச் சென்று விட்டார்கள்.

டியே: அதென்ன, பிரபோ! தலைமுறைத் தத்துவமாய் வந்து கொண்டிருக்கும் வழக்கத்தை அவன் ஒருவனுக்காக நீங்கள் மாற்றுவதா? நீங்கள் இப்படிச் சலுகை வழங்கினால் அவன் புகழ் மாசடையவே செய்யும். கோமேசைத் தண்டித்த திறத்தை அவன் இன்னும் பாதுகாக்க வேண்டும்.

பெர்: சரி! நீங்களும் அப்படியே வற்புறுத்தினால் அப்படியே நடக்கட்டும். ஆனால் ஷிமேனா தன்னையே வெகுமானமாய்க் குறித்தது என் போர்வீரர்கள் எல்லோரையும் ரோடரிகோவுக்கு எதிரிகளாக்கிவிடும். அவன் ஒருவனை வென்றால் இன்னொருவன் முன்வருவான். அப்படியே ஆயிரம் பேர்கள் வரக்கூடும். அவர்கள் எல்லோரையும் அவன் எதிர்த்துக் கொண்டே யிருக்க வேண்டும் என்றால் அது அநீதியாகும். ஆகையால் இந்த யுத்தம் ஒரு முறைதான் நடக்க வேண்டும். ஷிமேனா, உனக்கு வேண்டியவன் யாராவது ஒருவனை நன்றாய் யோசித்துத் தேர்ந்தெடு. அந்த ஒருவன் ரோடரிகோவோடு செய்யும் யுத்தத்துக்குப் பிற்பாடு என்னை ஒன்றும் கேட்காதே. இதுதான் நான் உனக்கு வழங்கும் நீதி.

டியே: அது மற்றவர்களைப் பேடியாக்கிவிடாதா? யுத்தகளத்தை எல்லோருக்கும் திறந்தே வையுங்கள்; யார் வேண்டுமானாலும் முன் வரட்டும். ஆனால் என் அனுமானம், ஒருவரும் முன்வரப் போவதில்லை. இன்றைக்கு ரோடரிகோ இயற்றியதைப் பார்த்தபின் அவனை எதிர்க்க யாருக்குத் தைரியம் வரும்?

சாஞ்: ஆம், திறந்தே யிருக்கட்டும். யுத்தகளம். இதோ நான் முன் வந்தேன்.

அந்தத் துணிச்சல்காரன் நானேதான், அம்மணி, என் ஆற்றலை அறிந்து எனக்கு இந்த அனுமதி கொடுங்கள்.

பெர்: ஷிமேனா! நீ உன் தந்தைக்காகப் பழி வாங்க வேண்டிய போரை அவனிடம் ஒப்புவிக்கிறாயா?

ஷி: பிரபோ! நான் ஏற்கனவே அவனுக்கு அப்படி வாக்குத் தத்தம் செய்திருக்கிறேன். ஆகவே அவனிடம்தான் ஒப்புவிக்க வேண்டும்

பெர்: சரி, யுத்தம் நாளைய தினம்; சித்தமாயிருங்கள்.

டியே: கூடாது, பிரபோ; அப்படித் தள்ளிவைக்கக் கூடாது; தைரியம் படைத்தவர்கள் எப்பொழுதும் போருக்குத் தயாராயிருக்க வேண்டியதுதான்.

பெர்: ரோடரிகோ பெரும் போரிலிருந்து இப்பொழுதுதான் களைத்துப் போய் மீண்டிருக்கிறான்; உடனே இந்த யுத்தமும் ஏற்பட்டால் நன்றாயிராதே?

டியே: போர் நடந்த விவரத்தைக் கூறியபோதே மூச்சுவாசிக் களைப்பைப் போக்கிக் கொண்டு உற்சாகம் அடைந்து விட்டான் அவன்.

பெர்: அந்த உற்சாகம் போதாது. இன்னும் ஒன்றிரண்டு மணி நேரமாவது அவன் அவகாசம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் இந்தத் தலைமுறை வழக்கம் எனக்குப் பிடித்தமில்லை என்று முன்னரே சொன்னேன்; இப்பொழுது அனுமதிக்கதும் வருத்தத்துடன் தான்; ஆகையால் நானாவது என் சபையாவது ஆஜராயிருக்கப் போவதில்லை (அரியா சோனை நோக்கி) நீங்கள் மட்டுமே அவ்விருவரின் யுத்தத்தைச் சீர் நோக்குங்கள்; முடிந்ததும் வென்றவனை என்னிடம் அழைத்து வாருங்கள். வெகுமானம் சமானமாயிருக்கவேண்டும்; யார் ஜயித்தாலும் அவனுக்கு ஷிமேனா மனைவியாக வேண்டும்; என் கையாலேயே அவனை அவனிடம் ஒப்படைப்பேன்.

ஷி: அப்படிக் கடுமையாக விதிக்காதீர்கள், பிரபோ!

பெர்: அப்படியே ரோடரிகோ ஜயித்தால் உன் பிரேமையே மறுபடியும் முன்வந்து அவனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளச் சொல்லும்; நான் விதித்தது அப்பொழுது மேன்மையானதாகும். என் உத்தரவுக்கு மாறு சொல்லாதே; அவ்விருவரில் யார் வென்றாலும் அவனுக்கு உன்னை மனைவியாக்குவேன்

(அரசன் போகிறான்)

விஸ்டம் பல் வைத்தியரின் புத்திமதியைக் கேளுங்கள்


காலையிலும் இரவிலும்

Wisdom

REGD.

கொண்டு

பல் துலக்குங்கள்



பற்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் காலையிலும் இரவிலும்—முடியுமானால் சாப்பாட்டிற்குப் பிறகும் கூட — தவராமல் பல் துலக்க வேண்டியது அவசியம். பற்களின் இடுக்குகளிலிருந்து உட்கொண்ட ஆகாரத்தின் துளிகளை அறவே அகற்றும் பல் பிரஷ் உங்களுக்கு அவசியம் தேவை. சரிவர சுத்தம் செய்வதற்காகவே ஏற்பட்டுள்ள விஸ்டம் பல் பிரஷை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும்.

விஸ்டம் பிரஷின் பிரத்யேக அம்சங்களைக் கவனிக்கவும் — லாகவமாகத் திருப்ப வளைவான கைப்பிடி, வாயின் உட்புறமும் பல் வரிசைகளுக்கேற்றக் குறுகலான பிரஷ் நுனி; பற்களின் எல்லா பாகங்களையும் எட்டக்கூடிய நைலான் ரோமங்கள் — முதலியவை.

இந்த ரோமங்கள் சுலபமாக வளைந்து கொடுக்கும் தன்மை யுடையதால், நீண்ட காலம் விஸ்டம் பிரஷ் உழைக்கிறது. அருகாமையிலுள்ள கடையில் விஸ்டம் பிரஷ் ஒன்று வாங்கிக் கொள்ளுங்கள்.



Wisdom

REGD.

நீடித்து உழைக்கும்

டூத் பிரஷ்

108

தேன்கூடு

ஆர்வி



அத்தியாயம் 5

நெஞ்சில்பட்ட காயம்

ஜணகணவென்று கன்னிமேரி கான்வென்ட் மணியடித்ததும் எல்லாம் வெய்யிலில் சோர்ந்த பூங்கா மலர்களைப்போல் புத்தகப் பெட்டியும் தண்ணீர்ப் பட்டியுமாக வகுப்பறையை விட்டு வெளியில் ஓடி வந்தார்கள். வாயிலை அடுத்த திறந்த வெளியில் அவர்களை அழைத்துப் போக வந்த மோட்டார் வண்டிகளும் ரிக்ஷாக்களும் காத்திருந்தன. செடிகளின் நிழலில் உட்கார்ந்து வம்பு பேசிக் கொண்டிருந்த ஆயாக்களும் வேலைக்காரர்களும் எழுந்து நின்றார்கள். கூடுகளை விட்டுப் பறந்த பறவைகளைப் போல ஒரே கூச்சலும் குழப்பமும் அங்கே நிறைந்திருந்தன. குழந்தைகள் குறுக்கும் நெடுக்குமாகத் தாறுமாறாக ஓடினார்கள்; சேர்ந்து போக வேண்டியவர்கள் கண்ணாமூச்சி ஆடுவது போல ஒருவரை யொருவர் தேடிக் கொண்டிருந்தார்கள்.

இரட்டை நாடியாக இருந்த ஆயா ஒருத்தியைத் திணற வைப்பதற்காகவே ஜீஜி உயரமான இரண்டு குழந்தைகளுக்குப் பின்னால் குனிந்து, மறைந்து ஒளிந்து கொண்டு வந்தாள்.

"ஜீஜி! ஜீஜி! பாத்தியா, பாத்தியா, அதானே வேணுங்கறது! நல்ல பிள்ளை இல்லே நீ!" – வேகமாக நடக்க முடியாமல் ஆயாவுக்கு மூச்சு வாங்கியது.

சற்றுமுன் கண்ணில்பட்ட ஜீஜி அதற்குள் எப்படி மறைந்து போவாள்? அத்தனை குழந்தைகளுக்கு நடுவே அந்த ஆயா சுற்றிச் சுற்றி வளைய வந்துகொண்டிருந்தாள். ஆனால் ஜீஜியைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

சில வண்டிகள் குழந்தைகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டு விட்டன; சில வண்டிகள் அப்பொழுதுதான் உள்ளே வந்து கொண்டிருந்தன. உஷா, நின்ற வண்டிகளையும் உள்ளே வருகிற வண்டிகளையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு தயங்கித் தயங்கி நின்றாள். ஜீஜி இப்பொழுது அவள் மறைவில்தான் வந்து கொண்டிருந்தாள்.

"ஜீஜி! அப்புறம் தெரியுமா எஞ்சேதி! உன்னை உட்டுட்டுப் போயிடுவேன்!"

உஷா சிறிது விலகிக் கொண்டு, "ஜீஜி! அதோ ஆயா உன்னைத் தேடுகிறாள், பார்!" என்றாள்.



"உஸ்...... நீ பேசாமல் இரேன்!" என்று சொத்தைப் பல்லைக் காட்டிச் சிரித்துக்கொண்டே கெஞ்சினான் ஜீஜி; விலகிய பக்கமாகப் போய் மறைந்து கொண்டாள்.

உஷாவின் கண்கள் குப்பனையும் வண்டியையும் தேடிக் கொண்டிருந்தன. ஜீஜி அந்த ஆயாவின் கண்களுக்கு அகப்படாததைப் போல், அவளுக்கும் தன்னை அழைத்துப் போக வந்திருக்க வேண்டிய வண்டி தென்படவில்லை.

"நித்தம் இது ஒரு ரோதனையாப் போச்சுடி!" என்று ஆயா இரைந்து முணுமுணுத்தாள். அவளுக்குக் களைப்பும் கோபமும் வந்தன. அவளுக்குப் பின்னால் வந்தவர்கள்கூடப் போய் விட்டார்கள். கூட்டம் பாதி கரைந்துவிட்டது.

உஷா நன்றாகப் பார்த்து விட்டாள். குப்பனையும் காணோம்; வண்டியையும் காணோம்! அவள் வகுப்பு அறையை விட்டுக் கடைசியாகத்தான் வந்தாள். அதனால் குப்பன் வந்து விட்டுப் போயிருப்பானோ என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. அப்படி அவன் சட்டென்று போகக் கூடியவனுமல்ல. எத்தனை நேரமானாலும் அவன் அவளை அழைத்துக்கொண்டு போகாமல் முடியுமா?

உஷாவுக்குக் கொஞ்சம் கலக்கமாக இருந்தது. சில சமயங்களில் இப்படி நேர்ந்து விடுவதுண்டு. அப்போதுகூட அவள் வேறு யார் அழைத்தாலும் போகாமல் வாசலிலேயே நின்று கொண்டுதான் இருப்பாள். குப்பன் வந்து தன்னைக் காணாமல் திகைப்பான்என்று அவளுக்குத் தெரியும். ஆனால் இன்று அவளுக்கு உடனே தன் தாயின் நினைவுதான் வந்தது. அம்மாவுக்கு உடம்பு சரியாக இல்லை என்பதை நினைக்கவே அவளுடைய பிஞ்சு உள்ளம் வெதும்பியது.

அவளுக்குஒன்றும் பிடிக்கவில்லை. ஜீஜியின் விளையாட்டுக் கூட வேதனையாக இருந்தது. நெற்றிப் பொட்டில் பட்ட காயத்தை அவள் இலேசாகத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

ஜீஜி புத்தகப் பெட்டியைச் செடி மறைவில்



வைத்துவிட்டு, பூனைபோல் ஆயாவுக்குப் பின்னால் போய் நின்று, "பே-ஏ!" என்று பயமுறுத்தினான். ஆயாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அத்தனை பெரிய உடம்பு குலுங்கியதைக் கண்டு ஜீஜீ கை கொட்டிச் சிரித்தான்.

"இதென்ன விளையாட்டு, ஜீஜீ! வூட்டுக்குப் போக வேணுமா?" என்று அவனுடைய இரு கைகளையும் பிடித்துக்கொண்டு வண்டிக்கு இழுத்துச் சென்றாள் ஆயா. வண்டி புறப்பட்ட பிறகுதான் புத்தகப் பெட்டியைப் பற்றிச் சொன்னான் ஜீஜீ. உஷாவுக்கு அருகில் வந்து நின்றது வண்டி.

"வண்டி வரல்லியா?" என்றான் ஜீஜீ.

உஷா தலையை அசைத்தாள். அநேகமாக எல்லாக் குழந்தைகளுமே போய் விட்டார்கள். வீட்டுக்குப் போய் அம்மாவுக்கு உடம்பு அதிகமாய் இருக்கிறது என்று தெரிந்து கொள்வதைவிட அங்கேயே வண்டி வராத சாக்கில் நிற்கலாம் போல் இருந்தது உஷாவுக்கு.

ஆனால் ஜீஜீ விடவில்லை. உஷாவை வற்புறுத்தி வண்டியில் ஏறிக் கொள்ளச் சொன்னான்.

"சாமீ, பகவானே! அம்மாவுக்கு ஒண்ணுமில்லாமல் உடம்பு குணமாயிடணும்!" என்று வேண்டிக் கொண்டே உஷா வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். வரும் வழியெல்லாம்கூட அவளுக்கு இதே பிரார்த்தனைதான்

அந்தக் குழந்தையின் குரல் இந்த நகரத்துச் சந்தடியிலும் ஆண்டவனுக்குப் போய் எட்டிவிட்டது போலிருந்தது. சொர்ணம்பாள் வாசல் வராந்தாவில் வந்து நின்று உஷாவை எதிர் பார்த்துக் காத்திருந்தாள். உஷா வேறு ஒரு வண்டியில் வந்து இறங்குவதைப் பார்த்தபிறகுதான் அவளுக்கு நல்ல மூச்சே வந்தது. அவ்வளவு நேரமாக உள்ளுக்கும்

அருள் வாக்கு

விதை இல்லாமல் மரம் தோன்றாது. புளியங் கொட்டை முளைக்கிற போது பார்த்தால் தெரியும். முளை கண்டவுடன் அந்த விதையை இரண்டாகப் பிளந்தால் அதற்குள் ஒரு மரமே இருப்பது தெரியும். பெரிய மரமாக வளரும் சக்தி அதனிடத்திலேயே இருக்கிறது. எல்லா விதைகளிலும் அப்படித்தான் என்றாலும் புளியங் கொட்டையில் தெளிவாகப் பார்க்க முடியும். உலகத்துக்குள் எத்தனை சக்தி, மேதை, சாமர்த்தியம் முதலியவை இருந்தாலும் அத்தனைக்கும் காரணமான மூலப்பொருளான பரம்பொருள் இல்லாமல் ஒன்றுமே உலகில் தோன்ற முடியாது.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சீ காமகோடி பீடம்

வாசலுக்குமாக நடந்து கொண்டிருந்த அவள் நிற்க முடியாமல் சோர்ந்து போனாள். அவளுக்கு இருந்த படபடப்பில் கீழே விழுந்து விடாமல், படுக்கை வரையில் போனதே பெரிய காரியம்தான். வந்த குழந்தையைக்கூடப் பார்க்க முடியாமல் கண்களை இறுக மூடிக் கொண்டாள். பெரிய குற்றம் ஏதோ புரிந்து விட்டவளைப் போல் அவள் உஷாவை நேருக்கு நேர் பார்க்கவே அஞ்சினாள். தன்னுள்ளே விரும்பத்தகாத ஒருத்தி வந்து புகுந்து கொண்டு தன்னை விரட்டிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது அவளுக்கு.

"அப்பாடா! அம்மாவுக்கு ஒன்றுமில்லை! எனக்காகத்தான் வாசலில் நிற்கிறாள்! என்னைப் பார்த்து விட்டாள்! அவளுக்கு ஒன்றுமில்லை!" — உஷாவின் குழந்தை உள்ளம் மகிழ்ச்சியினால் துள்ளியது. குப்பன் வண்டியை எடுத்துக்கொண்டு வராததைப் பற்றி அவளுக்கு அக்கறையே இல்லை.

"வந்திட்டியா, உஷா? சித்தே நேரத்திலே அம்மா எப்படித் தவியாத் தவிக்கப் போயிட்டாங்க!" என்று சொல்லிக் கொண்டே எதிரே வந்தாள் பொன்னி.

"நான்தான் வந்திட்டேனே; அம்மா எங்கே இப்போ?"

"அந்தப் படபடப்புத் தாங்காமெத்தான் படுத்துட்டாங்க!"

உஷா தன் தாயைப் போய்ப் பார்ப்பதற்குத் துடியாய்த் துடித்தாள். ஆனால் அதற்குள், "பொன்னி! குழந்தையைக் கவனித்துக் கொள்கிறாயா?" என்று கேட்டாள் சொர்ணம்பாள்.

உஷாவின் உற்சாகம் கொஞ்சம் குறைந்து விட்டது. அம்மா வந்து தன்னைக் கவனிக்காமல், பொன்னியை விட்டுக் கவனிக்கச் சொல்கிறாளே என்று குறையாக இருந்தது.

பொன்னி சோப்பைக் குழைத்து முகத்தைக் கழுவிவிட்டு, பவுடரை ஒற்றி, வாசனைத் தைலத்தைத் தடவி, சீவிச் சிங்காரித்தபோது, உஷா அவளைப் பார்த்து, "ஏன் பொன்னி, அம்மாவுக்கு உடம்பு இன்னும் சரியாகப் போகலியா?" என்று விசாரத்தோடு கேட்டாள்.

பொன்னி செல்லமாக அவளுடைய கதுப்புக் கன்னத்தைக் குழைத்து, "அம்மாவுக்கு உடம்புக்கு ஒன்றுமில்லே, உஷா!" என்றாள்.

"நீ பொய் சொல்றே! பின்னே ஏன் அம்மா படுத்திருக்காங்க!"

"நான் ஒன்று கேப்பேன். அதுக்கு ஒழுங்காப் பதில் சொன்னாத்தான் நானும் உண்மையைச் சொல்வேன்!"

"ஒன்று என்ன, எத்தனை வேணுமானாலும் கேட்டுக்கோ! நல்லாக் கேட்டுக்கோ—பதில் சொல்றேன்!"

"உனக்குத் தம்பிப் பாப்பா இருந்தால் தேவலாமா, தங்கச்சிப் பாப்பா இருந்தால் தேவலாமா!"

உஷாவின் அழகிய முகம் சிவந்து கொடுத்தது. "எங்கே இருக்கு, சொல்லேன்!" என்றாள்.

பொன்னி சிரித்துக் கொண்டே, "உனக்கு எது வேணும், அதைச் சொன்னாத்தான்!" என்றாள்.

"தம்பிதான்; இல்லே இல்லே, தங்கச்சிப் பாப்பாதான்! ஊஹூம்; இரண்டு பாப்பாவும்!"

"அடேயப்பா, ஆசையைப் பாருங்கடி!"

"எங்கே இருக்கு, பொன்னி!"

"இருக்குமா? பொறக்கப் போவுது!"

"அம்மாவுக்கா பொறக்கப் போகுது!"

"ஆமா, ஆமா! அதான் முடியாமே படுத்திருக்காங்க அம்மா! தெரிஞ்சுதா?"

உஷா அதற்குமேல் ஒரு கணமும் அங்கே நிற்கவில்லை. நெற்றிக்குக்கூடப் பொட்டு இட்டுக் கொள்ளாமல், சொர்ணம்பாளின் படுக்கையை நோக்கிப் பாய்ந்துகொண்டு ஓடினாள். சொர்ணம் நடுநடுங்கிப் போய் விட்டாள். உஷாவின் முகத்தைப் பார்க்கவே அவளுக்குக் கூச்சமாக இருந்தது. அதற்குத் தகுந்தாற் போல உஷா எட்டவே நின்றுகொண்டு, தன்னைப் பார்க்கவே கூசுகின்ற தாயின் முகத்தை உற்றுக் கவனித்தாள்.

"உனக்குப் பாப்பா பிறக்கப் போகிறதா?" என்று கேட்டாள்.

கூண்டில் நிற்க வைத்த குற்றவாளியைப் போல், சொர்ணம்பாளுக்கு அதை உடனே மறுக்க வேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றியது. அர்த்தமின்றி அவள் அவசரமாகத் தலையை அசைத்தாள். இரண்டு லேடி டாக்டர்கள் உறுதியாகக் கூறிய பிறகுகூட அது உண்மையாகிவிட முடியாது என்றே அவள் நம்பினாள். அதைவிட அது பலிக்கக்கூடாது என்றும் அவள் விரும்பினாள். இவ்வளவு காலத்துக்குப் பிறகு தெய்வம் தன்னை அடுத்திருந்து வஞ்சித்து விட்டதாக அவளுக்குத் தோன்றியது. அது பொய்த்து, அந்த வஞ்சனை பாழ்த்துப் போகவேண்



இது மிட்லண்டாரின் தயாரிப்புதானுவென்று நிச்சயம் செய்துகொள்ளுங்கள்

Midland

டின்களில் வழங்கபபடும அநேகவித பழவகைகளில மிக அருமையானது மிட்லண்டாரால் தயார் செய்யப்படடவைதான் பழங்கள், காய்கறிகள்—ஜேம், பழரஸங்கள், ஜெல்லி முதலானவைகள் தயார் செய்யபபடுகின்றன. தேவைக்கு வேண்டியபடி தேர்ந்தெடுப்பதற்குரியதான இருபத்தெட்டு விதமான பழவகைகள் கிடைக்கின்றன. மிட்லண்டாருடைய தயாரிப்புகள் காலங்களில் கிடைக்கும் பழங்களைப்போல் வருஷ முழுவதும் கிடைக்கின்றன. பழம், காய்கறிவகைகள் தயாரிப்பவர்களில் நாட்டிலே மிகப பெரியவர்கள் மிட்லண்டார்தான். ஆகையால்தான் தேர்ந்தெடுப்பதற்குரியதான மிகச் சிறந்த பழவகைகள் அவர்களிடமிருந்து கிடைக்க ஏதுவாகின்றன.

MIDLAND

தயாரிப்பாளர்கள் :

தி மிட்லண்ட் ப்ரூட் & வெஜிடபிள் ப்ராடக்ட்ஸ் (இந்தியா) மதுரா

விநியோகஸ்தர்கள் :

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பம்பாய்

இந்தியாவிற்கான ஏஜெண்டுகள் : பாரி அன்டு கோ. லிட்.

டும் என்று அவள் உள்ளூறத் துடித்தாள். எல்லாவற்றையும் சேர்த்துத்தான் அவள் தலையை ஆட்டினாள். மறைந்திருந்த வயிற்றுப் புரட்டல் மறுபடியும் வந்து விட்டது. அவள் அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டே, "பொன்னி! ஏ, பொன்னீ!" என்று உரக்க அழைத்தாள்.

"கூப்பிட்டீங்களா, அம்மா!"

"உனக்கு ஏதாவது மூளை இருக்கிறதா, இல்லையா? பசியோடு வந்திருக்கிற குழந்தையிடம் போய் என்ன சொல்வது என்பது இடையாதா, உனக்கு? குப்பன் வரட்டும், சொல்கிறேன்! தப்பும் தவறுமாகவா உளறுகிறாய்? போ, போ! அந்த மருந்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, குழந்தைக்கு ஆகாரம் கொடுக்கிற வழியைப் பார்!" என்று சூடாகக் கூறினாள் சொர்ணாம்பாள்.

பொன்னிக்கு இதையெல்லாம் உஷாவிடம் போய் ஏன் சொன்னோம் என்று ஆகிவிட்டது. உஷா ஒன்றும் தெரியாத பச்சைக்குழந்தையல்ல. செல்லம் பாராட்டிக் கொஞ்ச வேண்டிய விஷயங்களில் மட்டும் அவள் குழந்தையாக இருந்தாளே தவிர, சொன்னவற்றைப் புரிந்து கொள்வதிலும் வாங்கிக் கொள்வதிலும் அவள் ஒன்றும் அறியாத குழந்தையாக இல்லை. சில விஷயங்கள் அவளுக்கே புரிந்தது; மற்றும் சிலவற்றைப் புரிந்துகொள்ள முடிந்தது.

"பொன்னி ஒண்ணும் பொய் சொல்லவில்லை. நீதான் பொய் சொல்கிறாய்!" என்று தாயைப் பார்த்துக் குற்றம் சாட்டினாள் உஷா.

"சரி; நான்தான் பொய் சொல்கிறேன், போயேன்!" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சொர்ணாம்பாள்.

"எங்கிட்டே சொல்லக் கூடாதுன்னு நீதான் மறைக்கிறாய்!" உஷாவுக்கு ரோசம் முட்டிக்கொண்டு வந்தது.

கடைக்கண் வழியே ததும்பிய கண்ணீர் வடிய, சொர்ணாம்பாள் அசையாமல் படுத்திருந்தாள்.

'டிக்...டிக்...டிக்...' சுவர்க் கடிகாரம் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. உஷா மெல்லத் தன் தாயின் கன்னத்தைப் பிடித்துத் திருப்பி, "அம்மா, அம்மா!" என்று குரல் கம்மி வர அழைத்தாள்.

"கண்ணைத்திறந்து என்னைப்பாரேன்!"

சொர்ணாம்பாள் அந்தக் களங்கமற்ற எழில் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தாள். நெற்றியில் பட்டிருந்த காயம் நெஞ்சில் பட்டிருந்ததைப் போல் வேதனையளித்தது.

"எம்மேலே உனக்குக் கோபமா?" என்றாள் உஷா.

"ஊஹூம்..."

"எனக்குத் தங்கச்சி பாப்பாவேணும்னு எத்தனை ஆசையாயிருக்கு, தெரியுமா? எல்லாரும் நான்வெண்டுக்கு இரண்டு இரண்டு பேராகத்தான் வராங்க! நான் மட்டும்தான் தனியாப் போக வேண்டியிருக்கு! எனக்குத்தான் ஜீஜியைப்போல் ஒரு தங்கச்சிப் பாப்பாவே இல்லே!" என்றாள் உஷா.

சொர்ணாம்பாள் மெய்மறந்து கண்களை மூடிக் கொண்டாள்.

அத்தியாயம் 6

வெள்ளையன் தோட்டத்தில்

பொன்னியும் குப்பனும் விடுதலையடைந்த பறவைகளைப்போல் வெளியில் வந்தார்கள். பால்போல் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. ஜுரு ஜுருவென்று காற்று வீசியது. அவ்வளவு சீக்கிரம் வேலைகள் முடிந்து வீடு திரும்புவோம் என்று அவர்கள் எண்ணவேயில்லை. மணி பதினொன்றோ, பன்னிரண்டோ என்றுதான் எண்ணியிருந்தார்கள்.

ஆனால் ஒன்பது அடித்ததுமே அவர்கள் வீட்டுக்குப் போக அனுமதி கிடைத்து விட்டது. பாரிஸ்டர் பரமசிவம் அழைப்புக்கு இணங்க, கண்ணபிரான் அன்று இரவும் சாப்பிட வரவில்லை. எட்டுமணிக்கெல்லாம் அவன் ரயிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பதாக டெலிபோன் செய்திதான் வந்தது. பாரிஸ்டருக்கு இது பெருத்த அடிதான். அவருக்கு இது போன்ற ஏமாற்றங்கள் சேர்ந்தது இல்லை. இது வெறும் ஏமாற்றமாக மட்டும் படவில்லை. வேறு ஏதோ ஒன்று கலந்திருப்பதாகவும் பட்டது. சிங்கப்பூர் முத்தையா சென்னைக்கு வந்தால் அவரிடம் கலந்து கொள்ளாமல் எதையும் செய்ய மாட்டார். அப்படியிருக்க, அவர் அழைத்த பிறகும் கண்ணபிரான் சொல்லிக் கொள்ளாமல் போனது அவருக்கு வித்தியாசமாகவே பட்டது. புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பமாவது போல் தோன்றியது. அதுவும் அவனோடு ஒரு பெண்ணையும் பார்த்த பிறகு அவருக்கு இருந்த உற்சாகமெல்லாம் சப்பிட்டு விட்டது.

"புதுப் பணத்துக்கே தலைகால் தெரியாது; அதிலும் இளவட்டம். கேட்க வேண்டுமா? அதனாலேதான் நம்ம ஐயாவுக்கு முகத்திலே சுரத்தே இல்லை!" என்றான் குப்பன்.

"அது யாரு, பொண்ணு?" என்று கேட்டாள் பொன்னி.

"யாருக்குத் தெரியும்? முந்தியே ஒருத்தருக்கு ஒருத்தர் தெரியும் போலத் தோணுது. அந்தப் பெண்ணோடெ ஊருக்குத்தான் புறப்பட்டுப் போயிருக்காப்பலே தெரியுது!" என்றான் குப்பன்.

பங்களாவை விட்டு வரும்போதே வாயில் வாசனைப் பாக்கும் கையில் ஒரு

பிடி கொழுந்து வெற்றிலையுமாக வந்திருந்தாள் பொன்னி. ஒவ்வொன்றாகச் சுண்ணாம்பு தடவி மடித்து வாயில் போட்டுக்கொண்டே, "அதைக் கேட்டதுக்கு அப்புறம் நம்ம ஐயா, அம்மாகிட்டேகூட ஒரு வார்த்தை பேசலே; சரியாவும் சாப்பிடலே. தலைவலின்னு போய்ப் படுத்திட்டாரு!" என்றான் அவன்.

அவர்களுடைய குடிசை வெள்ளையன் தோட்டத்தில் இருந்தது. பாரிஸ்டர் வீட்டிலிருந்து குறுக்கு வழியாகப் போனால் கால் மைல் தூரம் இருக்கும். ஒழுங்கான வழியென்றால் தெருக்களையெல்லாம் சுற்றிக் கொண்டு ஒரு மைல் போல நடக்க வேண்டும். ஒழுங்கு வழி எதிலுமே கொஞ்சம் சுற்று வழியாகத்தான் இருக்குமோ? ஆனால் பொன்னியும் குப்பனும் ஒழுங்கு தவறுதவர்கள். எவ்வளவு இருட்டு வேளையாக இருந்தாலும் எத்தனை அடைமழையாக இருந்தாலும் ஊரைச் சுற்றிக் கொண்டு போவதில்லை. குறுக்கு வழியானாலும் குறிப்பிட்ட இடத்துக்குச் சுருக்கப் போகும் வழி என்று அந்த ஒற்றையடிப் பாதை வழியாகவே சென்றனர்.

நிலா வெளிச்சத்தில் நெற்றியிலிட்ட குங்குமம் நிறம் மாறித் தெரிந்தது. வாயில் மென்ற வெற்றிலைக் கலவை பல் கூச மணத்தது. அள்ளிச் செருகிய கொண்டை அழகூட்ட அவள், "ஆமாம்; இன்னிக்கு உஷாவுக்கு வண்டியை எடுத்துக்கிட்டுப் போகாம எங்கே போயிட்டீங்க இரண்டு பேருமா?" என்று கேட்டாள்.



"யாரு சொன்னது, போகல்லேன்னு? அடையாறு பங்களாவுக்குப் போயிட்டு, நேரே கான்வென்ட்டுக்குத்தான் சென்றோம். யாரு மறந்தாலும் நான் மறப்பேனா? ஆனால் அதுக்குள்ளே அது யார் கூடவோ சேர்ந்து வந்திட்டுது...." என்றான் குப்பன்.

திடீரென்று பொன்னி ஏதோ யோசனையில் ஆழ்ந்தவளாய், "இப்பவே இப்படி இருக்கே, போகப் போக என்ன ஆகப் போவுதோன்னு எனக்கும் பயமா இருக்குது!" என்றாள்.

"போகப் போக என்ன ஆயிடப் போவுது?" என்று கேட்டான் அவன்.

"செல்லமா ஒரு புள்ளையா வளர்றது எப்படி? போட்டிக்கு இன்னொண்ணு வந்திட்டா எப்படி?"

"அதுக்குச் சொல்றியா? ஆனா எத்தினி பொறந்தாலும் பெத்தவங்களுக்குச் சரியாப் போயிடும்!"

"எல்லாம் பெத்து எடுத்து வளத்தாப் பலேதான் பேச்சு!" என்று இடித்துக் காட்டினாள் பொன்னி.

"அதுக்கு என்ன செய்யறது? ஆனா வயசுக்காரங்களுக்கே ஒண்ணையும் காணோம். இத்தினி வயசுக்குமேலே விவரம் தெரிஞ்ச பிள்ளை இருக்கிறப்பவே இன்னொண்ணு பொறக்கறேங்குது!" என்றான் குப்பன்.

"ம்ம்..." என்று நீண்ட பெருமூச்செறிந்தாள் பொன்னி.

"அதுக்கு நீ ஏன் பெருமூச்சு விடறே? அம்மாளுக்கே உண்டாகறப்போ உனக்கு என்ன அவ்வளவு வயசா ஆயிட்டுது? நாளைக்கே உனக்கும் பொறக்கும், போ!" என்றான் குப்பன்.

"சரி, சரி; நான் ஒண்ணும் வேண்டலையே இப்போ?"

"ஐயாவும் அம்மாளும் மட்டும் வேண்டித்தான் குழந்தை பிறக்கப்போவுதோ?"

"பொறக்கறதும் பொறக்காததும் நம்ம கையிலேயா இருக்குது?"

"பின்னே யார் கையிலே இருக்குதாம்?"

"கோணா மாணான்னு பேசினா தெரியுமா? க்குங்...நிக்காமெ வழியைப் பார்த்து முன்னாலே நட!" என்று கடிந்து கொண்டாள் பொன்னி.

"வழி கூடக் கோணா மாணான்னுதான் இருக்குது. அதனாலே இப்படியே திரும்பிடுவமா?" என்று கேட்டான் குப்பன்.

"ஏன், என்னிக்கும் இல்லாமே இன்னிக்கு ஒருநாளு நேரத்தோடே வந்துட்டோமேன்னுட்டா?"

"தோட்டத்திலே இருக்கிறவங்களுக்குக் கூட நாம வந்தது அதிசயமாத்தானே இருக்கும்?"

"யாருக்கு இருந்தாலும் இல்லாமெ போனாலும் பாஞ்சாலி அக்காளுக்குப் பத்திக்கிட்டுத்தான் வரும்!!"

"அது ஏன் அப்படி?"

"அதென்னமோ யாரு கண்டாங்க? ஐயா ஆட்டுலேந்து நாம ஏதோ அள்ளிக் கட்டிக்கிட்டு வருகிறதாத்தான் அதுக்கு நெனப்பு!"

"அந்த நெனப்புக்குக் காரணம்?"

"அவதான் எத்தினி நேரமானாலும் வாசல்லேயே கெடக்கிறாளே! ஐயோ பாவமின்னு ஏதோ ரெண்டு நாளு அம்மா கொடுத்த பணியாரத்திலே கொஞ்சம் எடுத்துக் குடுத்திட்டேன். அதுலேருந்து பாரு. எங் காலடிச் சத்தம் கேட்டாலே முணகல்தான். இருந்தப்போ ரெண்டு நாளு குடுத்திட்டா எப்பவும் முடியுமா? காலிப் பாத்திரத்தை மூடிக்கிட்டுப் போனாக்கூடக் கபட்டுப் பார்வைதான்! பாத்தாப் பாத்துட்டுப் போறான்னு போனா. பக்கத்து வீட்டுக்காரிக்கிட்டே சொல்லியும் காண்பிச்சுட்டா!"

பேச்சு எங்கேயோ தொடங்கி எங்கேயோ வந்து விட்டது. பொன்னியின் கோபத்தை அதிகமாகக் கிளற விரும்பாமல் அவன், "அவ கண்ணாலே படாமத் தானே வம்பு? படாமே போயிடேன்!" என்று கூறினான்.

இது சாத்தியமில்லை என்பது அவனுக்கே தெரியும். இந்தப் பாதை அந்தப் பாஞ்சாலியின் வீட்டு வாசலில்தான் போய்ச் சேருகிறது. இந்தப் பாதையே தன்னால் ஏற்பட்டது என்று கூட அவள் சொல்லியிருக்கிறாள். ஆனால் அதையெல்லாம் நிரூபிக்கச் சொல்லி யார் கேட்பார்கள்? வெள்ளையன் தோட்டத்திலே நூறு குடிசைகளுக்கு மேல் இருந்தன. சென்னையில் எத்தனை விதமான தொழில்கள் உண்டோ, அத்தனை தொழில்களைச் சேர்ந்தவர்களும் அங்கே யிருந்தார்கள். எல்லாம் இந்தப் பத்து வருஷங்களுக்குள் குடிசை கட்டிக் கொண்டு குடியேறியவர்கள்தான். ஆனால் அதற்கும் முன்பே அங்கே இருப்பவள் என்கிற மதிப்பு பாஞ்சாலிக்கு இருந்தது. அவ்வளவு பேருக்கும் பாஞ்சாலி என்றால் கொஞ்சம் யோசனைதான். அவள் பார்ப்பதே சிறிது அச்சத்தைக் கொடுத்தது. அவளுடைய கணவன் பரட்டைப் பக்கிரியும் சரி, அக்கா மகன் என்று வளர்ந்த பாபுவும் சரி, அவளிடம் எதிர்த்துப் பேசவே நடுங்கினார்கள். சம்பாதிக்கும் பணத்தைக் கணக்குப்படி கொண்டு வந்து கொடுத்துவிட வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. ஆனால் குடிசையில் அடுப்பு எரிவதோ, அடுப்பில் பூனைக்குட்டி தூங்குவதோ, அவளுடைய விருப்பத்தைப் பொறுத்தது. நல்ல குணம் இருந்தால் சோறு எடுத்துப் போடுவாள்; அல்லது எடுத்துப் போட்டுக் கொள்ளச் சொல்லுவாள்; இல்லையோ ஒரோரு நாளைக்கு ஒரோரு காரணத்தைச் சொல்லி அவர்கள் சாப்பிட வரும் நேரத்துக்குச் சுருட்டிக் கொண்டு படுத்து விடுவாள். படுத்தால் படுத்ததுதான்; ஏனென்று இவளை யார் கேட்பது? பகல் வேளைகளில் ஆண்களை அதிகம் காண முடியாத அந்தத் தோட்டத்துக்கு அவள் ஒரு தனியரசி. அவளுக்கு மாமூல் உண்டு; தண்டனும் உண்டு.

அவளுடைய கண்ணில் படாமல் பொன்னி தன் குடிசைக்குப் போவதற்கு இன்னொரு பிறப்புத்தான் எடுக்க வேண்டும். அதனால் அவள், "எனக்கு என்ன மடியிலே கனம் இருந்தாத்தானே வழியிலே பயம்! நான் ஐயா ஆட்டிலேந்து அள்ளிக் கட்டிக்கிட்டு வரதும் வராதும் ஆண்டவனுக்குத் தெரியாதா?" என்றாள்.

"கெடக்கறா விடு!" என்றான் குப்பன்.

"தாய் தகப்பனில்லாத பிள்ளையை வளக்கிறேன்னிட்டு, ஒருவேளை சோறு கூடப் போடாமெ காசைமட்டும் பிடுங்கிக்கிறாளே. அதைப் போல என்னையும் எண்ணிட்டாப் போலிருக்கு!" என்று குமுறினாள் பொன்னி. எப்போதோ வரவேண்டிய கோபம் அவளுக்கு இப்போதுதான் பொத்துக் கொண்டு வந்தது.

நிலவு வெள்ளத்தில் நிழலார்ந்த கறுப்புத் திட்டுப்போல அந்த வெள்ளையன் தோட்டம் துண்டாகக் காணப்பட்டது. எந்தக் காலத்தில் அது எழில் மிகுந்த தோட்டமாக இருந்ததோ, இப்போது அங்கே சாக்கடைகள் பாயும் சில தென்னை மரங்கள் மட்டுமே இருந்தன. கிராமங்களில் துப்புரவாகவும் ஒட்டுறவாகவும் வாழ்ந்த வாழத் தெரிந்த மக்கள் கெட்டுப் போவதற்காகவே பட்டணக் கரைக்குப் பிழைக்க வருகிறார்களோ என்று எண்ணும்படி இருந்தது அந்தத் தோட்டம். மாடுகள் கட்டிய திடலைவிட அறிவு படைத்த மனிதர்கள் வாழும் அந்த இடம் ஆபாசமாக இருந்தது. அடுத்த வீட்டுக்காரனை மதியாத சாக்கடைகள் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து கொண்டிருந்தன. இருட்டியதும் கொசுக்கள் கூட்டம் கூட்டமாகப் போர்முரசு கொட்டிக் கொண்டு புறப்பட்டு எழுந்து விட்டன. குடி தண்ணீர்க் குழாயடியில் ஒரே சகதிக் களமாக இருந்தது. கோழி சீய்த்த குப்பைமேடு ஒவ்வொரு வீட்டு வாசல்

வரையிலும் பரவியிருந்தது. எல்லாவற்றுக்கும் தொடக்கம் போல் பாஞ்சாலியின் குடிசைதான் முதன் முதலில் காட்சியளித்தது.

தோட்டம் நெருங்கிவிட்டதால் பொன்னியும் குப்பனும் பேச்சை நிறுத்திக் கொண்டார்கள். மேடும் பள்ளமுமாக இருந்த பாதையில் ஏறி யிறங்கி நடந்து வந்தபோது திடீரென்று ஏதோ பெரிய இரைச்சல் ஒன்று எழுந்தது. பாஞ்சாலியின் குரல்தான் ஓங்கிக் கேட்டது.

"அது என்ன, சண்டையா?" என்று கேட்டான் குப்பன்.

"பாஞ்சாலியின் குரல்தான் பலமாகக் கேக்குது! சண்டையாத்தான் இருக்கணும்!" என்றாள் பொன்னி.

இருவரும் மௌனமாக நடந்தார்கள். இப்போது பரட்டைப் பக்கிரியின் குரலும் கேட்டது.

"சரிதான். புருசன் — பெஞ்சாதிக்குள்ளே சண்டை போலிருக்குது!" என்று கூறினான் குப்பன்.


"இல்லெ, இல்லெ, நீ ஒண்ணு!" என்றாள் பொன்னி.

"அந்த ஆம்பிளேக்கு அவகிட்டே சண்டை போட அத்தினி தைரியம் வந்திட்டுதோ? 'போடு தோப்புக்கரணம்'னு, எண்ணிக்கடி. தாயே!'ங்கிற ஆம்புளே அப்புறம் இந்தத் தோட்டத்துப் பக்கம் தலையைக் காட்டறதா, அப்படியே எங்கியானும் போயிடறதா? பெஞ்சாதிக்குப் பரிஞ்சிக்கிட்டு அவுரும் வரிஞ்சி கட்டிக்கிட்டு வருவாரு!" என்று புள்ளி போட்டது போல் கூறினாள் அவள்.

தோட்டத்தின் எல்லையை மிதித்தபோது அவள் கூறியதுதான் சரியாக இருக்கும் போல் தோன்றியது. பாஞ்சாலிக்கு அவள் கணவன் பரட்டைப் பக்கிரி ஒத்துப் பாடிக் கொண்டிருந்தான். இடையில் யாரோ, "ஐயையோ யப்பாடி!" என்று அழுது துடிப்பது கேட்டது.

நிலவின் நிழலிருட்டில் பாஞ்சாலியின் வீட்டு வாசலைச் சுற்றி ஒரு சிறு கூட்டமே கூடி நின்றது. அது வரையில் ஒருவராவது மூச்சு விட்டதாகத் தோன்றவில்லை. ஆனால் அழுகைச் சத்தம் தொடங்ியதும் இரண்டு மூன்று குரல்கள், "இதோ பாரு, பாஞ்சாலி! இதோ பாரு, பக்கிரி, இதைக் கேளேன்!" என்று சமாதானம் செய்வதற்கு அவசரமாக முனைந்தன.


சமாதானக் குரல் கிளம்பியதுமே, சண்டைக் குரல் இன்னும் தீவிரமாக எழுந்தது: அதைத் தொடர்ந்து அடிக்கும் சத்தமும் பலமாகக் கேட்டது. தாய் தகப்பன் இல்லாதவன் என்று பொன்னி சற்றுமுன் கூறிய பாபுதான் அடி பொறுக்காமல் அலறித் துடித்துக் கொண்டிருந்தான். குப்பனுக்குப் பொறுக்கவில்லை. ஏதோ வேகம் வந்தவனைப் போல் விழுந்தடித்துக் கொண்டு அங்கே ஓடினான். (தொடரும்)



பாண்டிமாதேவி

நான்காம் அத்தியாயம்

கப்பல் கைப்பற்றப்பட்டது



நா. பார்த்தசாரதி

செம்பவழத் தீவில் மதிவதனி என்ற பெண்ணிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட பின்பு சேந்தனும், குழல்மொழியும் அந்தப் பெண் தங்களிடம் கூறிய ஒரு முக்கியமான செய்தியைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். கூத்தன் ஒன்றும் பேசாவிட்டாலும், அவர்கள் இருவரும் பேசுவதை யெல்லாம் அருகிலிருந்து உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான்.

“அம்மணீ! அந்தப் பெண் மதிவதனி கூறியதைக் கேட்டதிலிருந்து எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. ஒரு இளைஞர் இரண்டாயிரம் பொற்கழஞ்சுகள் கொடுத்துச் சங்கு வாங்கிக் கொண்டு சென்றதாக அவள் குறிப்பிட்டாள் அல்லவா? அப்படி வாங்கிச் சென்றவர் நம்முடைய இளவரசராக இருக்கலாமென்றே நான் நினைக்கின்றேன். குமாரபாண்டியருக்கு அப்படி ஒரு பண்பு உண்டு. அழகுணர்ச்சியும் கலைநுணுக்கமும் அவருக்கு அதிகம். ஒரு பொருள் அவருடைய மனத்துக்குப் பிடித்து விட்டதானால் அதன் விலைமதிப்பை எவ்வளவு உயர்வாக்கவும் அவர் தயாராகி விடுவார்” என்று கப்பலில் போய்க் கொண்டிருக்கும்போது குழல்மொழியிடம் தன் சந்தேகத்தைத் தெரிவித்தான் சேந்தன்.

“நீங்கள் சொல்வது போலவே எனக்கும் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அந்த இளைஞர் எப்படி இருப்பாரென்று நீங்களும் நானும், அடையாளம் கேட்க ஆரம்பித்த உடனேயே அந்தப் பெண் வாயை மூடிக் கொண்டு போய் விட்டாளே.”

“அவள் சாமர்த்தியக்காரப் பெண் அம்மணீ! ‘பிறருடைய வாயிலிருந்து இரகசியங்களை அறிந்து கொண்டு வருகிற திறமை’ எனக்கு அதிகம் என்று தங்கள் தந்தையாரிடம் நல்ல பெயர் வாங்கிய என்னையே ஏமாற்றி விட்டாளே அந்தப் பெண்!” என்று சேந்தன் கூறியபோது பக்கத்தில் அமைதியாக நின்று கேட்டுக்கொண்டிருந்த கூத்தன் சிரித்து விட்டான்.

“ஐயா! சாமர்த்தியசாலிகள், அறிவாளிகள், எல்லோரும் அநேகமாகப் பெண் பிள்ளைகளுக்கு முன்னால் ஏமாந்து போகிறவர்களாகத்தான் இருப்பார்கள்” என்று சிரித்துக் கொண்டே சொல்லி விட்டுச் சேந்தன் அடிப்பதற்குக் கையை ஓங்கிக் கொண்டு வருவதை எதிர்பார்க்கிறவனைப் போலப் பயந்து ஒதுங்கினான் கூத்தன்.

“பொட்டைப் பயலே! வரவர உனக்கு வாய்க் கொழுப்பு அதிகமாகி விட்டது. நாக்குத் துளிர்த்து விட்டது. மட்டு மரியாதை இல்லாமலா பேசுகிறாய்?” என்று சேந்தன்



கூப்பாடு போட்டான். "கூத்தா! நாங்கள் முக்கியமான செய்தி ஒன்றைப் பற்றி இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். சமயம் தெரியாமல் நீ ஏதாவது குறுக்கிட்டுப் பேசி நேரத்தை வீணாக்காதே" என்று குழல்மொழி கூத்தனைக் கடிந்து கொண்டாள். கூத்தன் அடங்கி நின்றான். அவர்களுடைய பேச்சு மேலே தொடர்ந்தது. சேந்தன் மிக மிக அந்தரங்கமானவற்றை யெல்லாம் மகாமண்டலேசுவரரின் புதல்வியிடம் விவரிக்கலானான்.

"அம்மணி! விரைவாகவும், திட்டமிட்டுக் கொண்டும் செய்ய வேண்டிய செயல்கள் இனிமேல்தான் நம்மை நெருங்குகின்றன. விழிஞத்துக்கும், இலங்கைக்கும் இடையிலுள்ள தொலைவில் ஏறக்குறையச் சரிபாதிக்கு மேல் கடந்து விட்டோம். மகாமண்டலேசுவரரும், மகாராணியாரும், ஒவ்வொரு நாளும், நாம் குமாரபாண்டியரை அழைத்துக்கொண்டு வருவதை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். இளவரசரை அழைத்து வருவதற்காக நாம்தான் அனுப்பப் பட்டிருக்கிறோம் என்ற விவரம் மகாராணியாருக்குத் தெரியாது. ஆனால் இளவரசரை அழைத்துக் கொண்டு வந்து சேர்ப்பது தம் பொறுப்பென்று உங்கள் தந்தை மகாராணியாருக்கு வாக்குறுதி அளித்திருக்கிறார். இன்னொரு பரம இரகசியமான செய்தியையும் இப்போது நான் உங்களிடம் சொல்லப் போகிறேன். உங்கள் தந்தைக்கு இப்போது மறைமுகமான எதிரிகள் அதிகமாகியிருக்கிறார்கள். தளபதி வல்லாள தேவனுக்குக் காரணம் கூற முடியாத ஒருவகை வெறுப்பு உங்கள் தந்தை மேல் ஏற்பட்டிருக்கிறது. உங்கள் தந்தையின் ஒவ்வொரு ஏற்பாடுகளையும் மறைமுகமாகத் தகர்த்து அவமானப் படுத்துவதற்குத் தளபதி முயற்சி செய்கிறான். இந்த முயற்சியில் ஆபத்துதவிகள் தலைவன் மகரநெடுங் குழைக்காதனின் ஒத்துழைப்பும் இரகசியமாகத் தளபதிக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அரண்மனையில் நடந்த கூட்டத்துக்குப் பின்பு கூற்றத் தலைவர்களும் உங்கள் தந்தை மேல் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். வேறொருவராயிருந்தால் இவ்வளவு எதிர்ப்புக்களைத் தாங்கிக் கொண்டு இருக்கவே இயலாது. அம்மணி! என் மதிப்புக்குரியவரும், உங்கள் தந்தையுமாகிய மகாமண்டலேசுவரரைப் பற்றி நினைக்கும்போது நான் கேள்விப்பட்டிருக்கும் விநோதமான பறவையைப் பற்றித்தான் எண்ணத் தோன்றுகிறது. மேலைக் கடலின் தீவுகளில் நெடுந் தூரத்துக்கு அப்பாலுள்ள தேசங்களில் 'நெருப்புக் கோழி' என்ற பெயரில் விந்தையானதொரு தீப்பறவை இருக்கிறதாம். அது கங்குகங்காக நெருப்புத் துண்டுகளை விழுங்கினாலொழிய அதற்கு வயிறு நிறையாதாம். அந்தத் தீப்பறவையைப் போல் வெம்மையும் கொடுமையும் நிறைந்த எதிர்ப்புக்களை யெல்லாம் விழுங்கி ஏப்பம் விட்டு விட்டுப் பசியாறி வளர்ந்து கொண்டிருக்கிறார் மகாமண்டலேசுவரர். உங்கள் தந்தை நம்மை இலங்கைக்கு அனுப்புகிற விவரம் தெரிந்திருந்தால் தளபதி அதைத் தடுக்கவும் ஏதாவது சூழ்ச்சி செய்திருப்பான். அரண்மனையில் நடக்கிற எந்த அந்தரங்கமான செய்தியும் தன் காதுக்கு எட்டச் செய்து கொள்கிற அளவுக்கு வசதியுள்ளவன் தளபதி."


"அது எந்த வசதியோ?" என்று குழல்மொழி இடைமறித்துக் கேட்டாள்.

"உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அம்மணி! தளபதி வல்லாள தேவனுக்கு ஒரு தங்கை இருக்கிறாள். எமகாதகப் பெண்பிள்ளை அவள். 'மகாராணிக்குத் துணையாக அரண்மனையில் தங்கியிருக்கிறேன்' என்று பேர் செய்து கொண்டு அரண்மனையில் நடக்கும் ஒவ்வொரு காரியத்தையும் உளவறிந்து கொண்டிருக்கிறாள் அந்தப் பெண்."

"பகவதிதானே! அந்தப் பெண்ணை நான் சிறு வயதில் பார்த்திருக்கிறேன். அவள் இப்போது அவ்வளவு சாமர்த்தியக் காரியாகிவிட்டாளா?" என்று குழல்மொழி நாராயணன் சேந்தனைக் கேட்டபோது கூத்தன் 'அச்' சென்று இரைந்து ஒரு தும்மல் தும்மினான். சேந்தனும், குழல்மொழியும் தங்கள் பேச்சை நிறுத்-

திக்கொண்டு கூத்தனை ஒரு கணம் கூர்ந்து நோக்கினார்கள். கூத்தன் உடனே வேறு எங்கோ கவனிப்பதுபோல் பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொண்டான். சேந்தன் குழல்மொழியின் காதருகே நெருங்கி, "அம்மணி! ஊர்பேர் தெரியாத இந்தப் பயலைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு நாம் இருவரும் எதையெதையோ ஒளிவு மறைவின்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். எனக்கு என்னவோ தொடக்கத்திலிருந்தே இவன் மேல் நம்பிக்கை இல்லை" என்று மெல்லச் சொன்னான்.

"கூத்தா! இப்போது இங்கே உனக்கு ஒரு காரியமும் இல்லை. நீ மேல் தளத்தில் போய்இரு. உன் உதவி எதற்காவது தேவையானால் நான் உன்னைக் கூப்பிடுகிறேன்" என்று குழல்மொழி அவனுக்குக் கட்டளையிட்டாள். கூத்தன் அந்தஇடத்திலிருந்து மேல் தளத்துக்குப் போக மனமில்லாதவனைப் போல் தயங்கித் தயங்கி நடந்து படியேறிச் சென்றான்.



"அம்மணி! இந்தப் பிள்ளையாண்டானால் நமக்குக் கெடுதல்கள்தான் வருமே ஒழிய நன்மையில்லைஎன்று என்மனத்தில்ஏதோ குறளி சொல்கிறது. நம்மை ஏமாற்றக் கூடிய மர்மமான அம்சம் ஏதோ ஒன்று இவனிடம் இருக்கிறது. நீங்கள் மட்டும் ஒரு வார்த்தை 'சரி' என்று சொல்லி விட்டால் கரைக்கே நடுவழியில் ஏதாவது ஒரு தீவில் இவனை இறக்கி விட்டுவிடுவேன். இவன் நம்மோடு இலங்கைவரை வந்து இறங்குவதில் எனக்குச் சம்மதமே இல்லை. நாம் போகிற காரியத்தின் இரகசியம் இவனால் வெளியாகவும் கூடும்" என்று சேந்தன் சொன்னபோது அதற்கு இணங்கிவிடலாமா, வேண்டாமா என்று குழல்மொழி மனப் போராட்டத்துக்கு ஆளானாள். அந்தச் சமயத்தில் மேல் தளத்துக்கு ஏறுகிற படியின் திருப்பத்தில் அடக்கிக் கொள்ள முடியாமல் யாரோ தும்முகிற ஒலி கேட்கவே சேந்தன் விரைவாக நடந்துபோய்ப்பார்த்தான். கூத்தன் அந்த இடத்திலேயே திருப்பத்தின் முதல் படியில் நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், சேந்தனுக்குக் கோபம் அளவின்றிப் பொங்கியது.

"பொட்டைப் பயலே! ஒட்டுக் கேட்டுக் கொண்டா நிற்கிறாய் இங்கே?" என்று அவன் இரையத் தொடங்கியபோது தடதடவென்று படியேறி மேலே ஓடினான் கூத்தன். இந்த நிகழ்ச்சியைப் பார்த்ததும் குழல்மொழிக்குக் கூட மனம் மாறி விட்டது. அந்தப் பிள்ளையின் மேல் அவளுக்கு உண்டாகியிருந்த சிறிது நல்ல எண்ணமும் போய்விட்டது.

"உங்கள் விருப்பம் போலவே கப்பலிலிருந்து இறக்கி விட்டுவிடுங்கள். ஆனால் எனக்கு ஒன்று தோன்றுகிறது. அந்த வாலிபன் விழித்திருக்கும்போது கீழே இறக்கிவிட நேர்ந்தால் அவனுடைய எதிர்ப்பையும் கலகம் முதலிய வம்புகளையும் சமாளிக்க வேண்டியிருக்கும். அதனால் இரவில் அவன் தூங்கிக் கொண்டிருக்கும் போது காதும் காதும் வைத்தாற்போல் நம் ஆட்களிடம் சொல்லிப் படுக்கை


மழமழப்பான
சுகமான
க்ஷவரத்திற்கு...
வாழ்வில் வெற்றி கண்டவர்கள் வேறெந்த தயாரிப்பையும்
நாடாமல்
பாமாலிவ்
ஷேவிங் கிரீமைத்தான் உபயோகிக்கிறார்கள்
PALMOLIVE BRUSHLESS shaving cream
PALMOLIVE LATHER shaving cream
பிரஷ் தேவையில்லை சிரமம் இல்லை— சுத்தமான உடனடி க்ஷவரம்!
நுரையுடனோ அல்லது பிரஷ் இல்லாமையோ நீங்களே தேர்ந்தெடுங்கள்
பாமாலிவ் என்றாலே உயர்ந்த ரகம்!

PL51/6/2


கால்கேட்டின்
துப்புரவாக சுத்தம் செய்யும்
வன்மை உங்களது
பற்களையும் ஈறுகளையும்
பாதுகாக்கிறது!
சாஸ்திரீயமாக அமைக்கப்பட்ட கால்கேட் டூத் பிரஷ் உங்கள் பற்களின் இடுக்குகளில் சுலபமாக நுழைகிறது... உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் துப்புரவாக சுத்தம் செய்கிறது... பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது! உங்கள் பற்களையும், ஈறுகளையும் கால்கேட் டூத் பிரஷ்ஷால் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
4 சைஸ்கள் : ★ அடல்ட் ★ ஜூனியர் ★ சைல்ட் ★ பேபி
★ ஹார்ட் ★ மீடியம் ★ ஸாப்ட்
டீலக்ஸ் சுகாதார பிளாஸ்டிக் குழாயில் கிடைக்கும். ரெகுலரும் கிடைக்கிறது.
அழகான பிளாஸ்டிக் பிடிகளில் உறுதியாகப் பொருத்தப்பட்ட ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட நைலான் பிரிஸல்கள்
SHORT HEAD
NYLON STERILISED
COLGATE
Nylon TOOTH BRUSH
இந்தியாவில் சிறந்த டூத்பேஸ்ட் செய்பவர்களால் தயாரிக்கப்படுகிறது!

போடு அப்படியே தூக்கி ஏதாவது ஒரு நீரில் வைக்குவிட ஏற்பாடுசெய்யுங்கள்'' என்றாள் குழல்மொழி. அன்றிரவே அதைச் செய்து விடுவதாக மகாமண்டலேசுவரின் புதல்வியிடம் ஒப்புக் கொண்டான் அவன். ஆனால் அன்றிரவு சேந்தனின் சூழ்ச்சி பலிக்கவில்லை. கூத்தன் தப்பித்துக் கொண்டான். கீழ்த்தளத்திலிருந்த குழல்மொழியின் அலங்கார அறைக்குள் படுத்துக்கொண்டு கதவை மூட உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டு விட்டான் கூத்தன். குழல்மொழி முன்னதாகவே படுத்துத் தூங்கிவிட்டதால் அவளுக்கு இதொன்றும் தெரியாது. அறைக் கதவை இடித்துத் தட்டிக் கூத்தனை வெளியேற்ற முயன்றால் குழல்மொழியின் தூக்கம் கெட்டுவிடுமோ என்பதற்காகச் சேந்தன் அன்றிரவு அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டான். மறுநாள் காலை கப்பல் இலங்கைக் கரையை நெருங்கிக் கொண்டிருந்தபோது சேந்தன், குழல்மொழி, கூத்தன், யாருமே எதிர்பார்த்திருக்க முடியாத ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டது. கப்பல் மீகாமன் 'ஐயோ முறையோ'வென்று அலறிக் கொண்டு கீழ்த்தளத்துக்கு ஓடிவந்தான். சேந்தன், குழல்மொழி, கூத்தன், மூன்று பேரும் அங்கே இருந்தனர்.

"ஐயா! கப்பலைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அந்த அநியாயத்தை வந்து பாருங்கள்" என்று மீகாமன் முறையிட்டான். பேச்சு சுவாரசியத்தில் ஈடுபட்டுப் போயிருந்த அந்த மூவரும் அப்போதுதான் கப்பல் நின்று போயிருப்பதைக் கவனித்து உணர்ந்தார்கள். உடனே மாலுமியைப் பின்தொடர்ந்து குழல்மொழி உட்பட மூன்று பேரும் மேல் தளத்துக்கு ஏறி ஓடினார்கள்.

அந்தக் கப்பலைச் சுற்றிலும் இருபது படகுகள் வழியை மறைப்பது போல வளைத்துக் கொண்டு நின்றன. அந்தப் படகுகளில் ஆயுதபாணிகளாக முரட்டு வீரர்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்களுடைய தோற்றத்திலிருந்தும், அந்தப் படகுகளில் கட்டியிருந்த சிறு சிறு கொடிகளிலிருந்தும், அந்த வீரர்கள் ஈழநாட்டுக் கடற்படையைச் சேர்ந்தவர்களென்று நாராயணன் சேந்தன் நிதானித்துப் புரிந்து கொண்டான்.

"அம்மணி! ஏதோ சில காரணங்களுக்காகக் கப்பல்களைச் சோதனை செய்கிறார்கள் போலிருக்கிறது. இவர்களெல்லாம் ஈழநாட்டுக் கடற்படை வீரர்கள்" என்று பீதி கலந்த குரலில் குழல்மொழியிடம் சொன்னான் சேந்தன். குழல்மொழி கூத்தனை விசாரிக்கத் தொடங்கி விட்டாள். "கூத்தா! 'ஈழநாட்டு நடைமுறைகளும், கடற்பயணமும் எனக்கு நன்றாகத் தெரியுமென்று' அப்போது பெருமை யடித்துக் கொண்டாயே. இதெல்லாம் என்ன? நம்முடைய கப்பலை எதற்காக இந்த வீரர்கள் இப்படித் தடுத்து நிறுத்தி யிருக்கிறார்கள்? ஏன் ஊமையாகிநிற்கிறாய்? பதில்சொல்லேன்."

கூத்தன் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் 'திருதிரு'வென்று விழித்தான். அவனுக்குத் தெரிந்தால்தானே சொல்வதற்கு! ஆரம்பத்தில் கப்பலில் இடம் பிடிப்பதற்காக அளந்த பொய் இவ்வளவு தூரத்துக்குத் தன்னைப் பாதிக்குமென்று தெரிந்திருந்தால் அவன் அந்தப் பொய்யைச் சொல்லியிருக்கவே மாட்டான்.

"கப்பல் புறப்படும்போதே அபசகுனம் மாதிரி இந்தப் பயல் வந்து வம்பு பண்ணினான். அப்போதே இதுமாதிரி ஏதாவது தொல்லை வருமென்று நான் நினைத்தேன்" என்று சேந்தன் படபடப்போடு கூத்தனை நோக்கிச் சீறினான். குழல்மொழி சினம் பொங்கப் பார்த்தாள். எல்லோருடைய கோபமும் கூத்தனின் மேல் திரும்பி அடிகள், உதைகளாக உருவெடுப்பதற்கு இருந்த சமயத்தில் அப்படி நடந்து விடாமல் ஈழநாட்டு



வீரர்களெல்லாம் கப்பலுக்குள் ஏறிவந்து கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்பிக் கொண்டார்கள்.

"இந்தக் கப்பல் எங்கே இருந்து புறப்பட்டு வருகிறது?" சேந்தனைப் பார்த்து அதிகார மிடுக்குடன் இப்படிக் கேட்டார்கள், கப்பலுக்குள் ஏறி வந்த கடற்படை வீரர்கள்!

கேள்விக்குப் பதில் சொல்லலாமா, வேண்டாமா என்கிற பாவனையில் சேந்தன் குழல்மொழியின் முகத்தைப் பார்த்தான். குழல்மொழி கூத்தனின் முகத்தைப் பார்த்தாள். கூத்தன் கடலைப் பார்த்தான். இந்த மௌனம் கேள்வி கேட்டவர்களுக்கு எரிச்சலை மூட்டியது.

"இந்தா ஐயா! முன்குடுமிக்காரரே! உம்மைத்தான் கேட்கிறோம். பதில் சொல்லும்" என்று கடுமையான குரலில் மீண்டும் கேட்டார்கள் அவர்கள். சேந்தன் பதில் சொன்னான்:—"கப்பல் விழிஞத்திலிருந்து வருகிறது!"

"என்ன காரியமாக வருகிறதோ?"

"சொந்தக் காரியமாக."

"எங்களிடம் எதையும் மறைக்காமல் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் வருத்தப்பட நேரிடும்."

"மறைப்பதற்கு எங்களிடம் ஒன்றுமில்லை."

"அப்படியானால் நீங்கள் எல்லோரும் யார்? என்ன காரியமாக ஈழநாட்டுக்குப் புறப்பட்டீர்கள் என்பதையெல்லாம் உடனே கூறுங்கள்."

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மறுபடியும் குழல்மொழியின் முகத்தைப் பார்த்தான் சேந்தன். குழல்மொழி அந்த வீரர்களை நோக்கித் துணிவோடு கேட்டாள்: "நீங்கள் எங்களுடைய கப்பலைத் தடுத்து நிறுத்திக் கொண்டு எங்களை இவ்வாறு மிரட்டுவது அநாகரிகமாக அல்லவா இருக்கிறது? நாங்கள் யாராயிருந்தால் என்ன? நாங்கள் என்ன காரியமாக ஈழ நாட்டுக்கு வந்திருக்கிறோம் என்பதை உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லையே!"

அவள் சினத்தோடு படபடப்பாக எதிர்வாதம் புரிந்ததைக் கேட்டதும், வீரர்கள் இன்னும் ஆத்திரம் அடைந்தனர்.

"எங்கள் மேல் ஆத்திரப்பட்டுப் பயனில்லை, அம்மா! ஈழ மண்டலத்து மகாசேனாதிபதியின் உத்தரவுப்படி நாங்கள் இந்தக் கப்பலை இப்போது கைப்பற்றுகிறோம். எங்கள் கண்காணிப்பில் இப்படியே இந்தக் கப்பலைச் செலுத்திக் கொண்டு போய்த் தமனன் தோட்டத் துறையில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி விடுவோம். எங்கள் மகாசேனாதிபதி வந்து பரிசோதித்து விசாரணை செய்கிற வரை யாரும் இந்தக் கப்பலிலிருந்து கீழே இறங்க விடமாட்டோம்."

"கப்பலிலேயே சிறை வைத்துப் பாதுகாப்பதற்கு நாங்கள் கொள்ளையடித்து விட்டோ, கொலைக் குற்றம் செய்து விட்டோ இங்கு ஓடிவரவில்லையே?" என்று அமைதியாக நின்று கொண்டிருந்த கூத்தனும் கொதிப்படைந்து கேட்டான். அவர்கள் அந்தக் கேள்வியைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. படகுகளையும் கப்பலையும் தங்கள் பொறுப்பில் செலுத்திக்கொண்டு போய்த் தமனன் தோட்டத்துத் துறையில் நிறுத்தினார்கள். கப்பலைச் சுற்றிலும் யாரும் வெளியேற முடியாமல் வீரர்கள் காவல் நின்று கொண்டனர். கப்பல் பிடித்துக் கொண்டு வரப்பட்ட செய்தி உடனே ஈழநாட்டுப் படைத் தலைவருக்கு அனுப்பப்பட்டது. குழல்மொழியும் சேந்தனும் மேல்தளத்தில் நின்று கூத்தனைத் திட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஐந்தாம் அத்தியாயம்

கூத்தன் தப்பினான்!

யாரிடமோ காண்பிக்க வேண்டிய கோபதாபங்களையெல்லாம் தங்களுடன் அகப்பட்டுக் கொண்ட கூத்தனிடம் காண்பிக்க ஆரம்பித்து விட்டார்கள் சேந்தனும், குழல்மொழியும். கூத்தன் இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவித்தான். இன்னும் சில நாழிகைகளில் அவர்கள் பேசிப் பேசித் தன்னை உயிரோடு சித்திரவதை செய்துவிடுவார்களோ என்று நினைத்து அஞ்சுகிற அளவுக்கு அவனைப் பாடாய்ப் படுத்திவிட்டார்கள். தன் 'குட்டு' வெளிப்பட்டு அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டால் என்ன ஆகுமோ என்ற பயமும் கூத்தனுக்கு ஏற்பட்டுவிட்டது. ஈழ மண்டலப் படைத் தலைவர் வந்து விசாரணை செய்யும் முன்பே குழல்மொழியும், சேந்தனும், தன்னை இன்னாரென்று புரிந்து கொள்ள நேர்ந்தால் தனக்கு அது பெருத்த அவமானமாகிவிடும் என்பதைக் 'கூத்தன்' உணர்ந்து கொண்டான். அப்படிக்கில்லாமல் படைத்தலைவர் வந்து விசாரணை செய்தபின் அகப்பட்டுக் கொண்டாலும் அவமானம்தான். மேலும் முன்கூட்டியே அந்தக் கப்பலிலிருந்து தப்பிக் கரையேறினால் அதனால் 'கூத்தனுக்கு' எவ்வளவோ நன்மை உண்டு.

'கூத்தன்' நேரம் எப்போது வாய்க்கப் போகிறதென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் சிந்தனை கூர்மையாகித் தப்பும் வழிகளை ஒவ்வொன்றாகச் சிந்தித்தது. சாத்திய அசாத்தியங்களை ஆராய்ந்தது. சற்றே அபாயமான துணிச்சலும் உண்டாகியிருந்தது. தப்புவதற்காக எப்படிப்பட்ட காரியத்தை வேண்டுமானாலும் செய்வதற்கு உறுதி பூண்டிருந்தான் அவன். நண்பகலில் உச்சி வெய்யில் கொடுமையாக இருந்தது. கரையிலிருந்த காட்டின் காற்றும், நீரின் குளிர்ச்சியும் அந்த வெம்மையைச் சிறிது தணிக்க முயன்றன. அப்போது கூத்தன் தப்புவதற்கு ஒரு சரியான சந்தர்ப்பம் கிடைத்தது. எல்லோரும் உணவு உட்கொண்டு முடிந்து சிறிது நேரம்தான் ஆகியிருந்தது. உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு அல்லவா? சேந்தன் மேல் தளத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்திலேயே ஒரு பாய்மரக் கம்பத்தில் சாய்ந்து கொண்டு காலை நீட்டிக் கண்ணயர்ந்திருந்தான். குழல்மொழி கீழ்த்தளத்திலிருந்த தனது அறைக்குள் இருந்தாள். மற்றக் கப்பல் ஊழியர்கள் எல்லோரும் சேந்தனைப் போலவே மேல் தளத்தில் அயர்ந்து போய்க் கிடந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத் தூங்காமல் உட்கார்ந்திருந்த ஆள் கூத்தன் ஒருவன்தான்.

ஒரு திடமான முடிவுடன் அவன் எழுந்தான். ஓசைப்படாமல் அடிமேல் அடி வைத்து மெல்ல நடந்து கீழ்த்தளத்துக்கு இறங்கிப் போனான். குழல்மொழியின்

அறை திறந்துதான் இருந்தது. கூத்தனுக்கு உடம்பெங்கும் வியர்த்தது. ஒரு கையால் வாளின் நுனியைப் பற்றிக் கொண்டே ஓரமாக ஒதுங்கி நின்று மெதுவாகத் தலையை நீட்டி அறைக்குள் எட்டிப் பார்த்தான். குழல்மொழி படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். கூத்தன் விறுட்டென்று அந்த அறைக்குள் நுழைந்து கதவை உட்புறத்தில் தாழிட்டுக் கொண்டான். அந்த அறையின் ஒரு மூலையில் இருந்த பெரிய தந்தப் பெட்டியைத் திறந்தான். பெட்டிக்குள் மகா மண்டலேசுவரரின் அருமைக் குமாரிக்குச் சொந்தமான பட்டுப் புடவைகளும், மற்ற அலங்காரப் பொருள்களும் அடுக்கடுக்காக இருந்தன. அவற்றில் ஒரு புடவையும், பட்டுக் கச்சும் எடுத்துக் கொண்டு குழல்மொழியின் தூக்கம் கலைந்து அவள் எழுந்து விடாமல் மெதுவாக நடந்து அதே அறையின் ஒதுக்குப்புறமான இடம் ஒன்றில் போய் மறைந்தான் கூத்தன்.

அவன் மறைந்த இடம் பெண்கள் கப்பவில் தங்களை அலங்கரித்துக் கொள்வதற்காக மறைவிடம் போல் பட்டுத் திரைகளால் தடுக்கப்பட்டிருந்த ஒதுக்கிடமாகும். அவன் அந்தத் திரைமறைவில் போன சிறிது நேரத்துக்கெல்லாம் தற்செயலாக விழித்துக் கொண்ட குழல்மொழி படுக்கையில் எழுந்திருந்து உட்கார்ந்து கொண்டாள். தான் காற்றுக்காகத் திறந்து வைத்துவிட்டுப் படுத்துக் கொண்ட அறைக் கதவை எப்போது யார் உட்புறம் வந்து தாழிட்டிருக்க முடியுமென்ற சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டது. படுக்கையில் உட்கார்ந்தபடியே அறைக்குள் நான்கு பக்கமும் மேலோட்டமாகப் பார்த்து வேறு யாரும் தன் அறைக்குள் இல்லையென்று தீர்மானித்தாள் குழல்மொழி. ஆனால் அதே சமயம் தன்னுடைய 'கலிங்கங்'களும் (ஆடைகள்) அலங்காரப் பொருள்களும் அடங்கிய தந்தப் பெட்டி திறந்து கிடந்ததைப் பார்த்தவுடன் அவளுடைய சந்தேகமும், பயமும் மேலும் வளர்ந்தன. அவள் முதுகுக்கு நேரே பின்புறம்தான் அந்த மறைவிடம் இருந்தது. எழுந்திருந்து வாசல் கதவைத் திறந்து சேந்தனையாவது கூத்தனையாவது கூப்பிட்டு அறையை நன்றாகச் சுற்றிப் பார்க்கச் சொல்லலாமென்று நினைத்தாள் குழல்மொழி.

எழுந்திருப்பதற்காகப் படுக்கையிலிருந்து வலது காலை எடுத்து வைத்தாள் அவள். திடீரென்று பின்பக்கமிருந்து இரு மென்மையான கைகள் முரட்டுத்தனமாக அவள் வாயைப் பொத்தின. பயந்து வீரிட்டு 'ஓ'வென்று கூக்குரலிட நினைத்தாள் குழல்மொழி. முடியவில்லை. அவளது மென்மையான பொன்னிற உடல் பயத்தால் நடுங்கியது. கண் விழிகள் பிதுங்கின. தலையைச் சிரமப்பட்டுத் திருப்பிப் பின்புறம் பார்த்தாள். வனப்பே வடிவமாக ஒரு பெண் நின்றுகொண்டு அவளை அந்தப் பாடுபடுத்திக் கொண்டிருந்தாள். அந்தப் பெண் உடுத்தியிருந்த பட்டுப் புடவையையும், கச்சையையும் (மார்பணி) குழல்மொழி கவனித்தாள். "ஒரு பெண்ணுக்கா அவ்வளவு துணிவு? ஒரு பெண்ணின் கைகளுக்கா அந்த முரட்டுத்தனம்?" — பயத்துக்கும் நடுக்கத்துக்கும் நடுவே இப்படி ஒரு பெண்ணிடம் நடுங்கி நிற்கிறோமே என்ற ஆச்சரியமும் அவளை ஆட்கொண்டது.

அந்தப் பெண் ஒரு கையால் குழல்மொழியின் வாயைத் திறக்க முடியாதபடி அழுத்திப் பொத்திக் கொண்டே, இன்னொரு கையால் கூர்மையான வாளை அவள் முகத்துக்கு நேரே காட்டி, "இடையாற்று மங்கலத்து அழகியே! உன் பயம் அநாவசியமானது. கொஞ்சம் என் முகத்தையும், குரலையும் கவனித்துப் பார், நான் யாரென்பது தெரியும். உன் உயிருக்கோ, உடலுக்கோ என்னால் ஒரு துன்பமும் ஏற்படாது. ஆனால் நீமட்டும் கூச்சல்போட்டு என்னைக் காட்டிக்கொடுக்க முயன்றாயோ, நான் எப்படி நடந்து கொள்வேன் என்று உறுதி சொல்ல முடியாது" என்று கூறினாள். குழல்மொழி நன்றாகத் தலையைத் திருப்பிக் கொண்டு மருண்ட விழிகளால் அந்த முரட்டுப் பெண்ணின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவளுக்கு அந்த உண்மை புரிவதற்குச் சில விநாடிகள் தேவைப்பட்டன. "ஆகா! இந்தக் கீச்சக்

குரூரம் அரசகுமாரர் கூத்தனுடைய பகைவர் அல்லவா? கூத்தன் ஆணா? பெண்ணா? இப்போது நான் காண்பதுதான் அவனுடைய உண்மைக் கோலமா? அல்லது மாலை வரையில் கண்ட ஆண் கோலம் தான் உண்மையா?" என்று எண்ணி மனம் குழம்பினாள் குழல்மொழி. அவளுடைய கண்களும் தடுமாறின.

"இன்னும் நன்றாக உற்றுப் பார்த்தால் என்னை நீ தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம், அம்மா! எந்த வல்லாள தேவனின் தங்கையைப் பற்றி நேற்று நீங்கள் சேந்தனிடம் மிக அக்கறையோடு விசாரித்தீர்களோ, அந்தப் பெண் பகவதிதான் இப்போது உங்களைப் பயமுறுத்திக் கொண்டு நிற்கிறாள்" என்று சிரித்துக் கொண்டே அந்தப் பெண் தன்னைப் பற்றிக் கூறிய போது குழல்மொழியின் கண்கள் ஆச்சரியத்தால் அகன்றன. பகவதி மேலும் பேசினாள்: "இன்னும் கேள்! நீயும் சேந்தனும் சந்திப்பதற்கு முன்பே நான் குமார பாண்டியனைச் சந்தித்து விடுவேன். அப்படிச் சந்தித்தால் உங்கள் வரவைப் பற்றிச் சொல்கிறேன். என்னை இதே கப்பலில் பிரயாணம் செய்ய விட்டதற்காக நான் உனக்கு எவ்வளவோ நன்றி சொல்ல வேண்டியிருக்க இப்படிக் கத்தியைக் காட்டிப் பயமுறுத்துகிறேனே என்று கோபிக்காதே. இப்போது செய்திருப்பது போல் உன் வாயை அடக்காமல் விட்டிருந்தால் இந்தச் சமயத்தில் வியப்பு மயமான உன் உள்ளத்து உணர்ச்சிகள் என்னை நோக்கி எவ்வாறு வார்த்தைகளாக வெளிப்படுமோ? என்னென்ன கேள்விகள் என்னிடம் நீ கேட்பாயோ? எப்படி எப்படிச் சீறுவாயோ? அவற்றை அறிந்து கொள்ளும் ஆவல் எனக்கு இல்லை. நான் இப்போது இந்தக் கப்பலிலிருந்து அவசரமாகத் தப்பிச் செல்லப் போகிறேன். இதோ இந்தக் கீழ்த்தளத்திலிருந்து கயிற்றைக் கட்டிக்கொண்டு பின்புறமாகக் கடலில் இறங்கிச் சிறிது தூரம் நீந்திக் கரை சேர்ந்து விடுவேன். அதற்குள் கூச்சல் போட்டு நீ என்னைக் காட்டிக் கொடுத்து விடலாமென்று நினைக்காதே! கூச்சல் போடவோ, கதறவோ முடியாமல் உன்னை இந்த அறையில் கட்டிப் போட்டுவிட்டுத்தான் நான் புறப்படுவேன். 'ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் இவ்வளவு கொடுமையாக நடந்து கொள்ள முடியுமா?' என்று என்னைப் பற்றிக் கேவலமாக நினைக்காதே. சந்தர்ப்பம்தான் காரணம், அம்மா. வாயை அடைக்காமலும் கத்தியைக் காட்டாமலும் இருந்தால் நீயே எனக்குப் பயப்பட மாட்டாய். அதனால்தான் நான் இப்படி நடந்து கொள்ள வேண்டியதாயிற்று."

இவ்வாறு சொல்லிக் கொண்டு குழல்மொழியைப் படுக்கையில் தள்ளிக் கட்டிலோடு கட்டிலாகக் கயிற்றினால் கட்டி விட்டாள் பகவதி. குழல்மொழியின் மென்மையான கொடியுடல் வீரரத்தம் ஓடும் தளபதியின் தங்கையை எதிர்த்துத் திமிறிக் கொண்டு போராட முடியவில்லை. ஆகவே கட்டுண்டாள்.



"என்ன அந்த மனுஷர் எப்பொழுது பார்த்தாலும் ஒரே உஷ்ணமாக இருக்கிறார்! யார் அவர்?"

"அவர் ஒரு தர்மாஸ் பிளாஸ்க் வியாபாரி!"

அவள் கண் காணவே அறைக்கதவைத் திறந்துகொண்டு கப்பலின் பின்புறத்து வழியே கயிறு கட்டி இறங்கிக் கடலில் பாய்ந்து விட்டாள் பகவதி. கயிற்றைப் பிடித்துக்கொண்டு இறங்குமுன் கடைசியாக நிமிர்ந்து பார்த்து, "இடையாற்று மங்கலத்துப் பெண்ணே! நாராயணன் சேந்தன் வந்தால் 'கூத்தன் தன்னுடைய கூத்தை முடித்துக் கொண்டு போய் விட்டான்' என்று சொல்லி விடு!" என்று பகவதி கூறிச் சென்ற சொற்கள் குழல்மொழியின் உள்ளத்தைக் கொதிக்க வைத்தன. 'ஏமாற்றப்பட்டோம்' என்று நினைக்கும்போது குழல்மொழிக்கு வேதனையாக இருந்தது.

கட்டிலோடு கட்டியிருந்த கட்டுக்களை நெகிழ்க்க முயன்றாள்; முடியவில்லை. அரை நாழிகைக்குப் பின் சேந்தன் தூக்கம் கலைந்து எழுந்த சோர்வோடு கொட்டாவி விட்டுக் கொண்டே கீழ்த்தளத்துக்கு வந்தான். அங்கே குழல்மொழி இருந்த நிலையைப் பார்த்ததும் பெரிதாகக் கூக்குரலிட நா எழுந்தது அவனுக்கு. அதை வலுவில் அடக்கிக் கொண்டு கட்டுக்களை அவிழ்த்துத் தன் நினைவற்றுத் துவண்டு கிடந்த குழல்மொழிக்கு மூர்ச்சை தெளிவித்தான். நிதானமாக—ஆனால் கலவரமுற்ற மனத்தோடு, 'என்ன நடந்தது' என்று அவளிடம் கேட்டான். அவள் 'கோ'வென்று வாய் விட்டுக் கதறி அழுதுவிட்டாள். அவள் அழுகையைத் தணித்து ஆறுதல் கூறி மெல்ல நடந்ததை அறிந்தான் சேந்தன். "கூத்தன் தன்னுடைய கூத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டு விட்டான்" என்று அவள் அதைச் சொல்லி முடித்தபோது, "எனக்கு அப்போதே தெரியும்" என்று சர்வ சாதாரணமாகச் சொன்னான் சேந்தன். (தொடரும்)





தென்னங் கூந்தல் தீர்த்தமாடுகிறது!


இயற்கையின் எழில் அரங்கமாகத் திகழும் கேரளத்தின் அழகிற்கு கடற்கழிகள் அதிகமாக உதவுகின்றன. விடுமுறை நாட்களை உல்லாசமாகக் கழிக்க ஏற்ற இனிய சூழ்நிலைகளை இவை ஏற்படுத்தி இருக்கின்றன

கடற்கழிகள் வேறொரு முக்கியவிதத்திலும் பயன்படுகின்றன கயிற்றுத்தொழிலுக்குத் தகுந்த முறையில் தென்னஞ்சவுரியைச் சுத்தப்படுத்த அவை உதவுகின்றன. கயிற்றுத் தொழில் அபிவிருத்தி அடைந்து 5 லட்சம் குடும்பங்களுக்கு வேலை தரும் சாதனமாக மாற வகைசெய்வது இந்தக் கழிகளின் உப்புத் தண்ணீரின் அதிசய சக்திதான்

நன்குக விளைந்த தேங்காய்களின் கூந்தல்களிலிருந்து நயம் தென்னஞ்சவுரி தயாரிக்கப்படுகிறது. தென்னங்கூந்தல்களை தோணிகள் கடற்கழிகளிலுள்ள ஊற வைக்கும் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்கின்றன. அங்கே அவை ஆறு முதல் பத்துமாதகாலம் வரை ஊறுகின்றன. அவை அழுகி, மிருதுத்தன்மை பெறும்பொழுது எழுந்து பரவும் துர்நாற்றம் சூழ்நிலை முழுவதும் படர்கிறது. தென்னஞ்சவுரி தீர்த்தமாடி, அழுக்கு அகன்று, பரிசுத்த பரிணாமம் எய்தும் அடையாளம் அது.







இந்தியாவில் விளையும் 330 கோடித் தேங்காய்களில், 162 கோடி நெற்றுகளை, 130,000 டன்கள் கயிறும், கயிறில் தயாராகும் பொருள்களும் செய்யக் கயிற்றுத் தொழில் உபயோகப் படுத்துகிறது. இந்தத் தொழில் மூலம் நாட்டுக்கு 11 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. 500,000 குடும்பங்களுக்கு—பெரும்பாலும் பெண்களுக்கு—வேலை கிடைக்கிறது.

காயர் போர்டு இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருப்பது. திட்டமான தயாரிப்பு, பொருள்களின் தன்மை நிர்ணயம், ஒழுங்கான முறையில் விற்க ஏற்பாடு செய்வது ஆகிய சேவைகளே இந்த போர்டின் நோக்கம்.

விலை மலிவான கயிற்றுப்பாய்கள், மெத்தைகள், தளவிரிப்புகள் ஆகியன உங்கள் அலுவலகங்களுக்கும் வீடுகளுக்கும் அழகு சேர்க்கின்றன.

காயர் போர்டு

(கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா) எர்ணாகுளம்.

ஷோ-ரூம்கள் & விற்பனை நிலையங்கள்:

16 A, அசப் அலி ரோடு, புது டில்லி—போன்: 26988

1/155, மவுண்ட் ரோடு, மதராஸ்-2—போன்: 85787

1 A, மஹாத்மா காந்தி ரோடு, பெங்களூர்

கஸ்தூர் நிவாஸ், பிரெஞ்சு ரோடு, பம்பாய்—7—போன்: 74058

5, ஸ்டேடியம் ஹவுஸ், சர்ச்கேட், பம்பாய்.

BP.CB.3

தம்பி ராமய்யா

கு. அழகிரிசாமி

மத்தியானம். பன்னிரண்டு மணி. வெய்யில் கடுமையாக அடித்துக் கொண்டிருந்தது. அப்போதுதான் சுந்தரம் ரயிலடிக்குப் புறப்பட்டான். அந்த கிராமத்திலிருந்து மதுரைக்குச் செல்ல அதுதான் கடைசி வண்டி. அதற்குப் பிறகு அவ்வூர் ஸ்டேஷனில் நிற்காத எக்ஸ்பிரஸ் வண்டிகளும், இரவில் அகாலத்தில் வரும் ஒரு பாஸஞ்சர் வண்டியும் இருந்தன. காலை எட்டு மணிக்கும் ஒரு வண்டி இருந்தது. அவன் வேண்டுமென்றே தான் அந்த வண்டிக்குப் போகாமல் இந்த மத்தியான வண்டிக்குப் புறப்பட்டான்.

அவனை வழியனுப்புவதற்காக அவனுடைய தகப்பனார் பூர்ணலிங்கம் பிள்ளை, தாயார் வடிவம்மாள், பன்னிரண்டு வயதுத் தங்கை கோமதி, அவனுக்கு ஒரு வயது இளையவளான துளசி, ஏழு வயதுத் தம்பி ராமையா ஆகிய இத்தனை பேரும் வழக்கம் போல் சுந்தரத்துடன் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்கள். வெய்யிலைச் சாக்கு வைத்து அவர்களைத் தன்னோடு வரவிடாமல் தடுத்துவிட வேண்டும் என்று திட்டம் போட்டிருந்த சுந்தரம், எல்லோரையும் பார்த்துக் கொண்டு, "எதற்காக நீங்கள் இந்த உச்சி வெய்யிலில் ஸ்டேஷனுக்கு வருகிறீர்கள்? அப்புறம் இந்த வெய்யிலிலேயே திரும்பி வரவேண்டும். பேசாமல் வீட்டில் இருங்கள். நான் போய் வருகிறேன்" என்று சொன்னான்.

அவன் இப்படிச் சொல்வான் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. வடிவம்மாள் ஒரேயடியாகத் திகைத்துப் போனாள். "ஏன் இப்படிச் சொல்றே சுந்தரம்?" என்று திகில் அடைந்து போய்க் கேட்டாள். கோமதியும் துளசியும் ஓடிப் போய் ஆளுக்கு ஒரு பக்கமாக நின்று சுந்தரத்தின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். அப்போது மௌனமாகவும், திகைக்காமலும் இருந்தவர்கள் சுந்தரத்தின் தகப்பனாரும், தம்பி ராமையாவும்தான். தன் தம்பியின் முகத்தைச் சுந்தரம் இமைக்காமல் கூர்ந்து பார்த்தான்.




"ராமையா, நான் போயிட்டு வரட்டுமா?" என்று சுந்தரம் கேட்டான்.

"சரி" என்று சொல்லிவிட்டுக் கவலையில்லாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான் ராமையா

வடிவம்மாளுக்கு இது விபரீதமாகவே இருந்தது. சுந்தரம் லீவில் வரும்போதெல்லாம் அவனோடு ரயிலில் போக வேண்டுமென்று ஒரே பிடிவாதமாக அழுது போராடும் ராமையா, இன்று உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமல் அண்ணனுக்கு விடை கொடுப்பதைக் கண்டு அவளுக்கு என்ன நினைப்பது, எதை யூகிப்பது என்றே புரியவில்லை. "அப்படிச் சொல்லக் கூடாது, ராமையா. நாம்

எல்லோரும் ஸ்டேஷனுக்குப் போய் அண்ணனை வழியனுப்ப வேண்டாமா? எழுந்திரு, போகலாம் "என்றாள் வடிவம்மாள்.



ராமையா அப்பொழுதும் அசையவில்லை. அவனுக்கு அண்ணனை வழியனுப்புவதில் இன்று கொஞ்சங்கூட அக்கறையில்லை. அண்ணனின் முகத்தில் விழிக்கக்கூட இஷ்டமில்லை என்பது அவன் முகபாவத்திலிருந்து தெளிவாகத் தெரிந்தது.

பெண்கள் இருவரும் அவன் பக்கம் வந்து அவனுடைய கைகளைப் பிடித்து இழுத்துக் கிளப்பப் பார்த்தார்கள். அவன் அவர்களுடைய கையை உதறி விட்டு வீட்டுக்குள் ஓடிவிட்டான். பெண்களும் பின்தொடர்ந்து ஓடினார்கள். அவனை வெளியே கொண்டு வருவதற்காகக் கோமதியும் துளசியும் முழு பலத்தையும் பிரயோகித்துப் போராடுவதும், ராமையா அவர்களை எதிர்த்துப் போராடுவதும் கூச்சலும் சந்தடியுமாக வெளியே கேட்டுக் கொண்டிருந்தன.

"சுந்தரம்! அவனை என்ன சொன்னாய்? அடித்தாயா? இப்படி அடம் பண்ணுகிறானே, எதற்கு?" என்று கேட்டாள் வடிவம்மாள்.

சுந்தரம் ஒரு பதிலும் சொல்லவில்லை. "அவனை நான் அடிப்பானேன்? நான் அடிக்காமலே அவன் வாங்கி யிருக்கும் 'அடி' ஏழு ஜன்மத்துக்குப் போதுமே, அம்மா" என்று தன் மனசுக்குள்ளேயே தாயாருக்குப் பதில் சொன்னான்.

வடிவம்மாளும் உள்ளே போனாள்.

சுந்தரமும் அவன் தகப்பனாரும் ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டார்கள். இருவர் முகத்திலும் உயிரோட்டம் இல்லை. சுந்தரம் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

இப்போது தாயாரும் வந்து கட்டாயப்படுத்தவே, ராமையா அழத் தொடங்கி விட்டான்.

'எதற்காக அவனை இப்படிக் கட்டாயப் படுத்துகிறார்கள்? அவனுக்கு வர இஷ்டமில்லை. வந்தாலும் எனக்கு இஷ்டமில்லை. இந்த அம்மா சொன்னால் கேட்கிறாளா?...'—இப்படிச் சுந்தரம் மனசுக்குள் நினைத்து வேதனைப்படும் போது, அவன் தகப்பனார் 'விறுவிறு' என்று வீட்டுக்குள்ளே போனார். அவருக்குப் பொறுமையே இல்லை. பயங்கரமாக ஒரு அதட்டுப் போட்டார் உடனே சிறுவன் 'கப்சிப்' என்று ஒடுங்கி விட்டான். மறுநிமிஷம் அவன் கையைப் பிடித்துப் 'பரபர' வென்று வெளியே இழுத்து வந்தார். 'புறப்படுங்கள்' என்று கோபத்தோடு ஒரு கட்டளை பிறப்பித்தார். எல்லோரும் மௌனமாக வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள்.

'எதற்காகத்தான் என்னை இப்படித் திரும்பத் திரும்ப வழியனுப்பிக் கொண்டிருக்கிறார்களோ? உண்மையில் கடைசித் தடவையாக என்னை வழியனுப்பிப் பத்தொன்பது வருஷங்கள் ஆகிவிட்டன. அதற்குப் பிறகும் அதே காரியத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தால், அது கடமையாகவோ, காரியமாகவோ இருக்க முடியுமா? நாடகமாகத்தான் இருக்கிறது. சிரிப்புக்குப் பதிலாகத் துயரத்தை உண்டுபண்ணும் வேடிக்கை நாடகம் இது. ராமையா, உனக்குப் புரிந்துவிட்ட, இந்த மர்மம் மற்றவர்களுக்கு ஏன் விளங்கவில்லை?...'

சுந்தரம் இப்படி என்னென்னவோ நினைத்துக் கொண்டு, ரயில்வே ஸ்டேஷனை நோக்கிக் காட்டு வழியாக ஒற்றையடிப் பாதையில் நடந்து சென்றான்.

அவனைப் பின்தொடர்ந்து தாயாரும் தங்கைகளும், தம்பியும் வந்தார்கள். எல்லோருக்கும் பின்னால் வெகு தூரத்தில் நடந்து கொண்டிருந்தார் தந்தை பூர்ணலிங்கம் பிள்ளை.

பூமியில் அனல் பறந்தது. கோடை காலம். காட்டில் பயிர் பச்சைகளும் இல்லை. எட்டுத் திசைகளிலும் மனிதப் பூண்டே தென்படவில்லை. ஒருவர் காலிலும் செருப்புக் கிடையாது. அது சுந்தரத்துக்குத்தான் கஷ்டமாக இருந்ததே ஒழிய, மற்றவர்களை எதுவும் செய்யவில்லை. சுந்தரத்துக்குக் காலும் சுட்டது; மனசும் சுட்டது 'இந்தக் கோடை வெய்யிலில் இவர்களை இழுத்தடிக்கிறேனே! நான் காலையிலேயே புறப்பட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் சொல்லிக் கொள்ளாமலாவது வந்திருக்க வேண்டும். பெரிய தப்புப் பண்ணிவிட்டேன்' என்று நினைத்துத் தன்னையே கடிந்து கொண்டான்.

ஏதோ நிலவில் நடந்து வருபவர்களைப் போல ஒரே உற்சாகத்துடன் வந்து கொண்டிருந்த கோமதியும், துளசியும் அடுத்த தடவை தங்கள் அண்ணன் மதுரையிலிருந்து வரும்போது என்னென்ன வாங்கிக் கொண்டு வருவான் என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்து விட்டார்கள். ராமையாவின் முகத்தில் ஒரு தடவையாவது சந்தோஷக் களையை உண்டு பண்ணி விடவேண்டும் என்பதற்காக வடிவம்மாள் அவனுக்கு என்னென்னவோ ஆசை வார்த்தைகள் சொல்லிப் பார்த்தாள். ஒன்றுமே அவனிடம் பலிக்கவில்லை.

ஒரு கட்டத்தில் வடிவம்மாள் அவனைத் தன் பக்கம் நிர்ப்பந்தமாக இழுத்து வைத்துக் கொண்டு, "நாமும் அண்ணனோடு ரயிலில் போவோமா ராமையா? ரயிலில் ஏறி மதுரைக்குப் போவோம். நீ அங்கேயே படிக்கலாம்......." என்று சொல்லும்போது, "நானும் வருவேன்" என்று இரண்டு பெண்களும் ஏககாலத்தில் சொன்னார்கள்.

'எல்லோரும்தான் போக வேண்டும். போய், மதுரையில் ஒரு வீடு பிடித்துக் கொண்டு அங்கேயே இருப்போம். அம்மா சமைத்துப் போடுவேன். ராமையாவுக்கு அண்ணன் நிறையச் சட்டைகள் வாங்கிக் கொடுப்பான். ராமையா பள்ளிக்கூடம் போகும்போதெல்லாம் பலகாரம் வாங்கிச் சாப்பிடக் காசு கொடுப்பான். நான் தினமும் மீனாட்சியம்மன் கோயிலுக்குப் போவேன். ராமையாவையும்கூட அழைத்துக் கொண்டு போவேன். அப்போது பெரிய பெரிய கடைகளைப் பார்க்கலாம். சித்

திரை மாதம் திருவிழா வரும். அப்போது ராமையாவுக்கு விளையாட்டுச் சாமான், கோமதிக்கும் நளினிக்கும் பொம்மை, அம்மாவுக்கு வெண்கல பாத்திரங்கள்.....எல்லாம் வாங்குவோம். ...'

வடிவம்மாள் இப்படியெல்லாம் பேசிக்கொண்டு வருவது சுந்தரத்துக்குப் பிடிக்கவில்லை. 'அம்மா, ஒரு டிக்கெட்டுக்குமேல் அரை டிக்கெட் வாங்கக் கூட என்னிடம் பணமில்லை. உங்களை நான் மதுரைக்கு அழைத்துப் போவது எங்கே? உங்களுடைய ஆசைக் கனவுகளை யெல்லாம் நிறைவேற்றுவது எங்கே? இப்படி ஏன் குழந்தைகளுக்கு ஆசை காட்டுகிறாய்?' என்று தனக்குள்ளே சொல்லி நெடுமூச்சு விட்டான் சுந்தரம்.

அந்தச் சமயத்தில் வடிவம்மாள் அவனுக்குத் தாங்கமுடியாத அதிர்ச்சியைக் கொடுப்பதுபோல், ''அடுத்த வருஷம் அண்ணனுக்குக் கல்யாணம் செய்வோம்.....'' என்றாள்.

அண்ணனுக்குக் கல்யாணம் என்றதும் பெண்கள் சந்தோஷ மிகுதியால் துள்ளிக் குதித்தார்கள். மூத்த பெண் கைகளைப் படபடவென்று தட்டினாள். அம்மாவின் இந்த உத்சாகம் நிறைந்த பேச்சை சுந்தரத்தினால் தாங்கவே முடியவில்லை.

அவள் பேசுவது காதில் விழாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அதிவேகமாக முன் நோக்கி நடந்தான். இத்தனைக்கும் நடுவில், ஒரு வார்த்தையும் பேசாமல் நடந்து வந்து கொண்டிருந்தான் அந்த ஏழு வயதுச் சிறுவன் ராமையா - சுந்தரத்தின் தம்பி.

பத்தொன்பது வருஷங்களுக்கு முன் சுந்தரத்துக்கும் ஏழு வயதுதான். வீட்டில் செய்யும் சுட்டித்தனங்களையும் அட்டகாசங்களையும் பொறுக்க முடியாமல் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும் கிராமத்துப் பெற்றோர்களைப்போல் சுந்தரத்தை அவன் தகப்பனார் பள்ளிக்கு அனுப்பவில்லை ஒரு லட்சியத்தோடுதான் அனுப்பினார். அந்த விஷயத்தில் அவரிடத்தில் தெள்ளத் தெளிவாக வகுத்து வரையறுத்த ஒரு திட்டமும் இருந்தது.

அவ்வூரின் தெற்குத் தெருவாசியான கிருஷ்ணப்ப நாயுடு தம் மகனைப் பள்ளிக்கு அனுப்பிப் பலனும் கண்டது, பூர்ணலிங்கம் பிள்ளைக்கு ஒரு முன் மாதிரியாக இருந்தது. நாயுடுவின் புதல்வன் அந்தக் காலத்தில் எட்டாவது வகுப்பு வரை படித்து முடித்து, ஆசிரியர் பயிற்சிப் பரீட்சையிலும் தேறி, ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்க ஆரம்பித்தான். பதினெட்டு ரூபாய்

சம்பளத்தில் ஏழு ரூபாயை யாதொரு சிரமமும் இல்லாமல் மாதாமாதம் மிச்சப்படுத்தித் தகப்பனாருக்கு அனுப்பிக் கொண்டிருந்தான். அந்தப் பணம் கிருஷ்ணப்ப நாயுடுவுக்குப் பெரிய உபரி வருமானமாக இருந்தது. ஒவ்வொரு மாதமும் மணியார்டரில் வரும் ஏழு ரூபாயைச் சேர்த்து வைத்து மாடு கன்றுகளாகவும், வேறு சில வளரும் சொத்துக்களாகவும் மாற்றிக் கொண்டிருந்தார். இதையெல்லாம் பார்த்த பூர்ணலிங்கம் பிள்ளை, சுந்தரத்துக்கு ஏழு வயதானதும் அவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார். என்ன கஷ்டப்பட்டாலும் சுந்தரத்தைப் பத்தாவது வகுப்பு வரை படிக்க வைத்து விடுவது என்று அன்றே முடிவு செய்து விட்டார்.

பத்தொன்பது வருஷங்களுக்கு முன் தன்னைப் பள்ளிக்கு அனுப்பிய தினத்தில் தான் வாழ்நாளுக்கெல்லாம் சேர்த்து ஒரே மொத்தமாகத் தன் வீடும், தான் பிறந்த ஊரும் தன்னை வழியனுப்பி விட்டதாகச் சுந்தரம் இன்று காலையிலிருந்து நினைத்துக் கொண்டிருக்கிறான். அதன் பிறகு இன்று வரை நடந்த வழியனுப்பு வைபவங்களெல்லாம் பொருளற்ற சம்பிரதாயங்களாகத்தான் அவனுக்குத் தோன்றின.

நான்காவது வகுப்புப் பாஸ் பண்ணி, சாத்தூருக்குப் படிக்கப் போனதிலிருந்து வருஷத்துக்கு மூன்று நான்கு தடவைகள் லீவில் ஊருக்கு வருவான்; அப்புறம் திரும்பிச் செல்வான்; அவனை வழியனுப்புவார்கள். ஒவ்வொரு தடவையிலும் பிரிவாற்றாமையினால் வருந்துவதுண்டு; அதே சமயத்தில் ஆசைக் கனவுகளில் இன்பம் துய்ப்பதும் உண்டு.

ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என்ற நான்கு வகுப்புக்களையும் நான்கு வருஷங்களில் கடந்து விட்டான் சுந்தரம். பதினாறுவது வயதில் ஹைஸ்கூல் படியேறினான். படிப்பில் கிருஷ்ணப்ப நாயுடுவின் குமாரனையும் தாண்டி மேலே போயாகி விட்டது. பூர்ணலிங்கம் பிள்ளைக்கு அப்போது ஏற்பட்ட மனப்பூரிப்பு அவருடைய வாய்ச் சொல்லில் வெளிப்படா விட்டாலும், செயலில் பிரதிபலித்தது. அகவிலைகள் ஏறி ஊரே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில் மகனுடைய படிப்புக்காகத் தமது நில உடைமையில் பாதியை விற்று விட்டார். விற்கும்போது, அதைப்போல் நான்கு பங்கு நிலத்தை வாங்குவது போன்ற உணர்ச்சிதான் அவருக்கு இருந்தது.

ஹைஸ்கூல் படிப்பை முடித்துச் சுந்தரம் ஊருக்கு வந்த மறு வருஷத்தில்தான் ராமையா பிறந்தான். ஆண் பிள்ளை; சுந்தரத்துக்கு ஒரே தம்பி; பெற்றோருக்குக் கடைக்குட்டிப் பிள்ளை. வீட்டில் எல்லோருக்கும் அவன்தான் உயிர். 'என் சக்திக்கு இயன்ற வரையில் சுந்தரத்தைப் படிக்க வைத்து விட்டேன்; இனி ராமய்யாவை அதைவிடப் பெரிய படிப்புக்கு அனுப்ப வேண்டியது சுந்தரத்தின் பொறுப்பு' என்று நினைத்தார் பூர்ணலிங்கம் பிள்ளை. அதை அவன் தவறாமல் நிறைவேற்றுவான் என்றும் நம்பினார்.

ஒரு வருஷம் ஆயிற்று. சுந்தரம் வீட்டோடுதான் இருந்தான். இரண்டு வருஷங்களும் ஆகிவிட்டன. அவன் எத்தனையோ இடங்களுக்கு வேலைக்கு எழுதிப் போட்டான். அவ்வளவு சீக்கிரத்தில் வேலை கிடைத்து விடாது என்று அவனுக்குத் தெரியும். ஆனால் பூர்ணலிங்கம் பிள்ளைக்கு அது தெரியாது. 'இன்னும் உத்தியோகம் கிடைக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்?' என்று தான் அவர் திகைத்தார். 'அது அதுக்கு நேரமும் காலமும் வர வேண்டாமா? நம் கையிலா இருக்கிறது?' என்று நினைத்துச் சமாதானம் அடைந்தாள் வடிவம்மாள்.

மூன்றாவது வருஷமும் பிறந்து விட்டது. படித்து விட்டு வேலையில்லாமல் இருந்தால், தன் வீட்டிலேயே தான் வேண்டா விருந்தாளியாக மாறிவிடும் விபரீதமான உண்மையைக் கண்டறிந்தான் சுந்தரம். படிப்பினால் உத்தியோக ஸ்தானம் கிடைப்பதற்குப் பதிலாகப் பிறந்த வீட்டில் இருந்த ஸ்தானமே போய் விட்டது. பெற்றோர்கள் அவன் மீது குடும்ப பாரத்தைச் சுமத்த விரும்பியதற்கு, அவனே குடும்பத்துக்குப் பாரமாக ஆகி விட்டான். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

கிருஷ்ணப்ப நாயுடுவின் மகன் படித்த காலம் வேறு. இந்தக் காலம் வேறு என்பது பூர்ணலிங்கம் பிள்ளைக்கு விளங்கி விட்டது. மகனைப் படிக்க வைத்தது பெரிய முட்டாள்தனம் என்று அவர் கருதியதை, ஒரு நாள் பலகாரக் கடை ஐயரிடம் அவர் கூறிய வார்த்தைகள் எடுத்துக் காட்டின. ஐயர் தம் மகனையும் வெளியூர்ப் படிப்புக்கு அனுப்ப எண்ணினார். அதைப் பற்றிப் பூர்ணலிங்கம் பிள்ளையிடம் அவர் சொல்லிக் கொண்டிருந்த போது, அவரை எச்சரித்தார் பிள்ளை. படிக்க வைத்து மகனுடைய பிழைப்பையும், குடும்பத்தின் பிழைப்பையும் கெடுத்துவிட வேண்டாம் என்று கூறித் தடுத்தார். தம் குடும்பம் படும் பாட்டை உதாரணமாகக் காட்டினார். ஆனால், ஐயர் அதைக் கேட்டு மனம்

மாறி விடவில்லை என்பதைப் பிள்ளை கண்டு கொண்டார்.


"மேல் படிப்புப் படிக்காமலேயே நீங்கள் கடை வைத்துச் சம்பாதித்துக் கவலையில்லாமல் குடும்பம் நடத்துகிறீர்கள். நீங்கள் படித்த அளவுக்கு உங்கள் மகனும் இப்போது படித்திருக்கிறான். அவனையும் உங்களோடு சேர்த்துக் கடை நடத்தினால், இன்னும் சௌக்கியமாகக் காலம் தள்ளலாம். நீங்களோ இதை விட்டு விட்டுப் படிக்க அனுப்ப வேண்டும் என்று நினைக்கிறீர்கள். என்ன லாபத்தைக் கருதியோ? அந்தக் காலத்தில் படித்தால் படிப்பாளி என்ற பெயராவது இருந்தது. இப்போது அது பிழைப்பையே கெடுக்கிற காரியமாக அல்லவா இருக்கிறது? ..."

இப்படிப் பூர்ணலிங்கம் என்னென்னவோ சொல்லி ஐயரை மிரட்டிக் கொண்டிருந்தார்......அது வேறு கதை.

சுந்தரம் நான்கு வருஷங்கள் வேலை கிடைக்காமல் பசி பட்டினிகளையெல்லாம் அனுபவித்து, பெற்றோரின் முகத்தில் விழிப்பதற்கே கூசிக் கொண்டிருந்த சமயத்தில், மதுரையிலுள்ள பள்ளித் தோழன் ஒருவன் கைகொடுத்துக் கரையேற்றுவது போல அவனுக்குப் பதில் கடிதம் எழுதியிருந்தான். மறுநாளே செலவுக்குக் கொஞ்சம் பணம் சமாளித்துக் கொண்டு சுந்தரம் மதுரைக்குப் புறப்பட்டுப் போனான். சில வாரங்களில் நண்பனின் உதவியால் அறுபது ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது.

சுந்தரத்துக்குக் கடையியில் உத்தியோகம் கிடைத்து விட்டது.

ராமையாவைப் படிக்க வைப்பதைப் பற்றி ஒருநாள் வடிவம்மாள் சொல்லிக் கொண்டிருந்தாள். "படிப்பும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்" என்றார் பூர்ணலிங்கம் பிள்ளை. அவனைப் படிக்க வைக்கத்தான் வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னான் சுந்தரம். அப்போது அவன் மதுரையிலிருந்து லீவில் வந்திருந்தான். அவன் உத்தியோகம் பார்க்கத் தொடங்கி இரண்டு வருஷங்களாகி விட்டன. மொத்தம் மூன்று தடவைகள் சொந்த ஊருக்கு லீவில் வந்திருக்கிறான். வரும் போதெல்லாம் தங்கைகளுக்கும் தம்பிக்கும் இருபது ரூபாய்க்குத் துணிமணிகளும், வேறு சாமான்களும் வாங்கிக் கொண்டு வருவான். தகப்பனார் கையில் ரொக்கமாக முப்பதோ நாற்பதோ கொடுப்பான். இவ்வளவுதான் அவனுடைய ஒரு வருஷச் சம்பாத்தியம். காலமெல்லாம் இருண்டு கிடக்கும் வீட்டில் மூன்றே



"ஆல் இந்தியா ரேடியோவிலே என்னவெல்லாமோ படிக்கிறாளே.. நம்ம பரீட்சைப் பாடங்களைப் பரீட்சை டயத்திலே படிக்கப்படாதோ?..."

முக்கால் நாழிகை மத்தாப்புக் கொளுத்துவதற்குத்தான் பயன்பட்டது.

ராமையாவுக்கு அப்போது நான்கு வயது. சுந்தரம் தன் அண்ணன் என்பது அவனுக்கு அந்தவயதில் சரிவர விளங்காவிட்டாலும், தனக்கு மிகமிக வேண்டிய ஒருவன் என்பது தெரிந்தது. அவன் காலமெல்லாம் தன்னோடு இருந்தால் நல்ல சாப்பாடு சாப்பிடலாம், நல்ல தின்பண்டங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும், தினந்தோறும் விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் கொடுத்துத் தன்னோடு விளையாடிக் கொண்டிருப்பான் என்றெல்லாம் அவன் நினைத்தான். இந்தத் தடவை சுந்தரம் லீவு முடிந்து மதுரைக்குப் போகும் போது 'போகக் கூடாது' என்று சொல்லி அழுதான். அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு பெருங் கூப்பாடு போட்டான். அவனை என்ன சொல்லியும் சமாதானப்படுத்த முடியவில்லை. பெரும்பாடு பட்டுத்தான் அவனைச் சுந்தரத்தினிடமிருந்து அப்புறப்படுத்த முடிந்தது.

சுந்தரம் மதுரைக்குப் போய் விட்டான். மத்தாப்பு வெளிச்சம் மறைந்து விட்டது. சுந்தரம் வந்து இருந்த போது தினந்தோறும் 'விருந்துச் சாப்பாடு' சாப்பிட்டுக் கொண்டிருந்த ராமையாவுக்குப் பழையபடியும் கஞ்சியும் கூழுமே கிடைத்து வந்தன. தன்னை அநியாயமாக அண்ணன் தவிக்க விட்டுப் போய் விட்டதாக நினைத்தான். ஏக்கத்தால் வாடிய அவன் முகத்தில் பிரகாசம் தென்படப் பல நாட்கள் ஆகிவிட்டன.

சுந்தரத்துக்குச் சம்பளம் உயரவே இல்லை. அதிகச் சம்பளத்தில் வேறு வேலையும் கிடைக்கவில்லை. அதே வேலை; அதே சம்பளம்; அதே சேமிப்பு — மாதம் ஐந்து ரூபாய். அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரே மாறுதல்

இதுதான்: அவனோடு ஒரே வீட்டில் தங்கியிருந்த நண்பர்கள் நான்கு பேரும் ஒவ்வொருவராகக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, அவனைத் தனியாக விட்டுப் போய் விட்டார்கள். அந்த வீட்டில் குடியிருக்க வேறு பிரமச்சாரிகள் யாரும் வரவில்லை. அவனால் முழு வாடகையையும் கொடுக்க முடியவில்லை. அதனால் அதை விட்டு வேறோர் அறைக்குக் குடிபோனான். இங்கே ஐந்து ரூபாய் அதிக வாடகை கொடுக்க வேண்டியிருந்தது. இந்த மாறுதல், இந்தத் துன்பமயமான மாறுதல் ஏற்பட்டு இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன.

சுந்தரத்தின் நம்பிக்கைகளெல்லாம் தகர்ந்து விட்டன. தாயாரையும் தம்பி தங்கைகளையும் மதுரைக்கு அழைத்துக் கொண்டு வந்து, அவர்களுக்குப் பசியாமல் சாப்பாடு போடுவது எந்தக் காலம்? தம்பியைப் படிக்க வைப்பது எப்படி? வாழ்க்கைச் செலவுகள் அதிகமாகி மாதாமாதம் ஐந்து ரூபாய் மிச்சம் பிடிப்பதே அசாத்தியமான காரியமாகி விட்டது. இந்த நிலையில்தான் முந்திய தடவை அவன் ஊருக்கு வந்தது. அது போன வருஷம். அப்பொழுதும் அவனைப் பிரிய மனம் இல்லாமல் ராமையா அழுதான். மதுரைக்குத் தானும் வருவதாகப் பிடிவாதம் செய்தான். அதற்குரிய காரணத்தையும் தெரிவித்தான்; "நீ போன பிறகு எனக்கு அம்மா கஞ்சி தான் ஊற்றுவாள், அண்ணா" என்றான்.

சுந்தரத்தின் கண்களில் நீர் துளித்தது. அம்மா வேண்டுமென்றா அவனுக்குக் கஞ்சி ஊற்றுகிறாள்!

ராமையாவை ஏமாற்றி விட்டு அவன் இல்லாத சமயம் பார்த்து ரயிலுக்கு ஓடி வந்தான் சுந்தரம்.

தன்னுடைய அண்ணன் தினந்தோறும் பலகாரங்களும், உயர்ந்த சாப்பாடும் கிடைக்கும் மதுரைக்குத் தன்னை அழைத்துச் செல்லாமல் தான் மட்டும் சௌக்கியமாக இருப்பதற்குச் சென்று விட்டான் என்று நினைத்தபோது ராமையாவுக்கு அவன் மீது ஒரு மாதிரி வெறுப்பு ஏற்பட்டது. 'ஈவிரக்கம் இல்லாத கல்நெஞ்ச'னை ராமையா வெறுக்காமல் இருப்பது எப்படி?


அந்த வெறுப்பு அவன் உள்ளத்தில் வளர்ந்து கொண்டே இருந்தது. அம்மா பாரபக்ஷம் காட்டி அவனுக்கு நல்ல நல்ல பலகாரங்களெல்லாம் செய்து கொடுப்பது ராமையாவுக்குப் பிடிக்கவில்லை. அண்ணன் ஆயிரம் ஆயிரமாகக் கொட்டினாலும் அவனுக்குப் பச்சைத் தண்ணீர் கூடக் கொடுக்கக்கூடாது என்பதுபோல நினைத்தான் ராமையா. ஏழு வயதில் தன் உடன் பிறந்தவனிடம் அவனுக்கு இப்படியெல்லாம் வெறுப்பு ஏற்பட்டது. இந்த நிலையில், அவன் சுந்தரத்தோடு மதுரைக்குப் போகவேண்டுமென்று ஆசைப்பட்டதில் ஆச்சரியம் என்ன?

ரயில் வண்டி திருமங்கலத்தைத் தாண்டி விட்டது. அது நூறாவது தடவையோ, நூற்றுப் பத்தாவது தடவையோ — திரும்பவும் தம்பியின் முகத்தை நினைவுபடுத்திப் பார்த்தான். எவ்விதச் சாயலும், எவ்விதச் சலனமும் இல்லாமல் அவன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்ததும், அவனிடம் பலமுறையும் சொல்லிக் கொண்டு தான் விடைபெற்றதும் ஞாபகத்துக்கு வந்தன. ரயில் நகர்ந்தபோது ராமையா முன் தடவைகளைப் போல் கையை அசைக்கவும் இல்லை.

"ராமையா! நான் உன்னை நடுக்காட்டில் தவிக்க விட்டுவிட்டு இன்பலோகத்துக்கு வந்துவிட வில்லையடா. நான் வேறொரு நடுக்காட்டுக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். நீயாவது என்னை வெறுப்பதன் மூலம் ஓர் ஆறுதலைத் தேடிக்கொண்டு விட்டாய். எனக்கோ எந்த ஆறுதலும் இல்லை. தினம் தினமும் உன்னையும், உன் ஏக்கத்தையும், இப்போது உன் வெறுப்பையும் எண்ணி எண்ணித் துயரப்படுவதற்குத் தான் மதுரைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். நீ நினைப்பதுபோல் நான் ஈவு இரக்கமற்ற பாவியில்லை.

"என்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தான் என் படிப்புப் பயன்பட்டது. படிப்பா இது? காப்பாற்றுவதற்கும் சோறு போடுவதற்கும்தான் படிப்பா? என்ன முட்டாள்தனம்!... ராமையா, எனக்கு ஒரு வருஷம் அவகாசம் கொடு. நீ நினைக்கிறபடியெல்லாம் உன்னை வைத்துக் காப்பாற்றுகிறேன்; இல்லையென்றால் என்னை மட்டும் காப்பாற்றும் இந்தச் சுயநலத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு உன்னிடமே வந்துவிடுகிறேன். என் படிப்பின் பலத்தைப் பரீக்ஷை செய்து பார்ப்பதற்கு ஒரு வருஷத் தவணை கொடுத்தால் போதும். இதில் தோல்வி கண்டால், நான் மனம் ஒடிந்து உட்கார்ந்து விடமாட்டேன். என்னிடம் வேறொரு பலமும் இருக்கிறது: மனித பலம் இருக்கிறது: அதற்குத் தோல்வியே கிடையாது. ராமையா..."

சிறிது நேரத்தில் ரயில் மதுரைக்கு வந்து விட்டது. சுந்தரம் வண்டியை விட்டு இறங்கினான். வண்டி நின்றதும், அவன் நடக்க ஆரம்பித்ததும் ஏதோ சங்கேதங்களைப் போல இருந்தன.


மாஸ்டா
பல்புகள்
பிரகாசம்
அதிகம்
நீடித்து
உழைக்கும்
அஸோஸியேடட் எலெக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ்
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்
தலைமை ஆபீஸ்: க்ரவுன் ஹவுஸ், 6 மிஷன்ரோ, கல்கத்தா.
கிளைகள் :
பம்பாய், புதுடெல்லி, மதராஸ், பங்களூர், கோயம்புத்தூர், நாகபுரி.
டீலர்கள் :
பி. நடேசன் அண் கோ., லிமிடெட், 10, மவுண்ட் ரோடு, சென்னை-2 ● போம்ரா பிரதர்ஸ், 392 தங்கசாலை தெரு, சென்னை-1 ● குட்மென் அண் கோ., 31, டூப்ளே தெரு, பாண்டிச்சேரி


பிரகாசிக்க
உங்கள் பித்தளை, செம்பு சாமான்களை தினசரி
பிராஸோ வால்
துலக்குங்கள்
BRASSO

ஸாண்டோஸ்

காப் ஸிரப்


இருமலுக்கு இதமளிக்கிறது

இருமல்—ஜலதோஷ நிவாரணமாக, இயற்கையன்னை அளித்தருளிய வைத்திய மூலிகைகளுள் மிகவும் கைகண்ட மூன்று மூலிகைகளில் இருக்கும் அதே சத்துக்கள், விஞ்ஞான முறையில் ஒன்றுசேர்ந்த நவீன மருந்தே ஸாண்டோஸ் காப் ஸிரப்.

தொண்டையிலுள்ள இரணவீக்கத்தை சட்டென்று கண்டித்து இதமளிப்பதற்கான மூலிகை பாபாவேர ஸோம்னிவேரம்; கட்டிப்போன கபத்தைக் கரைத்து வெளியேற்றிவிட உதவுவதற்கான மூலிகை ஸெபலிஸ் இபெகாகுவான்ஹா; மூச்சடைப்பு வேதனையை அதிவிரைவில் தணித்துவிடுவது எபேத்ரா என்ற 'இளைப்பாற்றும்' சக்தியுள்ள மூலிகை;—ஆகிய மூன்று சத்துக்களும் இதில் இணைந்துள்ளன.

அதனால்தான் ஸாண்டோஸ் காப் ஸிரப், டாக்டர்கள் குறித்துக் கொடுக்கும் மருந்தாக விளங்குகிறது. மேலும், செர்ரிப் பழம் போன்ற அதன் இனிப்பை குழந்தைகள் பெரிதும் விரும்புகின்றனர்.

ஸ்விஸர்லந்து நாட்டு ஸாண்டோஸ் ஆராய்ச்சி சாலையின் மருந்துச் சரக்கு.



SANDOZ

பேஸெல் பெத்த. ஸாண்டோஸ் ஃபார்மஸ்யூடிகல்ஸ்
லிமிடெட் கம்பெனியின் ... தயாரிக்கப்பட்டது.

BCS. F. 2-50 TH.



ஐயனார் ஏரி

வடுவூர் நாராயணன்

"நேற்று நீங்கள் வருவதற்கு முன்பு மாமா இங்கே வந்திருந்தார். நீண்ட நேரம் அவர் காத்திருந்து விட்டுப் போனார்!"

"எதற்காக வந்தாராம்?"

சனிக்கிழமையன்று நடக்கப் போகிற மண்டகப்படிக் காரியத்தில் உங்களுக்குப் பரிவட்டம் கட்டிப் பார்க்க வேண்டுமாம்! அதைச் சொல்லிவிட்டுப் போகவந்தாராம்!"

"நீ என்ன சொன்னாய்?"

"உங்களைக் கண்டிப்பாக அனுப்புகிறேன்!" என்றேன்.

"இதோ பார், வடிவு! என் சுபாவம் உனக்கு இன்னும் தெரியவில்லை! இதில் எனக்கு நம்பிக்கையே கிடையாது! மண்டகப்படி செய்கிற பணத்தில்......."

"போதுமே! தயவுசெய்து நீங்கள் மேலே ஒன்றும் சொல்ல வேண்டாம். நாவிலே சனியன் இருக்கும் என்று சொல்வார்கள். நம்பினால் தான் தெய்வம். இல்லாமற் போனால் கல்தான். உங்கள் விருப்பப் படியே ஆகட்டும். ஆனால்..."

"என்ன?"

"நாளைப் போக மறுநாள் அறுப்பு விடப் போகிறீர்களா?"

"ஆமாம்!"

"ஐயனார் காட்டு நிலத்தைத்தானே?"

"ஆமாம்!"

"மூன்று வருஷங்களாக நம் குடும்பத்தைப் பீடை படுத்திவைக்கிறதைப்பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம். அதனால் நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த வருஷமாவது....."

"என்ன செய்யணும்? சீக்கிரம் சொல்லு? சங்கத்திலே சிநேகிதர்கள் காத்திருப்பார்கள்!"

"அறுவடை முடிந்து கண்டு முதல் செய்கிறபோது....."

"என்ன செய்யணும்?"

"ஒரு கைப்பிடிக் கதிரை ஐயனார் கோயிலில் கொண்டு வைத்து விட்டு அப்புறம் வீட்டுக்கு நெல் கொண்டு வர வேணும்!"

"கொண்டு வைக்காமற் போனால், நெல் வீட்டுக்கு வராதோ?"

"தெய்வம் அந்த மாதிரியெல்லாம் நேருக்கு நேராகச் செய்கிறதென்று ஆரம்பித்து விட்டால் உலகம் உருப்பட்டு விடுமே? பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகிற காரியத்தை நாம் ஏன் மாற்ற வேணும்?"

"வடிவு! இந்த வருஷம் ஐயனார் கோயிலை அந்த இடத்தை விட்டே அப்புறப்படுத்த ஏற்பாடு செய்கிறேன். கோயில் இடம் மாறினால் ஏரி உள்வாயைத் தூர்த்து நாலு ஏக்கரா நிலம் சாகுபடி செய்யலாம்."

"ஐயையோ! அப்படியெல்லாம் செய்யாதீர்கள். ஏற்கனவே குழந்தையில்லை என்கிற குறை. எந்தத் தெய்வத்தின் கோபமோ, தெரியவில்லை. இது வேறு வேண்டுமா?"

"நான் ஒரு காரியம் நினைப்பது அது முடியாமல் இருப்பதா?"

வடிவு எத்தனை கெஞ்சியும் கூடச் சிவானந்தம் கேட்காமல் முறைப்பாக வெளியே போய்விட்டான். அவனிடம் பேசுவதற்கு முன் அலையற்ற குளம் போல் அமைதியாக இருந்த வடிவின் உள்ளம், பேசியபின் கலங்கியது.

கந்தசாமியின் மகனா சிவானந்தமா இப்படி மாறி விட்டார்? வடிவின் கண்களுக்கு எதிரே, ஏரியின் மேற்கு ஓரத்தில் வடக்குப் பக்கமாக இருக்கும் சிறு ஐயனார் கோவில் தோன்றியது! மேலக்காற்றில் அலைகள் எழுந்து கோயிலின் மதகுடன் போவதும் தெரிந்தன! கரையில் வானளாவ வளர்ந்திருந்த அரச மரங்களிலிருந்து 'ஹோ'வென்று கிளம்பிய இரைச்சலும் அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. அப்படியே நின்ற இடத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து விட்டாள். கரங்கள் குவிந்தன. கண்களில் நீர் கசிந்தது. இமைகள் மூடின. உணர்ச்சி



களின் வடிவாக மாறிக் கல்லாகச் சமைந்து விட்டான் அவன்.

ஏரியருகே இருந்த ஐயனார் காட்டு நிலம் அந்தக் குடும்பத்தினரின் மஞ்சள் காணி சொத்து.

அந்தக் காலத்தில், அந்த ஊரில் ஐயனார் கோயில் ஒன்றுதான் பெரிய கோயில். ஊருக்கு எல்லையில், வடக்குப்புறமாக ஏரியின் நடுவிலும் இல்லாமல் கரையிலும் இல்லாமல் ஒரு பக்கமாக அது அமைந்திருந்தது. சாதிப் பாகுபாடு இல்லாமல் எல்லோரும் நன்றாகத் தரிசனம் செய்வர். அந்தக் கோயிலில் வெகு விமரிசையாகத் திருவிழா நடைபெறும். தெருவெல்லாம் பந்தல்கள் போடப்படும். கச்சேரிக்கென்று தெற்குச் சீமையிலிருந்து நாகஸ்வர வித்வான்கள் பலர் வருவார்கள். வெளியூரிலிருந்து வருபவர்கள் யாராயிருப்பினும் வயிறு நிறைய விருந்து அளிக்கப்படும். அப்பணியை ஒரு நாளைக்கு ஒருவராக அவ்வூரில் உள்ள எல்லோருமே பங்கிட்டுக் கொண்டனர். இத்தனை விமரிசைக்கும் காரணம் ஐயனாரின் சக்திதான் என்பது மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

அந்தக் கோயிலுக்கு எதிரே ஒரு பர்லாங்கு தூரத்தில் ஏரிக்கரை யோரமாக ஒரே அடைப்பாக நான்கைந்து வேலி நிலம் இருந்தது. கோயிலுக்குச் சொந்தமான இந்த நிலத்தை ஏலத்துக்கு விட்டு விட முயன்றனர். அப்போது ஊருக்கு நாட்டாண்மைக்காரர்களாக இருந்த வேலப்பக் கண்டியரும், சோமு மழவராயரும் ஏலத்தில் போட்டியிட்டனர். நண்பர்களிடையே எப்படியாவது அந்த நிலத்தை வாங்க வேண்டுமென்று எழுந்த


பிடிவாதம் முறுக்கேறியது. அதன் பலனாக மளமளவென்று நிலத்தின் விலை விஷம்போல் ஏறியது.

ஒரு முடிவாகக் கண்டியர் திடீரென்று இன்னுமொரு இரண்டாயிரத்தை ஒட்ட வைத்துப் பத்தாயிரத்தைந்நூறுக்குக் கேட்டு விட்டு உட்கார்ந்து விட்டார். மழவராயர் பதிலுக்குக் கேட்கவில்லை! நிலம் கண்டியருக்குச் சொந்தமாயிற்று.

அன்றிரவு கண்டியருக்குக் கனவில் என்னவோ தோன்றியதாம். மறுநாள் காலை, தாமே மழவராயர் வீட்டுக்கு வந்து நிலத்தை மஞ்சள் காணியாக வைத்து இருவருக்கும் இடையே புதிதாகப் பிறந்த பகையை நீக்கிச் சம்பந்தம் செய்துகொள்ளக் கேட்டுக் கொண்டார். நிலத்தால் பிரிந்த குடும்பம், நிலத்தாலேயே சேர்ந்தது.

அந்தப் பரம்பரையில்தான் சிவானந்தத்தின் தந்தையும், வடிவின் தந்தையும் வந்தவர்கள். வழக்கப்படி சிவானந்தத்தின் திருமணத்தின்போது வடிவின் மஞ்சள் காணியாக ஐயனார் காட்டு நிலம் கிடைத்தது. இதுநாள் வரையில் அறுப்பு முடிந்ததும், முதல் கதிர் ஐயனார் கோயிலுக்குப் போவது வழக்கம்.

சிவானந்தத்தின் தலைமுறையில் அது நடக்கவில்லை! சமயத்திலும், தெய்வ பக்தியிலும் பரம்பரையாகப் புகழ் பெற்றிருந்த குடும்பத்தில் பிறந்தாலும் சிவானந்தம் நேர் எதிராக இருந்தான்.



திருமணமான புதிதில் வடிவு இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை! நாளாவட்டத்தில் அவனைச் சரி செய்துவிடலாம் என்றே நினைத்தாள். ஆனால் அவள் நினைத்ததற்கு நேர்மாறாக நடந்தது.

சிவானந்தம் தந்தையைக்கூடப் பிரிந்து தனிக்குடித்தனம் தொடங்கி விட்டான். எப்போதும் ஜமா சேர்த்துக்கொண்டு, கோயில்மண்டபத்தில் சீட்டாடுவதுதான் அவன் வேலை. துணிச்சலாக அங்கேயே சுருட்டும் பற்ற வைப்பான். ஊருக்கு நாட்டாண்மைக்காரன் மகன் என்பதற்காக நேரிடையாக அவனிடம் யாரும் எதுவும் சொல்லப் பயந்தார்கள்.

வடிவோ கணவனுக்கு நேர்மாறாகத் தெய்வத்தினிடம் அசையாத பக்தி கொண்டவள். குறிப்பாக, ஐயனார் மீது அவளுக்குப் பக்தியோடு பயமும் கலந்திருந்தது. ஊரில் வயதான கிழவி ஒருத்தி ஏதோ பேச்சு வாக்கில் அவளுக்குப் பிள்ளையில்லாத குறைக்குக் காரணம் கணவனின் ஐயனார் மீதுள்ள அசட்டையும் அவநம்பிக்கையும்தான் என்று சொல்லி விட்டாள். அன்று முதல் அந்தப் பெண்ணுள்ளம் கிடந்து தவித்தது. சுபாவத்திலேயே, சீக்கிரம் இளகும் தன்மை கொண்ட உள்ளத்துக்குச் சந்தேகத் தீ சேர்ந்து கொண்டால் கேட்கவும் வேண்டுமா? சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் தன் நிலையைச் சொல்லி அவனைத் திருத்த முயல்வாள்.


கீழே உருண்டு ஓடாமல் கிடக்கும் பந்தை எவரும் தொடாத வரை இருந்த இடத்திலேயே கிடக்கும். அதை அமுக்கிவிட்டாலோ? அமுக்கினகைகளைத் தாவிப் பிடிக்க உயரே எழும்பும்! அது போலச் சாதாரணமாக இந்த நினைவே இல்லாமல் கிடந்த சிவானந்தத்தின் மனத்தில் அவர்கள் சொல்லச் சொல்ல அதன் பலனும் விபரீதத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ஊரையும் விரோதித்துக் கொண்டு ஏரியிலிருந்து கோயிலையே அப்புறப்படுத்தும் அளவுக்கு அவன் மனம் துணிந்து விட்டான்.

★

இரவெல்லாம் வடிவு விழித்தே இருந்தாள். தூக்கம் பிடிக்கவில்லை! வாசல் கதவை உள்பக்கமாகத் தாழிட்டு விட்டு மெத்தையின் மீது அவள் உட்கார்ந்திருந்தாள்.

நடுநிசி தாண்டிய பிறகு சிவானந்தம் கதவைத் தட்டினான். அவன் உடம்பு அவன் வசத்தில் இல்லை! கண்கள் இரத்தக் களரியாகச் சிவந்து கிடந்தன. அப்போதுதான் புதுப் பழக்கம் போலிருக்கிறது. வடிவு பயப்படவில்லை! உள்ளே வரத் தள்ளாடும் அவனைக் கைலாகு கொடுத்து வரவேற்றுப் படுக்கையில்

B·O·A·C COMET 4 JETLINER



பி.ஓ.ஏ.ஸி. காமட் 4 ஜெட் லைனர்

ஐரோப்பாவுக்கும்,

தூரகிழக்கு நாடுகளுக்கும் :

இப்பொழுது இங்கிருக்கிறது!

காமட் 4 விமானங்களில், டூரிஸ்ட் மற்றும் முதல் வகுப்புகளில் பிரத்தியேக கட்டணம் இல்லாமல் பிரயாணம் செய்ய இப்பொழுதே டிக்கட்டுகளை புக் செய்து கொள்ளுங்கள்.

தேர்ந்தியான ஜெட் லைனர்களுக்கும், அருமையான சர்வீஸுக்கும் பி.ஓ.ஏ.ஸி. விமானங்களில் பறந்து செல்லுங்கள். பி.ஓ.ஏ.ஸி.யாரால் நியமிக்கப்பட்ட உங்கள் உள்ளூர் ஏஜெண்டையோ அல்லது பி.ஓ.ஏ.ஸி. பம்பாய், கல்கத்தா, டில்லி, மதராஸ் இவர்களையோ விசாரித்து விவரமறிந்து கொள்ளுங்கள்.

உலக முழுவதிலும் பி.ஓ.ஏ.ஸி.

B·O·A·C

உங்கள் நலனைப் பேணுகிறது

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேய்ஸ் கார்பரேஷன்

கிடத்தினாள். கதவை மறுபடியும் தாழிட்டு வந்த அவளிடம், "என்ன வடிவு! இன்னுமா நீ தூங்கவில்லை? ஐயனார் காட்டு நிலத்துக் கண்டு முதலுக்கு அச்சாரம் வாங்கியாச்சு! காலையில் முழுப் பணமும் வந்துவிடும். களத்து மேட்டிலிருந்து நெல் வியாபாரிக்குப் போய்விடும். என்ன சரிதானே?" என்று பையைத்தடவினான் சிவானந்தம்.

"பணம் எங்கே?"

"பையில்தானே வைத்ததாக ஞாபகம். இல்லை, மறந்து விட்டேன்! இன்று ஆட்டத்தில் முதல் சுற்றிலேயே கோவிந்தா!"

"................"

"வடிவு! மறந்து விட்டேனே, இன்று மாலையிலே ரெவின்யூ அதிகாரி வந்திருந்தார். கோயில் விஷயமாக ஏற்பாடு செய்தாகி விட்டது. இன்னும் ஒரு வாரத்துக்குள் நமக்கு இன்னுமொரு நாலு ஏக்கரா நிலம் சேரப் போகிறது."

அயர்ச்சியில் அவன் அப்படியே தூங்கி விட்டான். வடிவு? அன்றிரவு இமைகளில் இரவின் கடுமையைத் தாங்கிக் கொண்டாள். காலையில் செக்கர் வானத்தைப் போலவே அவள் கண்களும் சிவந்து போய்க் கிடந்தன.

★

வாசலில் யார் யாரோ உரக்கக் கூவும் பேச்சுகள் கேட்டன. எல்லாவற்றுக்கும் மேலாகச் சிவானந்தத்தின் குரல் உயர்ந்தே கேட்டது. அன்றுதான் கோயில்முழுசாக, அதன் உருவில் பார்க்க முடிந்த கடைசிநாள்! நாளை விடியும் பொழுது கோயில் அங்கே இருக்கப் போவதில்லை! இது சிவானந்தம் செய்த தீர்மானம்! ஊர் பெரியதனக்காரர்களோ நயமாக எத்தனையோ சொல்லிப் பார்த்து விட்டு ஒன்றும் செய்ய முடியாமல் திரும்பி விட்டனர்.

சிவானந்தம் கோவிலை இடித்து விளை நிலமாக்க ஆட்களைத் தயார் செய்து விட்டான். சரியாகச் சந்திரன் அஸ்தமனமாகும் சமயத்தில் கோயிலும் உருத் தெரியாமல் செய்யப்படும். இதை ஒரு பெரிய விழாவாகவே அவன் கொண்டாடத் தீர்மானித்து விட்டான்.

காலையில் மேள வாத்தியங்களுடன் கடப்பாரை, மண்வெட்டி போன்ற கருவிகள் ஊர்வலமாகக் கோயிலுக்கு எடுத்துச் செல்லப் பட்டன.

வடிவு துடித்தாள். அவன் வீட்டிலிருந்த சமயமெல்லாம் வாதாடிப் பார்த்தாள். ஒரு சமயம் சிரிப்பும், ஒரு சமயம் கேலியும், ஒரு சமயம் கோபக் கனலும்தான் திரும்பக் கிடைத்தன.



புதுடில்லி மத்திய சர்க்கார் உள் விவகார இலாக்காவைச் சேர்ந்த திரு ஜி. ராமச்சந்திரன் அவர்களுக்கும் சௌ. கிரிஜாவுக்கும் மன்னார்குடியில் விவாகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

கடைசி ஆயுதமாகப் பிறந்த வீடு சென்று விடுவதாகப் பயமுறுத்திப் பார்த்தாள். அவன் அசையவேயில்லை! நெஞ்சோகுரோதத்தால் வைரம் பாய்ந்து கிடந்தது. எதற்கும் துணிந்தவன் கடலின் ஆழத்தைக் கண்டு ஏன் பயப்படப் போகிறான்?

வடிவுக்குப் பத்து நாட்கள் பொழுது விடியாமல் தன் சக்தியினால் கட்டுப் படுத்தியிருந்த உத்தமியின் ஞாபகம் வந்தது. சந்திராஸ்தமனம் ஆகாமலே செய்துவிட ஏன் தன்னால் முடியாமல் போகிறது என்று அங்கலாய்த்தாள். தனிமையில் உட்கார்ந்து, நெஞ்சமெல்லாம் நெக்குருக, "ஐயனாரப்பனே! உனக்கு ஆசையாயிருந்தால் எங்களை நிர்மூலமாக்கிவிடு! அவருக்கு மட்டும் ஒரு தீங்கும் செய்து விடாதே" என்று வேண்டிக் கொண்டாள். தியானத்தில் நிறுத்தி எத்தனை தரம் வேண்டினாலும் மனத்தில் நிறைவு ஏற்படவில்லை. உருவமாகச் சமைந்து நிற்கும் தெய்வத்தின் முன்பு சென்று மண்டியிட்டுக் கதறிக் கதறி வேண்டினால்தான் ஒருகால் பலன் ஏற்படுமோ என்று எண்ணினாள்.

அன்றைக்கென்று சிவானந்தம் வெளியில் எங்கும் போகவில்லை. வாசல் திண்ணையில் ஒரு ஓரமாகப் பாயை விரித்துப் படுத்துக் கொண்டான். வடிவு திண்டாடித் தவித்தாள். பயம் இதயத்தை அப்பிக் கொண்டது. கொல்லைப்புறத்தில் பகலில் ஆந்தை அலறியது! அவளுக்கு வலது கண் துடித்தது. பயந்த மனத்துக்கு இயற்கையின் ஒவ்வொரு செய்கையும் அபசகுனமாகப்படும்!

எப்படியோ இரவும் வந்து விட்டது. ஆயிற்று. இன்னமும் இரண்டுஜாமங்களே

மீதம் இருந்தன. சந்திரோதயம் ஆனதிலிருந்து மேல் காற்றும் கிளம்பி விட்டது. நிலாவை முழுவதும் வெளிவிடாமல் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டன.

சிவானந்தம் நிம்மதியாக உறங்கினான். வடிவு அவனருகே குனிந்து பார்த்தாள். வெற்றியின் சின்னம் முகத்தில் ஒளியிட்டது. செய்யப் போவது நல்ல காரியமோ, கெட்ட காரியமோ வெற்றி இரண்டுக்கும் பொதுதானே?

வாசலில் இறங்கி வந்தாள். அண்ணாந்து பார்த்தாள். நிலவைக் காணோம். எண்ணெய்க் குடம் போல மேற்குப் பக்கம் கறுத்திருந்தது. மழை மேகம் வானை மூடியிருந்தது.

மறுபடியும் உள்ளே சென்றாள். வாசல் கதவைச் சத்தமில்லாமல் வெளிப்புறமாகத் தாழிட்டு விட்டு மடியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். நெருப்புப் பெட்டியும் பஞ்சுத் திரியும் பத்திரமாக இருந்தன. அப்புறம் ஏதோ ஒரு வேகம் தூண்டிவிடக் கோயிலை நோக்கி விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தாள்.

கோயிலை அடையுமுன்னர் சிறு தூறல்கள் விழ ஆரம்பித்துவிட்டன. காற்றும் சேர்ந்து கொண்டது. சிலையின் முன்பு விளக்கேற்ற முடியாமல் சுழன்று சுழன்று வீச ஆரம்பித்து விட்டது. அத்துடன் மழையும் கனத்துக் கொண்டது.

"ஐயனாரே! இன்று கடைசியாக உன்னை இந்த இடத்தில் காண்கிறேன்! இத்தனை நாட்கள் எங்கள் குடும்பத்தைக் காத்தது போல், நீ எங்கு இருந்தாலும் காப்பாற்ற வேண்டும். நாங்கள் செய்யும் பிழை எதுவாயினும் மன்னிப்பாயா? அவர் சுபாவத்தில் நல்லவர்தான். எல்லாம் சகவாச தோஷம்தான். உனக்குத் தெரியாததா? எந்நாளும் எனக்கு மஞ்சள் பூசிக் கொள்ளும் பாக்கியத்தை மட்டும் கொடு. வேறு ஒன்றும் வேண்டாம்!" என்று வேண்டிக் கொண்டு மெய்மறந்து அங்கேயே மண்டியிட்டு உட்கார்ந்தாள்.

மோன நிலை கலைந்து வெளியே வந்து பார்த்த பொழுது நெருக்கமான மழைக் கால்களின் நடுவே பாதையே தென்படவில்லை! கோயிலின் வடக்குப்புறக் கரையிலிருந்து ஆற்று நீர் ஏரிக்குள் புக ஆரம்பித்து விட்டது. மளமளவென்று நீர் மட்டம் உயர்ந்தது. கோயிலைச் சுற்றிலும் வெள்ளக்காடு. காற்று நின்றிருந்தும் மழையின் கோபம் தணியவில்லை! வடிவு தன்னால் இயன்ற வரையில் குரல் கொடுத்துப் பார்த்தாள். சிலையின்மீது மோதிக் கொண்டாள். பைத்தியம் பிடித்த நிலையில் என்னவெல்லாமோ செய்து பார்த்தாள். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு மாறாத புன்சிரிப்புடன் சிலை நிலையாக நின்றது.

ஏதோ ஒரு சபலம் உந்திவிடத் தான் ஏற்றிய அகல் விளக்கைக் கையில் எடுத்து முந்தானையால் மறைத்துக் கொண்டு தலைக்கு மேலே மூன்று தரம் தூக்கிப் பிடித்து வெளிப் பக்கமாகக் காண்பித்தாள். பொங்கும் வெள்ளத்தின் பேரிரைச்சலைத் தவிர அவளைக் காக்க வரும் மனித அரவமே கேட்கவில்லை.

பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே வடக்கு மதில் சுவர் உட்கார்ந்தது. ஆனால் இங்குதான் ஆச்சரியப்படத்தக்க அந்த நிகழ்ச்சியும் நடந்தது.

கோயிலுள் தண்ணீர் புக ஆரம்பித்தவுடன் வடிவு பீதி மேலிடச் சிலையைப் பிடித்துக்கொண்டு அதன் அடியில்படுத்து விட்டாள். நினைவு நீங்கியது. உள்ளுணர்வு மட்டும் உயிருக்கு வேண்டிக் கொண்டிருந்தது.

கோயிலைத் தாண்டிக் கீழே இறங்க முடியாத ஆழம். சுற்றிலும் வெள்ளம். கோயிலினுள் நீரில்லை! வெள்ளமில்லை!

புதிய நிலத்தைத் தன் நிலத்தோடு சேர்க்க ஆசைப்பட்ட சிவானந்தத்தின் மஞ்சள் காணி யெல்லாவற்றையும் ஏரி விழுங்கி விட்டது. அத்துடன் நில்லாமல் வடிவையும் தன்னுள் சேர்த்துக்கொண்டு விட்டது. மறுநாள் காலையில் ஊரேவெள்ளத்தைக் கண்டு திகைத்தது. சிவானந்தம் வடிவைக் காணாமல் திகைத்தான்.

ஐயனாரின் கோபத்தைத் தணிக்கப் பூஜைகள் நடந்தன. என்ன செய்தும் வெள்ளம் மறுநாள் காலையில்தான் வடிந்தது. வடிவு சடலமாகச் சிலையின் எதிரில் கிடந்தாள்.

கோயிலின் இருப்பிடம் தானாக மாறியது. கொஞ்சம் ஓரத்தில் இருந்தது போக, இப்போது நீரின் நடுவே சென்று விட்டது. அதாவது ஏரிக் கரையை விழுங்கி உள்ளே புகுந்து நடு ஏரியை ஆக்கிரமித்துக் கொண்டது.

அப்புறம் அந்தக் கோயிலைக் கட்ட ஒருவரும் முன்வரவில்லை. தினம் பூஜை மட்டும் தவறாமல் நடந்து வந்தது.

எத்தனைதான் மழை பெய்தாலும், வெள்ளம் வந்தாலும் இன்றுகூடக் கோயிலுக்குள் நீர் வருவதில்லை! ஒவ்வொரு இரவிலும் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு மேலே அந்தப் பக்கத்திலிருந்து ஏதோ ஒரு தீனமான ஒலி கிளம்புவதாகவும் கோயிலினுள் பெண் ஒருத்தி விளக்கேற்றப் போவது போல் தெரிவதாகவும் ஊரில் பேசிக் கொள்கிறார்கள்.

அந்த ஏரிக்குக் காலப் போக்கில் ஐயனார் ஏரி என்று பெயர் ஏற்பட்டு விட்டது. வருடந் தோறும் அங்கே படையல் நடத்துவதற்கு இப்போது நிதி வசூல் செய்து வரும் முதல் ஆள் சிவானந்தம்தான்.

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

99. நேயர்கள் கடிதம்

கட்டுரை 53 லிருந்து நேயர்கள் கடிதங்களுக்குப் புதிய தொடர் எண் கொடுத்துப் பதில் எழுதி வருவதை நேயர்கள் அறிவர். கட்டுரை 96 வரையில்—அல்லது 1-4-59 தினம் வரையில் இவ்வகையில் 1971 கடிதங்கள் கிடைத்துள்ளன. வருஷம் பூர்த்தியாவதற்குள் நேயர்களின் கடிதங்கள் 2000 கடந்து வெகுதூரஞ் சென்று விடுமென்பது நிச்சயம்.

சந்தோஷந்தான்; இது பெருமைப்பட வேண்டிய விஷயந்தான். ஆனால், ஒளியும் இருளும் சேர்ந்துதானே இருக்கின்றன. அதே போல் சந்தோஷப்பட வேண்டிய இந்த விஷயத்திலும் ஓரளவு வருத்தத்துக்கும் இடம் இருப்பதைத் தெரிவித்தாக வேணும்.

பெருவாரியான நேயர்கள் எழுதிய விஷயத்தையே எழுதும்படி விரும்பியுள்ளதுதான் வருந்தத் தக்க விஷயம். உதாரணமாக—

இன்ன வியாதியைப் பற்றிக் கல்கியில் வெளியான கட்டுரைகளைப் படித்தேன். அந்த வியாதியில் தாங்கள் தெரிவித்த மருந்துகளை உபயோகித்துக் குணம் அடைந்ததாக இன்னார் எழுதிய கடிதத்தை "நேயர்கள் கடிதம்" என்ற பகுதியில் கல்கியில் படித்தேன். ஆனாலும், ...என்று தொடங்கி, எட்டு பக்கங்கள் தாங்கள் படும் கஷ்டங்களை எழுதியிருக்கிறார்கள். 'ஆகவே நானும் அதே மருந்துகளைச் சாப்பிடலாம் என்றிருக்கிறேன். இது விஷயமாக உங்கள் அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன். அல்லது இவற்றைவிட வேறு நல்ல மருந்துகள் இருப்பினும் தெரியப்படுத்தவும்' என்று எழுதுபவர் ஒரு சாரினர்.

இந்த வியாதி விஷயமாகப் போதுமான அளவு எழுதியாயிற்று. குறிப்பிட்ட மருந்துகளை உபயோகித்துக் குணங் கண்ட நேயர்களின் கடிதங்களையும் வெளியிட்டாயிற்று. இனிமேல் இந்த விஷயமாக எழுதப் போவதில்லை. நேயர்கள் மன்னிக்கவும் என்று எழுதிய பிறகும்.......

"இப்படித் தாங்கள் எழுதியுள்ளதையும் படித்தேன். ஆனாலும்......" என்று தொடங்கி அதே விஷயத்தை மறுபடியும் ஒன்றிரண்டு கட்டுரைகளின் அளவில் கடிதத்துக்குப் பதில் என்ற விதம் எழுதியாகவேணுமென்று 'மன்றாடிக் கேட்டுக் கொள்ளு'கிறவர் ஒரு சாரினர்.


இப்படிப் பலதரம். பதில் எழுதவேண்டிய அவசியமில்லாதவை. அவ்விதக் கடிதங்களுக்குப் பதில் எழுதவில்லை. நேயர்கள் மன்னிக்கவும்.

இவ் விஷயத்தை இன்ன நம்பரிட்ட கட்டுரையில் இன்ன தேதி பிரசுரித்த 'கல்கி'யில் விளக்கியுள்ளேன் என்று 'தட்டிக் கழிக்காதிருக்குமாறு கேட்டுக் கொள்ளும்' நண்பர்களுக்கும் பதில் எழுதவில்லைதான். எழுதியதையே எப்படி மறுபடியும் மறுபடியும் எழுதிக் கொண்டிருப்பது?

நேயர்களுள் பலர் வியக்கத்தக்க முறையிலும் எழுதியுள்ளனர். அது சந்தோஷப்பட வேண்டிய பாகம். நேரில் கடிதம் மூலம் தெரிவித்ததும் கல்கி கட்டுரை மூலம் தெரிவித்ததுமான மருந்துகளை அவரவரும் செய்து உபயோகித்துப் பலனடைந்துள்ளதைத் தெரிவித்துள்ளனர். சந்தோஷந்தான். அவற்றை மற்றுமுள்ள 'கல்கி' நேயர்களும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா? பலனுள்ளது என்று அனுபவத்தில் தெரிந்ததைப் பலருக்கும் தெரிவிக்க வேணும்; பலர் வாயிலாகத் தெரிவிக்க வேணும்; பல தடவைகள் தெரிவித்தலும் வேணும். மேலும், வேறு சிலர் புதிய விஷயங்களைப் பற்றி எழுதும்படி கேட்டிருக்கின்றனர். இதையும் தெரிவித்து விட்டு, அவ் விஷயங்களைப் பற்றி ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு ஒரு திட்டத்தின்படி எழுதி வரவேணும்; இதனால் ஏற்கெனவே இட்டிருக்கும் திட்டம் ......? சிறிது ஒத்திப் போட வேண்டியதுதான். என்ன செய்வது? நேயர் விரும்பிக் கேட்கும் விஷயங்களை உடனே எழுத வேணுமல்லவா?

1758/2 கடிதத்தில் "திருவாளர் ஹரி அண்ணா அவர்களுக்கு" திருச்சித் தம்பி எழுதுகிறான்......[அருமைத் தம்பி, சந்தேகமே இல்லை.]

"சுமார்......ஏழு அல்லது எட்டு வருஷங்களாகக் காது கொஞ்சம் மந்தமாக இருந்து.........வர வர அதிகமாகிக் கொண்டே வருகிறது. சரியாகக் கேட்பதில்லை. இடது காதும் கொஞ்சம் செவிடாகத்தான் இருக்கிறது...இது எனக்குப் பிறவியில் இல்லை......15வது வயதில் டைபாய்டு காய்ச்சலினால் 20 நாள்வரை படுத்திருந்தேன். அதனால் ஏற்பட்டிருக்கும் என நினைக்கிறேன்......மருந்துகள்



எம்.டி.எம். சிதம்பரம் செட்டியார் நினைவு ஆரம்பப்பள்ளியின் ஐந்தாம் ஆண்டுவிழா சமீபத்தில் சென்னை பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்களின் தலைமையில் கோலாகலத்துடன் நடந்தேறியது. கடவுள் வணக்கத்துக்குப் பின் பள்ளி நிர்வாகி திரு வி.எஸ். கோபால கிருஷ்ண அய்யர் அவைத் தலைவருக்கு வரவேற்புக் கூறினார். பள்ளி ஸ்தாபகர் டாக்டர் அழகப்ப செட்டியாருடைய உருவப் படத்தைத் தலைவர் திறந்து வைத்தார். பள்ளி அலுவல்களில் வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

போட்டதில் குணமில்லை...சில விநாடிகள் காதில் 'ஞொய்' என்ற சத்தம் கேட்கும். பிறகு நின்றுவிடும்...பிறரிடம் பேசவோ பழகவோ முடியாமல்......வாழ்க்கையே பாதிக்கப்பட்டிருக்கிறது.....இதற்கு...... தாங்கள் செய்யும் உதவி......''

உண்மைதான் அல்லவா? இது வாழ்க்கையில் ஒரு குறைதான் என்று நினைக்கும் இந்தத் தம்பி கல்யாண காலத்தில் வரதக்ஷிணை விஷயத்தில் ஏதாவது குறைத்து வாங்கிக் கொள்வாரோ? பொறுத்திருந்து பார்ப்போம்.


எப்படியானாலும் தம்பிக்குத் தலைக்கு க்ஷீரபலா தைலத்தைத் தினசரி தடவி ஊறிப் பின் மூடி சீவிக் கொள்ளும்படியும் தினசரி தலைக்குத் தண்ணீர் விட்டுக் குளிக்க வேண்டாம் என்றும் — ஏதோ 10 - 15 நாளைக்கொருதரம் தலைக்குக் குளிப்பதானாலும் — இதே தைலத்தைத் தலைக்குத் தேய்த்து அதிக நேரம் ஊறின பிறகு, உடனே குளிக்க வேண்டுமென்றும் — தினசரி குளிப்பது குடிப்பது யாவும் வெந்நீர்தானாக வேணுமென்றும் உள்ளுக்குத் தஞ்சை அரண்மனை முறைப்படி தயாரித்த அச்வகந்தா லேஹ்யத்தை உபயோகிப்பதோடு-காதினுள் காளான் இருக்கும் பட்சத்தில் போரால்கஹால் என்னும் மருந்து, க்ஷார தைலம் என்பது ஆகியவற்றை ஒன்றை ஒரு தினமும் மற்றொன்றை மறுதினமுமாக மாறி மாறிச் சில துளிகள் காதில்விட்டு வரவும்—என்றெல்லாம் எழுதி யிருந்தேன். அவசியமானால் காது விஷயமாகக் கட்டுரையே எழுதலாம். ஆனால்...

கடிதம் 1762 - 2ல் சிங்கப்பூர் நேயர் ஒருவர் மானஸரோகத்தைப் பற்றி எழுதும்படி கேட்டிருக்கிறார். எழுத வேண்டியதுதான்.

கடிதம் 1763-2ல் ஆம்பூர் நேயர் எழுதுகிறார். கல்கியில் வரும் நாட்டு வைத்தியக் கட்டுரைகளில் கண்ட வைத்திய முறைகளில் சிலவற்றைச் செய்து குணம் அடைந்துள்ளார். சிலருக்கு 'இதைச் செய், அதைச் செய்' என்று சொல்லி அவர்களும் குணம் பெற உதவியுள்ளார். இவற்றை ஓரளவு விளக்கமாக எழுதிப் பிறகு, ''இதற்குத் தங்களுக்கும் 'கல்கி' பத்திரிகைக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்'' என்று தெரிவிக்கிறார்.

தொடர்ந்து மேலும் எழுதும்போது தனக்குள்ள உறக்கமின்மை, அல்லது நித்திரா நாசம் அல்லது அல்ப நித்திரை என்றெல்லாம் நமது சாஸ்திரங்களில் தெரிவித்துள்ளதும், இன்ஸோம்னியா என்று ஆங்கில வைத்திய சாஸ்திரத்தில் அழைக்கப்படுவதுமான வியாதியைப் பற்றிக் கல்கி வாசகர்கள் அனைவருக்கும் பயன்படுமாறு எழுதும்படி கேட்டுக் கொள்கிறார்.

செய்ய வேண்டியதுதான். ஆனால் இது விஷயமாகக் கல்கியில் எழுதியாயிற்றே! போதாதா? கட்டுரை 10, 14-4-57 கல்கியில் எண்ணெய்க் குளியினால் உறக்கமின்மை தீருமென்று சொல்லியாயிற்று. கட்டுரை 17, 2-6-57 கல்கியில் ''கடமை வழுவாது நடந்துள்ளேன்'' என்ற மனத்திண்மையுடன் கவலையற்றிருப்பவனுக்கும், உடலுழைப்புக் குறைவில்லாமல் இருப்பவனுக்கும் தூக்கமில்லை என்ற நிலை ஏற்படாது'' என்று தெரிவித்திருப்பதையும் நினைவூட்டுகிறேன்.



பாடாதே தம்பி!

ஆர். எஸ். ஞானம்பாள்

ராமு என்கிற ஜானகிராம் சாரின் கருத்த முகம் இன்னும் இருண்டு பளபளத்தது, ராஜாவின் பதிலைக் கேட்டு. 'இசை மன்னனாகப் போகிறாயோ இசை மன்னனாக?' என்று பரிகாசம் செய்து விட்டு 'அடுத்தபடி நீ சொல்லு' என்று அவர் இன்னொரு பையனை அதட்டினார்.

எஸ். எஸ். எல். சி. என்ற சர்க்கார் பரீட்சை எழுதப் போகும் மாணவர்களுக்குப் பள்ளி வாழ்வில் அன்று தான் கடைசி நாள். பரீட்சைக்கு இன்னும் ஒரு வாரத்துக்குமேல் இருந்தது என்றாலும் படிப்பதற்கென்று அன்றிலிருந்தே அவர்களுக்கு விடுமுறை அளித்து விட்டார் தலைமையாசிரியர். விடுமுறை கிடைத்த மகிழ்ச்சி இருப்பினும், மாணவர்களின் மனத்தில் இனம் புரியாத கலக்கம். 'நாளையிலிருந்து இந்தப் பள்ளி வாழ்க்கை இல்லை' என்ற மாத்திரத்தில் ஒரு பையன் அழுதே விட்டான். ஜானகிராம் சாருக்குக் கூடக் கஷ்டமாகத்தான் இருந்தது. அந்த வருஷ மாணவர்கள் அனைவருமே மணிப் பயல்கள். அவர்களுடைய வகுப்புக்குச் செல்வதே, மிகுந்த உற்சாகமளிக்கும் அவருக்கு.

பரீட்சை எழுதும் முறைகள் பற்றிக் கடைசி நேரக் குறிப்புக்களையெல்லாம் சொன்னார். அவர்களுடைய எதிர்கால வாழ்வுக்குப் பயனளிக்கும் நன்மொழிகளைப் புகன்றார். வெகு உருக்கமாக வழக்கத்தைவிட அன்று மிகக் கலகலப்பாக இருந்தார் ஆசிரியர். முதல் வரிசையில் தம்எதிரே இருந்த ஒரு மாணவியை நோக்கி, "படிப்பு முடிந்ததும் என்ன செய்யப்போகிறாய்?" என்று வினவினார்.

"கல்யாணம் செய்து கொள்ளப்போகிறேன், சார்!" என்றவள் வாய் மூடுமுன்

கொல்'லென்று சிரிப்பொலி எழுந்தது. அவனுடைய துணிவான பதில் ஜானகிராமின் முகத்திலும் புன்னகையை வரவழைக்கத் தவறவில்லை. 'அமைதி' என்று மேஜையைத் தட்டி அடுத்து, "நீ கைலாசம்?" என்று கேள்வியைத் தொடர்ந்தார்.

"நான் எழுத்தாளனாகப்போகிறேன்."

"மாலுமி!"

"டாக்டர்!"

"வியாபாரி!"

"பிரதம மந்திரி!"

"என்ஜினீயர்!"

"ராணுவ அதிகாரி"—இப்படி அந்தச் சிறு உள்ளங்களின் எதிர்காலம் எதை எதையோ குறியாகக் கொண்டிருந்தன.

"உங்களைப் போலவே ஒரு கணக்கு வாத்தியாராக வரத்தான் எனக்கு ஆசை சார்" என்று ஒரு சிறுவன் கூறவும் ஜானகிராம் குப்பென்று சிரித்து விட்டார். அடுத்து ஒரு மாணவி "நான் ஐ. ஏ. எஸ். எழுதி விட்டுக் கலெக்டராக வருவேன் சார்!" என்றாள் வெகு உறுதியாக. வகுப்பில் அவள் தான் எதிலும் முதல்.

"செய்யக் கூடியவள் தான் நீ" என்று அவளைப் பாராட்டினார் ஆசிரியர். 'நீ' என்று சொல்லும்போது அன்பும் ஆர்வமும் இழைய ஒலித்தன அவர் குரலில்.

"நாடு முழுதும் போற்றும் இசை மன்னன் ஆகப் போகிறேன் நான்" என்ற அந்த இனிய இளம் குரல்தான் ஆசிரியருக்கு அடங்காக் கோபத்தை ஊட்டியது. அவர் அவன் மீது, அவன் எதிர்காலத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கை என்ன? அந்த 'மடையனின்' புத்தி போகிற போக்கென்ன? எல்லோரையும் போல் அவனும் ஒரு மாணவனாக மட்டும் இருந்தால் அவன் இலட்சியத்தைக் கேட்டு அவர் கோபம் கொள்ளப் போவதில்லை. அப்படியொன்றும் அவர் இசை விரோதியோ, சங்கீத வாசனை அற்ற ஜடமோ அல்ல. மாறாக, அவன் ஆசையைப் பாராட்டி உற்சாகமும் அளித்திருப்பார். ஆனால் அப்படிக் கூறிய அந்தப் பாவிப்பயல் அவருடைய தம்பியாகவும் அல்லவா இருந்து தொலைத்தான்!

ஒரு வாரமாகவே ஜானகிராமுக்குத் தன் தம்பி ராஜா மீது அளவற்ற கோபம். அவர் அத்தனை பாடுபட்டு, ஒருமுறைக்குப் பத்து முறையாகச் சொல்லிக் கொடுத்திருந்த கணக்குகளைப் போடாமல், முயற்சி கூடச் செய்து பாராமல் கேள்விகளையே விட்டுத் தொலைத்திருந்தான் ராஜா, கடைசியாக நடந்த வகுப்புப் பரீட்சையில். இந்த நிலையில் சர்க்கார் பரீட்சையில் இவன் என்ன மார்க் வாங்கப்போகிறான்? ஒரே பாடம், கணக்கு மட்டும்தான் தகராறு. இருந்தாலும், 'ஆங்கிலத்திலும், தமிழிலும், எல்லாப் பாடங்களிலுமே எண்பதுக்கு மேலே வாங்கி யிருக்கிறானே குழந்தை, பாவம், கணக்கில் மட்டும் தானே குறைவு. பிழைத்துப் போகட்டும் என்று 'பாஸ்' போடு வாரா பரீட்சை அதிகாரி?'

'பாடாதே தம்பீ'—என்று கூறிய அண்ணாவே பின் பொரு சமயம் 'பாடு தம்பீ' என்று உற்சாகத்தோடு அவனைத் தூண்டும் சந்தர்ப்பமும் வந்தது.

அவ்வளவு சுலபத்தில் தோல்வியை ஏற்பவர் இல்லை ஜானகிராம். 'ஹாபி பீரியட்' ஆசிரியர் ஜானகிராம்தான். அத்தனை மாணவர்களும் பொழுது போக்குவதற் கென்றே ஏற்பட்ட 'ஹாபி பீரியடி'ல் விளையாடியும், பத்திரிகை படித்தும், இசைத் தட்டுப் போட்டுப் பாட்டுக் கேட்டும் மகிழ்ந்து கொண்டிருப்பார்கள். ஜானகிராமனின் தம்பி ராஜா மட்டும் வகுப்பறையில் அமர்ந்து கணக்குப் போட்டுக் கொண்டிருப்பான். இருப்பான் என்ன? இருக்க வேண்டும். அது அவன் அண்ணாவின் விருப்பம், கட்டளை எல்லாம்.

'இப்பொழுது மார்க், மார்க் என்று பிடுங்கினால்? ஐந்தாம் படிவத்திலேயே எனக்கு 'காம்போஸிட் மாத்ஸ்' வராது. சாதா கணக்கே தானாம்' என்று முணுமுணுத்த ராஜாவை வலுக்கட்டாயமாகத் தம் வகுப்பிலே அமர்த்தி அவன் உயிரை வாங்கினார் அவன் அண்ணா. ராஜா அப்படித்தான் நினைத்தான்.

குஷியாகச் சினிமா மெட்டு ஒன்றைச் சுருதி பிசகாமல் சீட்டியடித்துக் கொண்டு புத்தகத்தின் மீது தாளமிட்டபடியே படியேறிய ராஜாவுக்கு வீட்டில் அண்ணாவின் வரவேற்பு சற்றுப் பலமாகவே இருந்தது.


"என்னடா பாட்டு எப்பப் பார்த்தாலும்? பிழைப்புப் பாடிவிடப் போகிறது. ஆன வயதுக்கு அடையாளம் காவாலிப் பாட்டெல்லாம் அத்துபடி" என்று 'சள்ளென்று' விழுந்தார், முன்னதாகவே வீடுவந்துவிட்ட அண்ணா.

"ஏன்? எனக்குக் கர்நாடக சங்கீதமும் கூடத்தான் வரும். பாடட்டுமா?" அப்பொழுதே ஒரு கச்சேரி செய்து விடுவான் போலிருந்தது அவன் துடிப்பு.

"கழுதை, எதிர்த்துப் பேசக்கூட வரும் உனக்கு. போடா அந்தப்பக்கம்!"

"என்னடா ராஜா, அண்ணா இவ்வளவு சொல்கிறான், உன் நல்லதுக்குத் தானே! கொஞ்சம் மனசு வைத்துப் படிக்கக் கூடாதா? சரி வா, தோசை வைத்திருக்கிறேன்" என்று அம்மா பரிந்து ஆதரித்தாள் இளையவனை.

"இசை மன்னனாகப் போகிறானாம், இசை மன்னனாக. அட, நடக்கட்டும், நடக்காமல் போகட்டும். ஆசை கூடவா உயர்ந்ததாக இருக்கக் கூடாது? ஏன்? 'நன்றாகப் படிப்பேன், உயர்ந்த பரீட்சைகள் எழுதுவேன், இந்த ஜில்லாவுக்கே கலெக்டராக வருவேன்' என்று நினையேன். பெண் ஒருத்திக்கு இருக்கிற ஆசையும், துணிவும் கூடவா உனக்கு இல்லை? அரிகர வாத்தியாரின் பசங்களைப் பார். அவர்களெல்லாம் முதலை வைத்துக் கொண்டா முன்னுக்கு வந்தார்கள்? கஷ்டப்பட்டுக் கருத்துடன் படித்தனர். இன்று ஒவ்வொருவனும் கலெக்டராகவும், கமிஷனராகவும் இருக்கிறான். எனக்குத்தான், அந்தக் காலத்தில், எதற்குமே வகையில்லாமற் போய்விட்டது" என்று ஜானகிராமன் பொழிந்து தள்ளினார்.



"ராமு!" அம்மா இடைமறித்தாள்.

"சும்மா இரும்மா நீ" என்று அடக்கின ஜானகிராம் சீக்கிரத்தில் ஓய்பவராக இல்லை. "திவ்யமாகப் பாடுகிறான் என்று பஜனை மடத்தில் நாலு பாட்டியம்மாக்கள் சொல்லிச் சொல்லி இவன் தலை கனத்து விட்டது. டேய், ஜாக்கிரதை, பாட்டு கீட்டு என்று எதையாவது நினைத்துக் கொண்டு பரீட்சையில் கோட்டை விட்டாயோ ஆயுள் முழுக்கப் பஜனை மடத்துத் தேங்காய் மூடிப் பாகவதனாகத்தான் இருப்பாய்" என்று பலமாக எச்சரித்தார்.

"விடு, ராமு! சும்மா சொல்லிச் சொல்லி அவன் மனசு சூடு, சுரணையே இல்லாமல் ஆகிவிடப் போகிறது" என்று அடக்கிய அம்மா, "போடா, வயிற்றுக்குத் தின்றுவிட்டு எங்காவது போய்த்தொலை" என்று ராஜாவையும் விரட்டினாள்.

'சரிக சரிக சரிகாக' என்று சுரம் பாடிக் கொண்டே குதித்தோடினான் ராஜா கிணற்றங்கரைக்கு.

முதல் நாளிரவு அம்மாவிடம் அனுமதி பெற்று, அண்ணாவுக்குத் தெரியாமல் இரகசியமாக 'அரவக்குறிச்சி' நாகசுரக் கச்சேரி கேட்டு விட்டு வந்திருந்தான் ராஜா. எட்டு நாட்களாக மாரியம்மன் திருவிழா. தெருவுக்குத் தெரு வளைத்துப் பந்தல் போட்டு, மேடை கட்டி நாடகங்கள் நடந்தன. அது அந்த ஊர் வழக்கம். விழாவுக்கு முன்னும் பின்னுமாகப் பதினைந்து இருபது நாட்கள் அபிஷேக அர்ச்சனைகளுடன் இரவில் அம்மன் ஊர் வலம் வரும். பொய்க்கால் குதிரையும், மேளக் கச்சேரியும், பாட்டுக் கச்சேரியுமாக ஊரே அமளிப்படும். போதாக்குறைக்கு மூலைக்கு மூலை ஒலி பெருக்கி வேறு. அரை நிமிஷம் அயர்ந்து கண்ணை மூடிவிட முடியாது யாரும்.

அம்மன் திருவிழா வருகிறது என்றாலே ஜானகிராமுக்குச் சலிப்புத்தான். படிக்கிற பையன்களைக் கெடுப்பதேபோல், ஒவ்வொரு வருடமுமே, சர்க்கார் பரீட்சைக்குச் சற்று முன்னர்தான் திருவிழா ஆரம்பமாகும். 'பாடாதே, படி' என்று எப்பொழுதுமே கூறத் தவறாத ஜானகிராம் திருவிழாக் கேளிக்கைகளுக்குப் போவதையும் தடுக்காமல் இருக்க மாட்டார். இவ்வருடம் தம் உத்தரவை அமுல் படுத்துவதிலும் கண்டிப்புடன் இருந்தார். அப்படியும், அவர் அறியாமல், ராஜா திருவிழாவின் அத்தனை இன்பத்தையும் அனுபவித்து விட்டுத்தான் வந்திருந்தான்!

பாவம், ஜானகிராம்! வாழ்வில் பணத்தின் மகிமையையும், பட்டத்தின் அவசியத்தையும், பதவியின் பெருமையையும் அவரைப் போல் உணர்ந்தவர் யாரும் இருக்க முடியாது. படிப்பில் அதிமேதையுடன் விளங்கிய அவர் பள்ளிப் பருவத்தைத் தாண்டு முன்னரே, தந்தை பாரிச வாயு வந்து வீழ்ந்தார். வருமானமில்

லாத நிலையிலும் 'வைத்தியம், வைத்தியம்' என்று கண்ணை மூடிக்கொண்டுதான் செலவழிக்க நேர்ந்தது. கல்லூரியில் சேர வேண்டும், கணித மேதையாகத் திகழ வேண்டும்; பெரும் பதவி வகிக்க வேண்டும்' என்ற அவர் ஆசை கூடிவர இயலாதபடி, தந்தையின் மரணமும், அழுத்தும் கடன் சுமையும், வளர்ந்து நின்ற தங்கைகளின் திருமணமும் 'கிடைத்தது சரி' என்ற திருப்தியுடன் அவரை ஆசிரியராக்கி விட்டன. அவருடைய தற்போதைய ஆசையெல்லாம், 'ராஜாவை நிறையப் படிக்க வைத்து, உயர்ந்த வேலையில் அமர்த்தி விட வேண்டும்' என்பதொன்றுதான். பணத்தைப் பற்றி அவர் கவலைப்படவே இல்லை.

* * *

"என்ன படிக்கிறாய்? தமிழா.... விஞ்ஞானமா?...சரி, சரி, நன்றாக வருகிற பாடங்களையே திருப்பித் திருப்பிப் படிக்கிறாயே. அந்தத் 'தேற்றங்களை'யெல்லாம் இன்னும் ஒரு முறை பார்."

ராஜா ஒரு சுமைப் புத்தகங்களையும், நோட்டுகளையும் வாரிக் கட்டிக் கொண்டு மாடிக்குப் போய் விட்டான்.

சாப்பிட்ட ஜானகிராமுக்கு ஏகப்பட்ட வேலைகள் இருந்தன. சிவப்பு நிறப் பென்சிலைச் சீவியபடியே சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். வகுப்புப் பரீட்சை விடைத்தாள்கள் இன்னும் ஒரு கட்டு அப்படியே கிடந்தன. பாடப் புஸ்தகக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் தலைமையாசிரியரின் விமரிசனத்துக்கு வந்திருந்த புத்தகங்களை, வேறு பார்வையிட்டு நாளைக்குள் கொடுக்க வேண்டும்.

மணி பத்தேமுக்கால். கண்ணை அழுத்தியது ஜானகிராமுக்கு. அம்மா எப்பொழுதோ படுத்துத் தூங்கி விட்டாள். பென்சிலை மேஜையின்மீது வீசி எறிந்து விட்டுக் கைகளை மேலே உயர்த்திச் சோம்பல் முறித்தார். விளக்கை அணைக்கக் கையைத் தூக்கினார். 'ராஜா படிக்கிறானா, தூங்கி விட்டானா? பார்த்து விட்டு வந்து படுக்கலாமே' என்று எண்ணியபடி இரண்டிரண்டு படிகளாக மாடிக்குத் தாவினார்.

மாடியறையில் விளக்கு எரியவில்லை. "என்னது! பத்தரை மணிக்குள்ளா தூக்கம்? இதுதான் பரீட்சைக்குப் படிக்கிற அழகா!" ஆத்திரத்துடன் உள்ளே நுழைந்து விளக்குப் பித்தானைத் தட்டினார். பாய்ந்த ஒளி வெள்ளத்தில் புலனான காட்சி அவரை ஒரு வெறியனாக்கி விட்டது.

மிக அடங்கி ஒலிக்கும் தேசிய இசை நிகழ்ச்சி ஒன்றைக் கன்னத்தில் கையை ஊன்றியபடி, வானொலிப் பெட்டியின் அருகில் காதை வைத்துக் கொண்டு வெகு கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் ராஜா. மூடிய அவன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தபடியே இருந்தது. பாடப் புத்தகங்கள் அனைத்தும் கீழே குப்பைக் காகிதம் போல் விழுந்து கிடந்தன.

ஜானகிராமின் நெற்றி நரம்புகள் புடைத்தன. அவர் நெஞ்சம் குமுறியது. "கழிசடைப் பயலே! இதுதான் படிக்கிற அழகா? ஐயா இசை இன்பத்திலே மூழ்கிக் கிடக்கிறார்!" என்று சொல்லிக் கொண்டே தம்பியை மூக்கு முகம் பாராமல் அடிக்கத் தொடங்கினார். "அண்ணா, அண்ணா! இல்லே அண்ணா!" தன் பலம் கொண்ட மட்டும் அழுது கதறிப் பார்த்தான் ராஜா. அவனை விடப் பல வருடங்கள் மூத்த அண்ணா, அவனைவிடப் பலசாலி ஆயிற்றே! மாடியில் அடித்த ஓசையும் அடி வாங்கியவனின் ஓலமும் கேட்டுக் கீழே தூங்கிக் கொண்டிருந்த அம்மா எழுந்து வேகமாக ஓடி வந்தாள்.

"ராமூ! உனக்கு மூளை, கீளை இருக்கா, இல்லையா! இப்படி அடித்துப் புரட்டுகிறாயே. ஏதாவது இசைகேடாக நேர்ந்தால், அப்பா என்றால் வருமா, ஐயா என்றால் வருமா? புத்தி சொல்லவும், கண்டிக்கவும் எல்லை இல்லையா? அவன் தலையில் எழுதினபடி ஆகட்டுமே" என்று சொல்லிக் கொண்டே ஓடி வந்து குறுக்கே புகுந்து ராஜாவை மீட்ட அம்மாவின் முதுகில் கூட ஓர் அடி விழுந்து விட்டது.

* * *

மருந்துப் புட்டியுடன், கண்ணைப் பறிக்கும் வெய்யிலில் வந்த ஜானகிராமுக்கு வீட்டுக்குள் நுழைந்ததும், ஒரு கணம் ஒன்றுமே புலனாகவில்லை; ரேழியிலேயே நிதானித்தார் ஒரு நிமிஷம். ராஜா அமர்க்களமாக ஏதோ ராகத்தை முனகிக் கொண்டிருந்தான். அவன் உற்சாகத்தைப் பார்த்தால், நாற்பது நாட்களாகக் கடும் காய்ச்சலில் அடிபட்டவனாகவே இல்லை. மௌனமாகவே ராஜாவின் அருகே போய் நின்றார்.

கெஞ்சும் பார்வையுடன் கைகூப்பிய ராஜாவின் குரல், "இல்லேண்ணா இனிமேல் பாடமாட்டேண்ணா" என்று உருப்புரியாமல் கொழ கொழவென்று ஒலித்தது. நின்ற நிலையிலேயே குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினார் ஜானகிராம்.

"நீ பாடு! உன் இஷ்டம்போல் பாடு! நான் ஒன்றும் சொல்லவில்லை" என்று நாத் தழுதழுக்கக் கூறினார் அவர்.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் வென்றுவிட்ட சலவைப் பவுடர்!



விலை :
ரூ. 1/12 நயா பைசா
(பிரதேச வரிகள் தனி)

நீலநிற ஸர்ப் உங்கள் துணிகளின் வெள்ளைவெளேரென்ற சலவைக்கு

* கற்பனை செய்திருக்கவே மாட்டீர்கள் அற்புத சலவைப் பவுடரான ஸர்ப் போன்று மகத்தான வெண்மை அளிக்கும் பவுடர் ஒன்றை!
* பார்த்திருக்கமாட்டீர்கள் இதுபோன்று அற்புத நுரை கொழிக்கும் சாதனம் ஒன்றை! எத்தகைய நீரிலும் வெள்ளமெனக் கொழித்தெழும் நுரைவளம்!
* உணர்ந்திருக்க மாட்டீர்கள் சலவை இவ்வளவு எளிதென்று! சிரமமே கிடையாது; ஊறவிட்டுக் கசக்கி அலசினாலே காரியம் ஆயிற்று!
* அடைந்திருக்கவே மாட்டீர்கள் உங்கள் பணத்திற்கு இதுபோன்ற அற்புதமான ஈடு! உங்கள் குடும்பத்தின் சகல துணிகளின் சலவைக்கும் சாலச் சிறந்தது ஸர்ப்.

சலவை செய்துபாருங்கள்...

வெள்ளைவெளேரென்ற சலவைக்கு – ஸர்ப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

SU. 24-X29 TM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

